செப்டெம்பர் 06 – 12, 2004
September 06 - 12, 2004
24 பக்கங்கள்
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
வார மலர்



# போர் மூஸ்தீபும் சமாதான முன்னெடுப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக ஆளுநரைக் காப்பாற்றும் முயற்சியில் அ.தி.மு.க

கடந்த வாரம் இப் பத்தியில் குறிப்பிட்டது போன்று 356ஆவது சட்டத்தின் மூலம் ஆட்சி கலைக்கப்படும் ஆபத்து தமிழ்நாட்டின் அ.தி.மு.க அரசுக்கு மிகக் குறைவே.

இருப்பினும் சமீபகாலமாக தமிழக ஆளுநர் மீதான தி.மு.கவின் தாக்குதல்கள் அதிகரித்துவரும் நிலையில் ஆளுநர் பி.எஸ்.ராமமோகன் ராவ் மாற்றப்படலாம் என்ற ஊகங்கள் வலுவடைந்து வருகின்றன. இவர் பி.ஜே.பி அரசினால் நியமிக்கப்பட்டவர். இதனால் ஜெயலலிதா அரசுடன் நெருங்கிய நட்புக்கொண்டு செயற்பட்டு வருகிறார்.

356 ஆவது சட்ட மூலத்தைக் கொண்டு மாநில அரசு ஒன்றைக் கலைப்பதாயின் மாநில ஆளுநரின் பரிந்துரை அவசியம். ஆனால் அவ்வாறான பரிந்துரை இல்லாமலே ஆட்சிக்கலைப்பு இடம்பெற்ற சந்தர்ப்பங்களும் இல்லாமலில்லை. 1991இல் விடுதலைப்புலிகளை ஆதரிப்பதாகக் கூறி கருணாநிதி அரசு கலைக்கப்பட்ட போது ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா அதை எதிர்த்தார். ஆனால் பிரதமர் சந்திரசேகர் ராஜீவ் காந்தியின் உத்தரவுக்கிணங்க ஆட்சியைக் கலைத்தது குறிப்பிடத்தக்கது. பர்னாலா, அதற்கு முன் பதவி வகித்த. வி.பி.சிங் அரசினால் நியமிக்கப்பட்டவர் வி.பி.சிங் அரசில் தி.மு.க பங்காளிக்கட்சியாக இருந்தது கவனிக்கத் தக்கது.

ஆக ஆளுநரின் எதிர்ப்பு இருந்தாலும் ஆட்சியைக் கலைக்கலாம் என்றாலும் இன்றைய நிலையில் கடந்த வாரம் இப்பத்தியில் குறிப்பிட்டவாறே ஆட்சிக்கலைப்புக்கு பல முட்டுக்கட்டைகள் இருப்பதனால் - அவற்றில் பி.ஜே.பி-அ.தி.மு.க சார்பான ஆளுநரும் ஒரு முக்கிய முட்டக்கட்டையாக இருப்பதால் அதை அகற்ற தி.மு.க முயற்சிக்கிறதோ என்ற சந்தேகம் சமீப காலமாக எழுந்துள்ளது.

ஆகஸ்ட் 15சுதந்திர தின விழாவில் கொடி ஏற்றாமல் ஏதென்ஸ் ஒலிம்பிக்கைப் பார்க்கப்போனதாக ஆளுனரை தி.மு.க சாடியுள்ளது.

இவ்வாரம் அ.தி.மு.கவின் எம்.பிக்கள் ஜனாதிபதி கலாமைச் சந்தித்து ஆளுநர்களை அடிக்கடி மாற்றக்கூடாது, ஆளுநர்களின் பதவிக்காலத்தை அடிக்கடி மாற்றக்கூடாது, ஆளுநரின் பதவிக்காலத்தை குறித்த 4-5 ஆண்டுகளாக நிர்ணயிக்க வேண்டும்எனக்கோரியுள்ளதுஇந்தப்பின்னணியில் முக்கியத்துவம் பெறுகிறது.

தமிழக ஆளுநருக்காக வக்காலத்து வாங்கும் அ.தி.மு.கவின் முயற்சி இதுவென்பது தெளிவாகத் தெரிகிறது.

பி.ஜே.பி சார்பான ராம மோகன்ராவுடன் ஜெயலலிதாவுக்கு உள்ள நல்லுறவு தெரிந்ததே! 2002இல் பாத்திமா பீவி ஆளுநர் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டபோது ஜெயலலிதா-பி.ஜே.பி உறவு நன்றாக இல்லை. அப்போது பி.ஜே.பியின் மத்திய அரசில் தி.மு.க முக்கிய பங்காளி. பதவிக்கு வந்ததும் கருணாநிதியை கைது செய்து நடு இராத்திரியில் சிறையிட்டபோது ஆளுநர் வாளாவிருந்தார் எனக்கூறி பாத்திமா பீவி மத்திய பி.ஜே.பி அரசால் பதவி நீக்கப்பட்டார்.

உண்மையில் தி.மு.கவை திருப்திப் படுத்தவே அவ்வாறு செய்யப்பட்டது. ஏனெனில் ஊழல் வழக்கில் குற்றம் பதிவு செய்யப்பட்டதால் ஜெயலலிதா 2002 சட்டப் பேரவை தேர்தலில் போட்டியிட தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. எனினும் காங்கிரஸ்-தமிழ் மாநில காங்கிரஸுடன் கூட்டணி வைத்த அ.தி.மு.க தேர்தலில் அமோக வெற்றி பெற்றது.

இந்திய சட்டப்படி முதல்வராகவோ, பிரதமராகவோ வருவதற்கு எம்.பியாவோ, சட்டமன்ற உறுப்பினராகவோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை. முதல்வர் அல்லது பிரதமர் அல்லது அமைச்சர் பதவியை ஏற்ற பின் 6 மாதத்தில் தேர்தலில் போட்டியிட்டு வென்றால் போதுமானது.

இவ்வாறு அ.தி.மு.க வென்றதும் அக்கட்சியினர் தமது முதல்வராக ஜெயலலிதாவை தேர்ந்து எடுத்தனர். அவர் சட்டமன்ற உறுப்பினராக இராத போதும் முதல்வராக பாத்திமா பீவியால் பதவிப்பிரமாணம் செய்த


ஜெயலலிதா

வைக்கப்பட்டார். இதுதான் பாத்திமா பீவிமீது தி.மு.க. ஆத்திரமடைய காரணம்.

ஆனால், பாத்திமா பீவியோ அவரது பார்வையில் சரியானதையே செய்தார். ஏனெனில் ஜெயலலிதா அக்காலத்தில் காங்கிரஸ் தலைமையிலான மதச்சார்பற்ற அணியில் இருந்தார். பாத்திமா பீவி முன்னாள் உயர்நிதிமன்ற நீதிபதியாவார். அவர் தேவகவுடா அரசால் நியமிக்கப்பட்டவர். ஆக பி.ஜே.பியின் மதவெறியை எதிர்க்கும் முஸ்லிம் ஆளுநரே பாத்திமா பீவி. எனவே அவர் பி.ஜே.பிக்கு எதிராக அந்நேரம் இருந்த ஜெயலலிதாவுக்கு ஆதரவாக தீர்மானம் எடுக்கும்படி தேவகவுடா, காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள் யாவரும் வலியுறுத்தினர். தி.மு.கவோ அந்நேரம் பி.ஜே.பியின் பங்காளி. பதவிக்கு வந்ததும் ஜெயலலிதா முன்னர் தான்கைது செய்யப்பட்ட ஆத்திரத்தில் கருணாநிதியை கைதுசெய்து தரதர வென்று வீதியில் இழுத்துச் சென்றார். இது காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிளுக்கே காணச்சகிக்காத கொடுமையாக இருந்தது. இதுதான் தருணம் என்று பாத்திமா பீவி பதவி நீக்கப்பட்டார். பாத்திமா பீவிக்கு நன்றிகடன்பட்ட ஜெயலலிதா வழமைபோல் நன்றிமறந்து வாயை மூடிக்கொண்டு தன்பாட்டில் இருந்து விட்டார்.

அதை தொடர்ந்து ராமமோகன்ராவ் அளுநராக பி.ஜே.பியால் நியமிக்கப்பட்டார். பின்னர் ஜெயலலிதா பி.ஜே.பி.பக்கம் மெதுமெதுவாக சாயத் தொடங்கியதும் தி.மு.க. காங்கிரஸ் அணியில் சேர்ந்து கொண்டதும் பழையகதை. இவ்வாறு ஜெயலலிதா-ராமமோகன்ராவ் நல்லுறவு தொடங்கியது.

ஜெயலலிதா தமது முன்னைய பதவிக்காலத்தில் (1991- 1996) மத்திய காங்கிரஸ் அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டியுடன் கடுமையாக மோதினாலும் இந்தப்பதவிக்காலத்தில் என்னவோ ஆளுநர்களுடன் நன்கு ஒட்டி உறவாடி வருகிறார். சென்னா ரெட்டி - ஜெயலலிதா மோதலால் தமிழக அரசு இயந்திரமே ஸ்தம்பிக்கும் நிலைகூட வந்தது. கடைசியில் டாக்டர் சென்ன ரெட்டி மாரடைப்பு வந்து இறந்தே போனார்.

தமிழக ஆளுநர்களுடன், பதவியில் இருந்த தமிழக அரசுகள் நல்லுறவை பேணியதற்கு எல்லாவற்றை விடவும் சிறந்த உதாரணம் எம்.ஜி.ஆர்-எஸ்.எல்.குரானா நட்பாகும். உயிரும் உடலும் போல் வாழ்ந்த எம்.ஜி.ஆர். - குரானா உறவு எம்.ஜி.ஆர் மறைவுடன் முடிந்தது.

ஜானகி, ஜெயலலிதா அணிகளாக அ.தி.மு.க உடைய முதல்வராக குரானாவால் நியமிக்கப்பட்ட ஜானகியை ராஜீவ் ஆதரிக்காததால் குரானா விரக்தியுற்று வெளியேறியதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் சமீபத்திய லோக்சபா தேர்தலில் வெற்றிபெற்ற பின்பு காங்கிரஸ் தலைமையினை மத்திய அரசு பி.ஜே.பி. காலத்தில் நியமிக்கப்பட்ட நான்கு மாநில ஆளுநர்களை நீக்கியது. தமிழகத்தில் அவ்வாறு செய்யப்படவில்லை. இப்போது தமிழக ஆளுநரையும் நீக்க தி.மு.க வற்புறுத்துவதாகத் தெரிகிறது. ஆட்சிக்கலைப்புக்கு முன்னோடியோ இது என்ற சந்தேகமும் முளைவிட்டது.

ஜெயலலிதா மிரண்டுபோய் ஆளுநர்களை மாற்றக்கூடாது என்று ஜனாதிபதியிடம் மனுச் செய்துள்ளார். தமிழக ஆளுநர் பதவி இழப்பாரா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

-எஸ்.சுரேந்திரஜித்-

## வாசகர் இதயம் பேசுகிறது

***யோ.தாரணி, ஆனைவிழுந்தான்.***

அன்பான பல கோடி வந்தனங்கள், ஒளியே உன் மேனியில் தாங்கி வரும் ஒவ்வொரு அங்கங்களும் தரமானவை. அதிலும் என்னைக்கவர்ந்தவைகள் அரசியல் அம்பலம், பெண், பித்தன் பதில்கள், கவிதைப் புனல் எனபன. ஒளியே! எனது கவிதையை போன முறை பிரசுரித்திருந்தாய். மிக்க மகிழ்ச்சியுடன் நன்றிகள். ஒளியே! உனது சேவை எட்டுத் திக்கும் பகலவன் போல் சுடர் விட்டுப் பிரகாசிக்க மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறேன். உன் பணி நிலைக்க.

நன்றி.

***ஆனந்தன், வத்தளை.***

சுடர் ஒளி வாரமலர் பிரசவித்த நாள் முதல் பார்த்தும் படித்தும் வரும் வாசகர்களில் நானும் ஒருவன். பல ஆண்டுகளில் மாற்றங்கள் சில காணக்கூடியதாய் இருந்தது.

ஆனாலும் இத்தனை ஆண்டுகள் தொடர் கதை ஒன்றை தொடாமல் இருப்பது ஏன் என்றுதான் தெரியவில்லை.

கவிதைப் புனலில் புதுக் கவிதைகள் மாத்திரமே பூத்துக் குலுங்குகின்றன.

மரபுக் கவிதைகளையும் சேர்த்துக் கொண்டால் சிறப்பாய் இருக்கும் என்பது என் அவா.

நன்றி.

***ரீ.ஆஞ்சலோ, கல்முனை.***

நான் நேசிக்கும் சுடர் ஒளிக்கு எனது வாழ்த்துக்கள். திங்கள் தோறும் என் கரம் வந்து அஞ்சலாகி நீ தரும் பல்சுவை விருந்து அத்தனையும் மறுவாரம் வரை என்னை திருப்திப்படுத்துகின்றன.

நீ மென்மேலும் வளர்ச்சி பெற்று வெற்றியுடன் தொடர்ந்து வாழ என் வாழ்த்துக்கள். வாழ்க சுடர் ஒளி உன்பணி.

***வின்சன், கொழும்பு.***

சுடர் ஒளி தாங்கி வருகின்ற அத்தனை அம்சங்களும் சூப்பர். நீ என் கரம்வந்து அஞ்சலாகும் வரை உன் வருகைக்காய் காத்திருப்பேன். சுடர் ஒளியே தொடர்ந்தும் சுவாரசியமான விடயங்களை நீ தாங்கி வரவேண்டும். உன் வரவை ஆவலோடு எதிர் பார்க்கின்றேன்.

***பிரசாத், வத்தளை.***

சுடர் ஒளி ஆசிரியர் அவர்கட்கு; வாராந்தம் வலம் வந்து எங்களை மகிழ்விக்கும் சுடர் ஒளி தாங்கி வருகின்ற அத்தனை அம்சங்களும் சிறப்பு. கவிதைப்புனல், சிறுகதை, பித்தன் பதில், கட்டுரைகள், நெட்குறும்பு அத்தனையும் அசத்தலானவை.

தொடர்ந்தும் இது போன்று வெளிவர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

***கவிதாஞ்சலி, யாழ்ப்பாணம்.***

சுடர் ஒளிக்கு எனது இதயம் கனிந்த வந்தனங்கள். உன் பணி எங்களை வாராந்தம் மகிழ்விக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. சுடர் ஒளியே; எத்தனையோ பத்திரிகைகள் தோன்றி மறையும் இந்நாட்களில் நீ தொடர்ந்தும் நிலைத்து நின்று தரும் பல்சுவை விருந்து சிறப்பானது.

உன்பணி தொடர என் வாழ்த்துக்கள்.

***வினோதினி, மட்டக்களப்பு.***

அன்பான சுடர் ஒளிக்கு; உனக்கு என் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். நீ தருகின்ற கவிதை, கட்டுரை, சிறுகதை, பித்தன் பதில் அத்தனையும் அசத்தலானவை. திங்கள் தோறும் உன் வரவை ஆவலோடு எதிர் பார்க்கின்றேன். உன் வரவைக் காணாமல் என் காரியங்கள் நடைபெறுவே மாட்டாது.

தவறாமல் என் கரம் வந்து விடு. உன்னை ஆவலோடு எதிர்பார்ப்பேன்.


பேக்கரி உபகரணங்கள்
புதிய காட்சியறை மூலம் விலை குறைக்கப்பட்டுள்ளது
பேக்கரி உரிமையாளர்களே...,
உணவு விடுதி உரிமையாளர்களே...,
தின்பண்டங்கள் தயாரிப்பாளர்களே
கேட்டரிங் மற்றும் பேக்கரி
ஆரம்பிக்கவுள்ளவர்களே.....
25 வருட உன்னத சேவை



நாடு முழுவதும் குறைந்த விலையில் கூடிய இலாபத்தை பெற்றுத்தரக்கூடிய பேக்கரி உபகரணங்கள்
* கேக், பணிஸ் மற்றும் பாண் கலவை இயந்திரம்
* காஸ் அவன்
* உழுந்து அரைக்கும் இயந்திரம்
* முறுக்கு, நொறுக்குத் தீனி, பிரல், பிஸ்கட் மா கலவை இயந்திரம்
* அனைத்து பேக்கரி உபகரணங்கள்

கையிலிருக்கும் பணத்தைக் கொண்டு பல்வேறுபட்ட விலைகளில் இயந்திரங்களைத் தெரிவு செய்யத்தக்க வசதிகள். எல்.பி.காஸ் மற்றும் வீட்டு மின்சாரத்தில் இயங்கக்கூடிய திறன். பேக்கரி தொடர்பான சகலவித ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்தல்

பிரதான விநியோகஸ்தர்
ரஞ்சித் இண்டஸ்ரீஸ்
385/1, (புதிய கண்டி வீதி), கடுவல வீதி, மாலபே.
தொ.பே: 011 4406865, 4408640. பக்ஸ்: 4406865
கிளை: 1425, கோட்டை வீதி, ராஜகிரிய,(HNB க்கு அருகாமையில்)
தொ.பே: 011 2865103, 4405599, பக்ஸ்: 4405599


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

### கா(த)லனா?

உயிரில் பூப்பறிக்கும்
என்னவனே – என்
உள்ளம் தேடும் – ஒரு
நினைவலையே
இரவில் மிதந்து வரும்
மெல்லிசையே – என்
இளமை நனையவரும்
பூ மழையே!
குளிரும் மார்கழியின்
கம்பளியே – எனக்கு
உறக்கம் தந்துவிட்ட
தலையணையே – என்
தூக்கம் கலைத்துவிட்ட
கனவலையே!
என் உயிரை எடுக்க
வந்த கா(த)லனே!
இது வரை நான்
உன்னை மறக்கவில்லை.
இத்தனை செய்தும்
வெறுக்கவில்லை!
நீ என் காதலன் என்பதால்

*சங்கீதா மகேந்திரன்,*
*யாழ்ப்பாணம்.*

### அந்தி வானம்

கார்மேகக் கண்ணனைக் கண்டு
மதிமங்கையவள் வெட்கிச்
சிவக்கின்றாள்.

### கவிதை

கண்கள் ரசித்தவற்றை
எழுத்துக்கள் ருசிப்பது

### கடிதம்

தொலைந்த என் உறவுகளை
நோக்கி நான் வரைந்த
எழுத்தோவியம்

### கனவு

இரவுநேர காட்சியரங்கில்
இருவிழிகள் காணும்
இரகசிய படவிழா

*ஜெபிக்கா, நல்லூர்*

### சுயசரிதை

எத்தகைய
அந்திியிலேனும்
என் பறவைகளை
விசாரித்துப்பார்...,
குழந்தையிலேயே
தோற்றுப்போன
குதூகலம் பற்றி
வகை வகையாய்க்
கதை கூறும் என்வாழ்க்கை..!

ஒப்பாரியில்
சோறுசமைத்து
ஆறுதலில்லாமல்,
அடுப்பு மூட்டி..
இன்னும்
வெளியே சிரித்துக் கொண்டு
உள்ளே அழுதபடி...!

திருப்பங்களைத்
தேடியலைகிறேன்
திடீரென்று
அறிவிக்கப்படுகிறது
தலைவிதியின் மண் சரிவு...

காயங்களைச்
சுவைத்துப் பழகிய
அடிநாக்கில்
மகிழ்ச்சியைக்
கண்டுபிடிக்க
முடியவில்லை...
மத்தியான
வெய்யிலைப்போல்
இரவிலும் கூட
உச்சந்தலையில்
உஷ்ணமடிக்கிறது
வசதியில்லாத வாழ்க்கை...

இவற்றுக்கிடையே
எஞ்சியிருப்பது
மரணம் ஒன்றேதான்...

*வில்வெளிமுஸாதிக்.*

### அக்கரை பச்சை

அடுத்த வீட்டு அக்காவிற்கு
கல்யாணம்...
அயர்லாந்தில் மாப்பிள்ளை
அவசரத் தடல் புடல்
படித்தவள் அவள்...
பல்கலைக் கழகத்தில்
பட்டமும் பெற்றவள்
ஆனாலும்...
பறந்தாள் அயர்லாந்து
பத்து மாதம் வரையும்
பத்து நாட்களுக்கொருதடவை
பறந்து வரும் அவள் கடிதம்
சுகமாக...
சுமையாக...
இருப்பதாக... இப்போது
கடிதமும் இல்லை
அவள் வீட்டு
தொலைபேசி கூட
சிலையாகிப் போனது
விலையாகிப் போன அவள்
விம்முகிறாளாம்
வாங்கிய பொருள்
பழுது என்று...

*இளவேனில்.*

### காதலி(யி)ன் கோலம்

சிலநேரம் – உன்
பார்வையில் – நான்
ஜனனமாகின்றேன்...!

சில வேளை – உன்
மௌனத்தால் – நான்
மரணமாகின்றேன்...!

சிலவேளை – உன்
வார்த்தையால் – என்னை
குளிர வைக்கும் – நீ...!

சில நேரம் – உன்
கோபத்தால் – ஏன்
என்னை
எரிய வைக்கின்றாய்...!

*தமிழாம்பிகை எஸ்.ஜெகன்,*
*நானாட்டான்.*

### எனது அனுபவம்!

துடிப்பான இளமையில்
துயரத்தை விரும்பியவன்
துவழ்கின்றான் விபரீதத்தில்
விபரீதம் கேட்டே வேண்டியவன்...
பாவம்... காதல்...!
கனவுகள் கலந்த வாழ்வில்
காவேரியாக பாயும் காதல்
உண்மை...! காதல் மட்டும்
இளமையின் துடிப்பை...
இதமாக புரிவதும் காதல்.
இளமைக்கு வறுமையை
தேடிக் கொடுத்தவள்!
பெண்ணே...? நீ அல்ல
பெண்மைக்கு அடிபணியும்
புரியாத ஆண்களே...!
ஆணில் பழிசாற்றும் நானும்
அடிபணிந்து அனுபவப்பட்ட....
புரியாத ஆண் வர்க்கமே...?

*என்.வசந்தன்,*
*முள்ளியவளை.*

### உறுதியான உள்ளம்

வாழ்க்கை
போர்க்களம்; அதை
வாழ்ந்து நான்
பார்க்கணும்
தோல்விகள் நிரந்தரமல்ல
அவை
வெற்றியின்
சமிக்ஞைகள்
சவால்கள்
சோதனைகள் அல்ல
அவை
சாதனைகளின்
உசாத்துணைகள்
துன்பங்கள்
சொந்த மல்ல
அவை
இன்பங்களின்
எதிரொலிகள்
பரீட்சைகள்
பயங்கர மல்ல;
அவை
மகிமையின் கிரீடங்கள்
தடைகள்
தடுப்புச் சுவர்கள் அல்ல
அவை
வெற்றியின் சிகரங்கள்
வறுமை வருத்தமல்ல
அவை
வளமான வாழ்வின்
வழி காட்டிகள்
வருவது அத்தனையும்
அடுத்தடுத்து வரட்டும்
உள்ளத்தில்
உறுதி உண்டு
எதிர் கொண்டு
வழ்வதற்கு!

*பாபு, கல்முனை.*

### எழுத முன்பே மறந்த கவிதை

ஏதேனும் ஒன்றையாவது
சேமித்து வைக்கத்தான்
எத்தனிக்கின்றேன்
என்ன செய்ய
எல்லாமே
செலவழிந்து போகிறது
இந்த
நாணயங்களை போல
உறவுகள் ஏதும்
வேண்டாம் என
என் உள்ளத்தை
நானேவெறுமையாக்கி
கொண்டாலும்
இருட்டை ஊடுருவும்
கதிர் போல
உன் அன்பு
என் உணர்ச்சிகளை
உணரச் செய்தது நண்பனே!
ஆனாலும் தோழா
உன் கல்யாண நாளின்
பரிசாக
எம் நட்பின் ஞாபகங்களை கூட
உன் மனைவிக்கு
வரமாக கொடுத்த போது
பழையபடி என் உணர்ச்சிகளையும்
மறந்து போனேன்.

*சசிகலா ராஜ்குமார்,*
*திருகோணமலை.*

### காத்திருப்பு

ஒரு நிறைமாத
பிரசவப் பெண்ணின்
காத்திருப்பாய்
உன் வரவிற்கான
என் காத்திருப்பு....
தூரத்துமுகங்களில்
உன்முகம் காட்டும்
மணித்துளிகள்!
காச்சிய இரும்பாய்
கடக்கையில் சுடுகிறது!
தாமதிப்பின்
தவிப்புக்களால் என்னை
சாகடித்தது போதும்
வான நம்பிக்கைகள்
வளையலாய் உடையுமுன்
வந்துவிடு அன்பே!

*கு.தவசீலன்,*
*விசுவமடு.*

### பௌர்ணமியும் அழகில்லை

மையழகி மாவிழி
நெஞ்சருகில் நீயினி!
வெய்யவனும் வேர்க்கவில்லை
வேஷமில்லை வாசகி!

உள்ளிருக்கும் காதலில்
ஊசலில்லை பாரடி!
ஊர்மலர்ந்த போதிலே
உலவலாம் வா இனி!

கள்ளம் இன்றி காதலை
வண்டு சொன்ன போதிலே!
சொல்லவில்லை வார்த்தைகள்
நாணிக்குனியும் பூக்களே!

பாரழகி பாவையே
பாதை வரும் நாளையே!
பதி என் பக்கமிரு
பௌர்ணமியும் பாவமே!

*பி.என்.பாலா,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

### கவிதை

உன்னோடு இருக்கும்
பொழுதுகளில்
நான் கவிதை
எழுதுவதில்லை!
கவிதையோடு
இருக்கும்போது
கவிதை எதற்கு?

*எஸ்.வசந்தி,*
*வட்டக்கச்சி.*

### நிமிர்ந்து...

ஓ... நீங்களோ!
தீர்ப்புக்களை மாற்றி
எழுதாதீர்கள் – இது
காலத்தின் தீர்ப்பு
காளதிகள் சுமந்த
வரலாற்றின் காயங்களின்
ஆற்றுகைகள்.
நானும்... நீயுமான
இருவருக்குமான பிரச்சினையல்ல
ஒரு இனத்திற்கான
வாழ்தலுக்கானது
தீர்ப்புக்கள் திருத்தப்படுவது
ஆராயப்படுவது என்பதெல்லாம்
அசிங்கமானவைகள்.
வரலாற்றின் அபசகுணங்களின்
அலறல்கள்.
திருத்தப்பட வேண்டியவைகள் எல்லாம்
நீயும்... உன் மனச் சாட்சிகளும்
நாளைய வரலாற்று புத்தகத்தின்
வரிகளுக்குள் அவமானமாய்
வாழ்வதை மாற்றிக் கொள் – இது
காலத்தின் தீர்ப்பு
மானத்தின் நிமிர்வு

*க.முகிலா, பளை.*

### இது போதும்

இது
சோகங்களை
சுமந்து
விரக்திகளை
விழுங்கி
வாழ்ந்த பூமி

நித்தம் பலிகளுக்கு
புடம் போட்டு
புதுமைகள் சமைத்த
விந்தைகள் கோடி


வாசலில்
முழங்கும் வேளை
உயிரை நெஞ்சில்
ஏந்தி
உயிர் வாழ்ந்த
வித்தியாசப் பிறவிகள்
வாழ்ந்த பூமி

சரித்திரச்
சுவட்டில்
வெற்றியாய்ப்
பதிந்து
வீரம் பேச
இது போதும்
எமக்கு

*தர்ஷனா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொபேர்ட் கென்னடி மீண்டும் வருகிறார்!




அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோன் கென்னடியின் தம்பி ரொபேர்ட் கென்னடி ஏழை மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். அவருடைய சேவையைப் பாராட்டும் விதத்தில் தயாரிக்கப்படும் திரைப்படத்தில் கென்டக்கி வழக்கறிஞர் ஜோன். பெனஸட் (நடுவில்) ரொபேர்ட் கென்னடியாகத் தோன்றி நடிக்கையில் பிடிக்கப்பட்டபடம்.

# தங்கப்பதக்கம் தேடித்தந்த வினை!

நடைபாதையில் இவர்கள் இருவரும் எதற்காக மோத வேண்டும்? உண்மையில் இவர்கள் இருவரும் மோதவில்லை. மகிழ்ச்சியினால் ஆரத் தழுவிக் கொள்கிறார்கள். ஒலிம்பிக் போட்டிகளில் தண்ணீரில் நடைபெற்ற போலோ விளையாட்டில் தங்கப்பதக்கம் ஹங்கேரிக்குக் கிடைத்தது. விளையாட்டு வீரர் ஒருவர் வெற்றியைக் கொண்டாட தமது பயிற்சியாளரைக் கட்டித் தழுவியபடி நீச்சல் தடாகத்தில் வீழ்ந்த காட்சி இது.

மசாலா மிக்ஸ்




# வர்ண "ரிப்பன்" துணியின் எண்ணச் சிதறல்கள்!



வர்ண ரிப்பன் துணியைச் சுற்றியபடியே இந்த அழகி கூறும் செய்திதான் என்ன? பல்கேரியாவைச் சேர்ந்த இந்த அழகி பாரிஸில் நடைபெற்ற அழகுக் கண்காட்சி ஒன்றில் வர்ண ரிப்பன் துணியை நீண்ட நேரம் சுற்றிச் சுழல வைத்து ரசிகர்களைக் கவர்ந்தார்.

# தக்காளிச் சேற்றில் குதூகலக் குளியல்!



தக்காளியை உணவாகக் கொள்வதில் அனைத்து நாட்டினருக்கும் ஆர்வம் இருக்கிறது. நேரடி உணவாக மாத்திர மன்றி குளிர்பானம், ஊறுகாய் கறிவகையாகவும் தக்காளி உட்கொள்ளப்படுகிறது. ஸ்பெயின் நாட்டில் தக்காளி அறுவடை செய்யப்படும் காலத்தில் ஒருவர் மீது ஒருவர் தக்காளிப் பழங்களை வீசி எறிந்து விளையாடுவர். ஒரு மைதானத்தில் நடந்த போட்டியில் தக்காளிச் சேறு தரையில் நிறைந்து அந்தச் சேற்றில் குதூகலமாகக் குளித்து மகிழ்கிறார்கள் போட்டியாளர்கள்.

# உலக வர்த்தக மையம் புதைந்து போன இடம்



நியூயோர்க் நகரில் தலைநிமிர்ந்து நின்ற உலக வர்த்தக மையம் தரை மட்டமாக்கப்பட்டு மூன்று வருடங்கள் கழிக்கின்றன. அருகிலுள்ள அழிந்து போகாத ஒரு கட்டடத்திலிருந்து இந்தச் சிறுவன் உலக வர்த்தக மையத்தின் எஞ்சியுள்ள தரைப்பகுதியை அவதானிக்கும் காட்சி இது. இந்தப் பகுதி அரசியல் தலையீடுகள் ஏதும் இன்றி ஒதுக்கப்பட்ட ஒரு பகுதியாக இன்று பேணப்படுகிறது.

# ஒளிந்திருக்கும் முகம் எது?



ஆகஸ்ட் 23, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் இசை அமைப்பாளர் தேவா. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

*1. மு.கவிதா, ஹட்டன். 2. நி.சிவகுமார், 30/5 பாக் வீதி, கொழும்பு –6. 3. ச.சுதன், .145, கண்டி வீதி, புத்தளம்.4 சி.சகிலாதேவி, மடத்தடி வீதி, சாவகச்சேரி. 5.ஏ.கலிஸ், பருத்தித்துறை வீதி, அச்செழு.*

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த முகம் யாருடையது?

இவர் ஒரு கலைக்குடும்ப வாரிசாவார். இவர் தற்போது ஒரு படத்தில் நடித்தும் உள்ளார்.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத்தபால் அட்டையில் செப்டெம்பர் 19 ஆம் திகதிக்கு முன்னர் எழுதி கீழ்வரும் எங்கள் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு சனமா? பட்டுச்சேலைகளில் உள்ள சருகைகள் கண்சிமிட்ட, பட்டுவேஷ்டிகள் பளபளக்க, ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டத்துக்கு குதூகலித்துக் கொண்டிருந்தார்கள். வாசலிலே இரண்டு வாழைமரம் காதல் சின்னமாக பழுத்த கதலி குலையுடன் தொங்கிக் கொண்டிருந்தது. இராப்பொழுது மங்கி விடியல்பொழுது விழித்துக்கொண்டது.

மணவறைக்குத் தயாராகிக் கொண்டிருந்தாள் ஆஷா. அக்கம், பக்கம் இருந்த பெண்களின் நக்கல் ஆஷாவை வெட்கத்தில் திணற வைத்தது.

''சீ போங்கடி. சும்மா எல்லோரும் என்னை கிண்டலடிக்கிறீர்கள். எனக்கு கல்யாணம் முடியட்டும். அப்புறம் உங்களைக் கவனிக்கிறேன்.'' எனச் செல்லமாகச் சிணுங்கினாள் ஆஷா.

''ஏய் ஆஷா! முதல் மணவறைச் சாறி உன்ரை சுரேஸ் கண்ணுக்குள் குத்தப் போகுது. தாலிகட்ட முதல் தூக்கிட்டு போறாரோ தெரியாது.'' என்ற நக்கலுடன் சொக்கையைக் கிள்ளினாள் சேடிப்பெண்.

''ஆஷா சீக்கிரமா தயாராகு'' என்ற ஆஷாவின் தாயின் குரல் கேட்டு சீக்கிரமாக தயாராகினார்கள். ஆஷா, பெண்கள் அழைத்து வர அன்ன நடை நடந்து மணவறைக்கு நடந்தாள். கூட்டத்தில் உள்ளவர்கள் ''ஆஷா சுப்பராக இருக்கிறாள்'' என திருஷ்டி போட்டுக் கொண்டார்கள். இவர்கள் இப்படியென்றால், சுரேஸ் எப்படி மயங்கப் போகிறான்.

ஆஷாவைக் கண்ட சுரேஸ் ஆனந்தத்தில் திளைத்து மனத்துக்குள் ''அடி ஆஷா, நாம் காதலிக்கேக்கை எவ்வளவு குறும்பு பண்ணி துள்ளிக் குதிப்பாயடி, இப்ப அன்ன நடை நடந்தா வாற'' என்று ஆஷாவைப் பார்த்து கண்ணடித்துச் சிரித்தான் சுரேஸ்.

சுரேஸ்க்கு பக்கத்தில் போய் அமர்ந்து கொண்டாள் ஆஷா. சிவனையும், பார்வதியையும் கண்டதைப்போல் கூட்டத்தினர் பார்க்க, அவர்களின் பார்வையைத் திசை திருப்ப ஐயர் மந்திரத்தை முணுமுணுக்க, அது காற்றோடு பறந்து காதுகளை எட்டிச் சென்றது.

கூறைகள் மாற்றி, குங்குமம் நெற்றியிலே தரித்து, தாலி கழுத்திலே ஏற வானைப்பிளக்கும் மங்கள வாத்தியங்களும், அவற்றுடன் மந்திர ஒலியும் இசை சேர ஆஷா தலை குனிந்து கொண்டாள். உறவினர்கள் வந்து போக இராப்பொழுதை அண்மித்து சுரேஸ்சும், தூக்கத்திற்குப் போனார்கள். ஆதாம், ஏவாள் காதல் இந்த உலகக் காதலையே உண்டு பண்ணிச்சு. அந்த ஆதாம், ஏவாள் காதலை தம் காதலுக்கு ஒப்பிட்டு கதைத்து மகிழ்ந்தார்கள்.

சந்தோஷம் வந்தால் சிரிக்கிறோம். துன்பம் வந்தால் அழுகிறோம். ஆம்.... காமம் வந்தால் கட்டியணைக்கவேணும் என எட்டிப்பிடித்தவனை ஆஷா கைகளைத் தட்டி விட்டாள். தட்டிய கைகள் கட்டில் சட்டத்தில் பட்டவுடன் ஆஷா விழித்துக் கொண்டாள்.

''அடக் கடவுளே! சுரேஸ் உங்களை விட்டுட்டு எத்தனை நாளாய் நான் கனவுகளோடை கலந்து போறது. சுரேஸ்! என்ர சுரேஸ்! என் உயிரானவனே! உன்னோடு வாழ்ந்த நாட்களையும், வாழப்போகிற நாட்களையும் எண்ணி எத்தனை கனவுகள். அது இன்றைக்கு எங்களுடைய முதலிரவில் முட்டி, என் கை தட்டிய படியால் தான் விழித்துக் கொண்டேன்'' எனக் கண் கலங்கியவாறு படுக்கையை விட்டெழுந்தாள் ஆஷா.

ஆஷாவின் நெஞ்சுக்குள் ஆழமாக பாய்ந்த கற்பனை என்னும் வில்லு, நினைவு என்னும் அம்பை புண்பட்ட நெஞ்சிலே பாய்ச்சி சென்றது.

ஆஷாவும், சுரேஸ்சும் பாடசாலைக் காதலர்கள். ஒரு வருடங்களின் பின் இரு வீட்டாரின் அனுமதியுடன் பதிவுத் திருமணம் நடந்தேறியது. ஆஷாவின் படிப்பு முடியத்தான் அவர்களுக்கு கலியாண வீடு செய்வதாக வீட்டுக்காரர்கள் தீர்மானித்திருந்தார்கள்.

எடுத்த அடிவைக்காமல் இருக்கும் தாத்தா, அடுப்படி மறந்து பிச்சை எடுக்கும் குடும்பம், மகளிர் சமர்ப்பித்து மனிதத்தையே மறந்திருக்கும் காணாமல் போனவர்களில் உறவுகள், இத்தனை விளைவுகளையும் ஏற்படுத்திய தொண்ணூற்றைந்தாம் ஆண்டுப்போர் தொடங்கியது. சுரேசின் குடும்பம் ஆஷாவின் குடும்பத்துடன் சுரேஸை விட்டுட்டு வன்னி புறப்பட்டு விட்டார்கள்.

சுமுகமான நிலையால் மக்கள் தத்தம் வீடுகளுக்குத் திரும்பினாலும் அவர்களுடன் சுதந்திரம் திரும்பவில்லை. அப்படித்தான் அன்று ஏதோ அலுவலாக சாவகச்சேரி போக சுரேஸ் புறப்பட்டான்.

''ஆஷா.... என்ர ஐ.சியை எடுத்து வாரும்.'' என ஆஷவை அழைத்தான் சுரேஸ். ''இந்தாங்கோ.... கவனமாகப் போட்டு வாங்கோ. ஒரே பிரச்சினையாம், பொழுது சாயமுதல் சாவச்சேரியால் வெளிக்கிட்டு வந்திடுங்கோ'' என்றவாறு சுரேஸை வழியனுப்பி வைத்தாள் ஆஷா.

நேரம் செக்கனாகி, நிமிடத்துடன் கைகூடி, மணித்தியாலத்தை பிரசவித்து, மதியத்தை தாண்டியது. ஆஷா சுரேஸுக்காக காத்திருந்தாள் ''அடி பிள்ளை! சுரேஸ் போனவர் வருவார் தானே, நீவந்துசாப்பிடு பிள்ளை'' என ஆஷாவை அழைத்தாள் அம்மா.




# அனல் தேடும் கரை

''அம்மா எங்களுடைய பண்பாடு இவ்வாறு தலைவிரித்தாடுகிறதை கண்டுட்டு, நீங்க எல்லாப் பெண்களையும் எடைபோட்டுடாதேங்கோ. நான் சுரேஸ் வந்தவுடன் தான் சாப்பிடுவன். உங்களுக்குப் பசியென்றால் போய்ச் சாப்பிடுங்கோ'' என தாயுடன் கோபமாக பேசிவிட்டு, சரேஸ் வருகைக்காகக் காத்திருந்தாள் ஆஷா.

விதியாரைத்தான் வாழவைத்தது. அதன் படி நாங்கள் போய்க் கொண்டிருக்க வேண்டியதுதான். அப்படித்தான் இவர்கள் வாழ்விலும் விதி விளை யாடியது....

''அம்மா என்னம்மா ஒன்பது மணியாச்சு. சுரேஸ்ஸைக்காணவில்லை. என்ரசுரேஸ்க்கு என்ன நடந்தது'' என கதறி அழுதாள் ஆஷா. அவளது கதறலுக்கு கண்ணீர் தான் பரிசாக கை கொடுத்தது. ஆனால், எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. விடிந்ததும் எல்லா இடமும் அறிவித்தார்கள். அவர்கள் தங்கள் பங்குக்கு பதிவுகளைச் செய்து விட்டு கை விரித்து விட்டார்கள். ஆஷா திரியாத கோவிலுமில்லை. வைக்காத நேர்த்தியுமில்லை. தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தும், எந்தத் தரப்பும் இது பற்றிச் சிந்திக்கவில்லை. சிந்தித்தாலும் சிதறடிக்கப்பட்டு விட்டது.

அன்றும் அப்படித்தான் ஆஷா வீட்டு வேலைகளில் மூழ்கியிருந்தாள்.

''ஆஷா இஞ்சை வாம்மா'' என அம்மா அழைத்தாள்.

ஆஷா கையிலிருந்த வேலையை பாதியில் நிறுத்திவிட்டு அம்மாவிடம் வந்தாள்.

''உன்ரை மாமாவின்ரை பிள்ளைக்கு கலியாண வீடு. அதற்கு நான் போகமாட்டேன். நீ தான் சுமங்கலிப் பெண்ணு, நீதானம்மா போட்டு வா'' என்று சுறினாள் அம்மா மரகதம். ''இ..ல்..லையம்மா சுரேஸ்சும் இல்லாத நேரம் நான் எ..ப்படி'' என்று இழுத்த ஆஷாவை இடைமறித்தாள் அம்மா.

''நீ தயங்கிறது எனக்குத் தெரியும். என்ரை பிள்ளைக்கு கடவுள் குறை வைக்கேல்லை. சுரேஸுக்கு ஒன்றும் நடந்திராது. நாங்கள் எறும்புக்குக்கூடத் தீங்கு விளைவிக்க நினைத்ததில்லை. சுரேஸ் எங்க இருந்தாலும் உன்ர நினைப்போடு தான் இருப்பார். நீ ஒன்றுக்கும் பயப்பிடாம போட்டு வா பிள்ளை'' எனக் கூறிவிட்டு அடுப்படிக்குள் புகுந்துகொண்டாள் அம்மா.

அழகிய சாறி உடுத்தி, நெற்றியிலே திலகமிட்டு, தேவலோக தேவையே இறங்கி வந்தது போல கலியாணவீட்டுக்குச் சென்றாள். ஒவ்வொரு இடங்களிலும் கூட்டம் கூட்டமாக ஆண்களும், பெண்களும் குழுமியிருந்தார்கள். அவ்வாறான கூட்டத்தை ஆஷா தாண்டும் போது அவர்கள் கிசுகிசுப்பது ஆஷா காதுகளில் கேட்டது.

''அவன் பாவமடி. செத்தானோ, சாகவில்லையோ, எவ்வளவு கஸ்டப்படுகின்றானோ. ஆருக்கடி தெரியும். இவளின்ர முகத்தில் பாரு ஒருகவலை தெரிகிறதா என்று. அவளின்ரை பொட்டும், பட்டும்... இவள் அவனோடதான் இருந்தவள்'' என்று விளம்பி அலம்பினாள் கூட்டத்தில் ஒருத்தி. கூட்டத்தில் கேட்ட செய்தி ஆஷாவுக்கு ஈட்டி போல் பாய்ந்தது. அந்த இடத்தில் நிற்காமல் வீட்டை நோக்கி ஓடினாள் ஆஷா.

''என்ன பிள்ளை, என்ன நடந்தது'' என பின் தொடர்ந்தாள் அம்மா மரகதம்.

உள்ளே சென்றவள் வெள்ளைச் சாறியுடன் வெளியே வந்தாள். ''என்னடி பிள்ளை, என்னடி இந்தக் கோலம் இதையெல்லாம் பார்த்துக் கொண்டா நான் இருக்கிறன்'' என்று கதறி கதறி இருவரும் கத்தினார்கள். இப்படியே இவர்கள் வாழ்க்கை உருண்டோடியது.

அன்று ஒரு நாள் பாதைக்குள், ஒரு மோட்டார்சைக்கிள் வந்து நின்று பலமுறை கத்தி ஓய்ந்தது. ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த ஆஷா உடனே வாசலைப் பார்த்தாள்.

சு...ரே....ஸ் என்ர சு...ரே..ஸ் என்று ஆனந்தம் பொங்க வாசலை நோக்கி ஓடியவளை... ''என்ன அ...ண்ணி, இவ்வளவு நேரமும் கோன் அடிச்சு ஒருத்தரையும் காணவில்லை'' என்று வந்து சுரேஸ்சின் இரட்டையன், மற்றைய சகோதரன் ரமேஸின் குரல் தடுத்து நிறுத்தியது.

''அண்ணி! அண்ணாவின்ரை நெருங்கிய நண்பனின்ரை கலியாண வீடு. அவர் இப்ப வீட்டு வேலையில் இருப்பதால் நான் தான் சொல்லித் திரிகிறன். அண்ணாவுக்காக நீங்கள் கட்டாயம் வரவேணும். எனக்கு நிறைய வேலையிருக்கு'' என்ற வாறு பதிலுக்காகக் காத்திராமல் மோட்டார் சைக்கிளில் பறந்தான் ரமேஸ்.

''என்ன கடவுளே இது! அடுத்த சோதனையா, இந்தக் கலியாணத்துக்கு போகாவிட்டால் சுரேஸ் வீட்டுக்காரர் கோபப்படுவார்கள். நான் கட்டாயம் போய்த்தான் ஆகவேணும். ஆனால் போகும் போது முதல் நடந்த மாமாவின் வீட்டுக் கலியாணத்துக்கு வந்தவர்கள் கதைத்ததைப் போல இங்கேயும் கதைப்பதற்கு இடம் கொடுக்கக் கூடாது'' என மனதில் எண்ணிக் கொண்டு நகர்ந்தாள்.

கல்யாண வீட்டு நாளும் வந்தது. நேரத்துக்கு போய்த்தான் ஆகவும் வேணும் என்றவாறு வெளிக்கிட்டுப் போனாள். அங்கு சனம்திரளாக கூடியிருந்தது. பச்சை வர்ணக் கிளிகள் மத்தியிலே வெள்ளைப் புறாவொன்று நகர்ந்து கொண்டிருந்தது.

''சீ.. சீ.. சீ... இஞ்சாலை வா. உனக்கு என்னபுத்தி கெட்டா போச்சு. இப்ப கதைக்க நேரமில்லை'' என்றவாறு கையைப் பிடித்து இழுத்து போய் ஒரு இடத்தில் இருக்க வைத்தாள். கூட்டத்தில் ஒருத்தி, பக்கத்திலிருந்த கூட்டம் ஒரு முறை பார்த்து விட்டு பதுங்கி ஏதோ கதைக்கத் தொடங்கியது.

''பாவம் அந்தப் பெடியன். எங்க எப்படி கஸ்டப்படுதோ. அன்னம், தண்ணி இல்லாமல் எவ்வளவு வேதனைப்படுதோ. அவன் நல்லாய் இருக்க வேணும் என்று நேர்த்தி வைத்து, நெற்றியிலே குங்குமம் தரிக்காம, செத்திட்டான் என்று வெள்ளைக் கோடும், இவளவயள என்ன செய்ய வேணும்'' என பதுங்கிக் கதைத்து விட்டு நிமிர்ந்து பெருமூச்செறிந்தார்கள்.

பாவம் ஆஷா! விளையாடிய விதி அவளின் காதின் கூர்மையை குறைக்காம விட்டதால் இப்போது இந்தக் கவலை. வெள்ளைச் சாறி உடுக்கவில்லை. விதவைக் கோலம் பூணவில்லை என்று உலகம் கண்டபடி திட்டிச்சுது.

''ஆண்டாவா! நான் வெள்ளைச் சாறி கட்டாமை

இருக்கேக்கை ஏதோ சொன்ன சமூகம், வெள்ளைச் சாறி கட்டியவுடன் என்ன சொல்கிறது. பிளவுபட்ட சமுதாயத்தில் இதயம் இல்லாத மனிதர்களின் மனதில் சிக்கித் தவிப்பது நான் மட்டுமல்ல. தொண்ணூற்றைந்துகளில் தொலைந்து விட்ட உறவுகளை தேடித்திரியும் தாய், மனைவி, சகோதரிகள் அத்தனை பேருக்கும் இத்தனைப் பிரச்சினை. மறியல் போராட்டம், மகளிர் சமர்ப்பிப்பு. இவை எல்லாம் வலுவிழந்த வடிவம் தான் சமூகத்தின் மத்தியில் நடமாடுகிறது. புரிந்துணர்வின் பின்னரும் புரிந்து கொள்ள முடியாத வினாக்களுடன் விடை தேடிய படி... இன்றும்இவர்கள்.

(முற்றும்)

## அழிக்கப்படும் யானைகள்

ஆசைகள் அளவு கடக்கும் போது அது பேராசையாகி விடுகின்றது. இந்தப்பேராசை எப்பொழுதுமே பெருந் தரித்திரத்தைத் தான் தருகின்றது. இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்ற இவர்களது தீராத வேட்கை, மனித வாழ்வில் மாத்திரமல்ல, மிருகங்களின் வாழ்விலும் நாசத்தையே விளைவிக்கின்றது.

80களில் யானைகளின் அழிவு விகிதம் பெரிதாக இருந்துள்ளது. 1.3 மில்லியனாக இருந்த உலகின் காட்டு யானைகளின் தொகை 600,000 ஆக வீழ்ச்சி கண்டபோது உலகம் விழித்துக் கொண்டது. இந்த வேகத்தில் சென்று கொண்டிருந்தால் எவராலுமே யானைகள் அழிவதைத் தடுத்து நிறுத்த முடியாது என்ற உண்மை நி[illegible]கத் தெரிந்தது. எனவே அதிரடி நடவடிக்கையாக 1989 இல் தந்த விற்பனைக்குத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

கடந்த வருடம் சிங்கபூரில் பிடிபட்ட 6.4 தொன் எடையுள்ள தந்தந்தான் உலக சரித்திரத்தில் இப்படியொரு பெரிய தொகை அதிகாரிகளிடம் பிடிக்கப்பட்ட நிகழ்வாக இருந்துள்ளது.

ஆயிரக்கணக்கான தந்தத்திலான பொருட்கள் எவ்வித விற்பனை அனுமதிப்பத்திரமும் இல்லாமல் கடைகளில் விற்பனையாகி வருகின்றன. 1947 இல் யானைத் தந்தத்திலான பொருட்களைப் பகிரங்கமாக [illegible] தடை பிறப்பிக்கப்பட்டது. இந்தக் காலக்கெடுவின் பின்னர் எவராது தந்தத்திலான பொருட்கள் விற்கவேண்டுமாயின் விற்பனை அனுமதிப் பத்திரம் பெற வேண்டும். 1989 இல் யானைத் தந்த விற்பனைத் தடைச்சட்டம் அமுலுக்கு வந்துவிட்டாலும், அதைத் தொடர்ந்து 10 வருடங்கள் களவில் 27 தொன் எடையுடைய யானைத்தந்தம், உலகெங்கும் கைமாறிக் கொண்டிருந்ததைப் புள்ளிவிபரங்கள் வெளிப்படுத்துகின்றன. சீனாவிலும், ஹொங்ஹொங்கிலும் தான் மிக அதிக அளவான யானைத் தந்தங்கள் களவில் சந்தையை நிறைக்கின்றன. இந்த யானைத் தந்த வியாபாரத்தில் 150 நாடுகள் சம்பந்தப்பட்டுள்ளன என்கிறார்கள்.



பாவம் இந்த யானைகள் என்ன செய்யும்? மனிதனது பேராசை ஒழியாதிருக்கும் வரை இந்தக் குஞ்சரங்கள் அஞ்சி வாழும் நிர்ப்பந்தம் தொடரத்தான் போகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேகு 'துஆ'வில் சங்கமிப்பாரா?

தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ) செயலாளர் நாயகமும், ஊடகத்துறை பிரதி அமைச்சருமான சட்டத்தரணி எம்.எச். சேகு இஸ்ஸதீன் ஜனநாயக ஐக்கிய முன்னணி (துஆ) வில் இணைந்து, அதன் தலைவர் பதவியைப் பொறுப்பேற்கப் போகிறார் என்ற கதை கடந்த சில வருடங்களாக முஸ்லிம் அரசியல் அரங்கில் பேசப்பட்டுவருகின்றது.

ரன்முத்து ஷோட்டலில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மாநாட்டில் உரையாற்றியபோது, மேற்படி செய்தி குறித்து சேகு இஸ்ஸதின் கருத்துத் தெரிவிக்கையில், 'அதுவும் தனக்கொரு விளம்பரம் தான்' என்று கூறினாரே தவிர, தான் துஆவில் இணையப் போகிறார் என வெளிவந்த செய்தியை மறுக்கவில்லை.

அதே வேளை, நுஆ தலைவியும், அமைச்சருமான பேரியல் அஷ்ரப்புடன் சேகு இஸ்ஸதீன் முரண்பட்டு வருகிறார் என்ற கதையும் பரவி வருகின்றது. அதனால் சேகு இஸ்ஸதீன் துஆவில் இணைவார் என்ற செய்தியை முற்றாக நிராகரித்து விட முடியாதுள்ளது.

பொதுவாக சேகு இஸ்ஸதின்பற்றிய ஓர் அபிப்பிராயம் முஸ்லிம் சமூகத்தில் நீண்ட காலமாக நிலை கொண்டிருக்கிறது. அவர் ஒரே கட்சியில்நிரந்தரமாக இருப்புக் கொள்பவர் அல்லர். தான் அங்கம் வகிக்கும் கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்துபவர்- எந்தக்கட்சியில் இருந்தாலும் தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முனைப்புக் காட்டுபவர் என்பதே அந்த அபிப்பிராயமாகும்.

## முஸ்லிம் காங்கிரஸ்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்அரசியல் நடத்தத்தொடங்கியது முதல் இன்று நுஆ வரை சேகு இஸ்ஸதீன் மேற்கூறிய போக்கினையே கடைப்பிடித்து வருகிறார் எனக் கூறப்படுகிறது.

முஸ்லிம் காங்கிரஸின் ஆரம்ப காலத்தில் அக்கட்சியில் தவிசாளர் தவியை வகித்து வந்த சேகு இஸ்ஸதீன், தலைவர் மர்ஹூம் எம்.எம்.அஷ்ரப்புக்கு அடுத்த



தலைவராக முஸ்லிம்களால் மதிக்கப்பட்டார். அஷ்ரப் - தலைவர் என்றால், சேகு- தளபதி என்றே அப்போது கூறப்பட்டு வந்தது.

தனது அறிவு, ஆற்றல், அனுபவங்கள் அனைத்தையும் தலைவர் அஷ்ரப்புக்குப் பக்கபலமாக இருந்து கொண்டு முஸ்லிம் காங்கிரஸுக்காகவும், சமூகத்துக்காகவும் அர்ப்பணித்து வந்த ஒரு பெருமகனாகவே சேகு போற்றப்பட்டார்.


அதனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்கொண்ட முதலாவது பொதுத் தேர்தலில் (1989) அம்பாறை மாவட்டத்தில் தலைவர் அஷ்ரப்புக்கு அடுத்து இரண்டாவது கூடிய விருப்புவாக்குகளை அவர் பெற்றார்.

விகிதாசாரத் தேர்தல் முறையின் பிரகாரம் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸுக்கு ஒரே ஒரு ஆசனமே கிடைக்கப் பெற்றதால், சேகு இஸ்ஸதீன், எம்.பியாகத்தெரிவு செய்யப்படவில்லை.

அதையடுத்து 'அவரது அரசியல் அறிவு - சாணக்கியம் முஸ்லிம் சமூகத்துக்கு அவசியம் எனக் கருதிய தலைவர் அஷ்ரப், சேகு இஸ்ஸதீனை வடக்கு-கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஓர் உறுப்பினராக நியமித்து, மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் நியமனம் செய்தார். மாகாண சபை கலைக்கப்படும் வரை அவர் அப்பதவியை வகித்து வந்தார்.

## மு.கா.வில் சேகுக்கு கல்தா

எனினும், 1992ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் சேகு இஸ்ஸதீன், தலைவர் அஷ்ரப்புடன் முரண்படத் தொடங்கினார்.



முரண்பாடு உச்சக் கட்டத்தை அடைந்ததால், அவரை முஸ்லிம் காங்கிரஸிலிருந்து அஷ்ரப் வெளியேற்றினார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப், ஜனாதிபதி பிரேமதாஸாவை ஆதரிக்கும் நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வந்தார் என்பதாலேயே தான் அவருடன் முரண்பட ஆரம்பித்ததாக சேகு இஸ்ஸதீன் கூறி வந்த போதிலும் அஷ்ரப்-சேகு முரண்பாட்டுக்கு வேறு சில காரணங்களும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

தலைவர் அஷ்ரப்புக்கு முஸ்லிம் காங்கிரஸிலிருந்து கொண்டே சேகு இஸ்ஸதீன் குழி பறிக்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டிருந்தது.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்டதையடுத்து, அவருக்கு சமூகத்தில் இருந்து வந்த நல்லபிப்பிராயம், அந்தஸ்து எனபன பெருமளவு குறைந்தது எனக் கூறலாம். முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலக்கப்பட்ட முதல் முக்கியஸ்தராக சேகு இஸ்ஸதீன் கருதப்படுகிறார்.

## சிறிலங்கா முஸ்லிம் கட்சி

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலக்கப்பட்டதைத் தொடர்ந்து 'ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி' எனும் பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றை அவர் ஆரம்பித்தார்.

காலப்போக்கில் அக்கட்சிக்குள்ளும் குழப்பம் ஏற்பட்டது. முஸ்லிம் கட்சியின் ஏனைய தலைவர்களுடன் சேகு இஸ்ஸதீன் முரண்படத் தொடங்கினார்.

அதனால்அக்கட்சியின் ஸ்தாபகரான அவர், அப்துல் ரசூல் தலைமையிலான குழுவினரால் சிறிலங்கா முஸ்லிம் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். சேகு இஸ்ஸதீன், தன்னிச்சையாக கட்சியை வழி நடத்த முற்படுகிறார் எனவும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை அதரிக்கிறார் எனவும் குற்றஞ் சாட்டப்பட்டார்.

இதைத் தொடர்ந்து அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார். அதனால் அவர் அக்கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் கிடைக்காத தேசியப்பட்டியல் எம்.பி. நியமனம், ஐ.தே.க.வில் மிகக் குறுகிய காலத்துக்குள் அவருக்குக் கிடைத்தது.

இப்படி சேகு இஸ்ஸதீன் எம்.பியாக நியமிக்கப்பட்டதாலேயே, அவரது சொந்த ஊரான அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஏ.எல்.எம். அதாவுல்லா, மு.கா.தலைவர் அஷ்ரபினால், முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் எம்.பி.யாக முதன்முதலாக நியமிக்கப்பட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த, நிலையில் நாடாளுமன்றம் கலைந்து, 2000[illegible] தல் வந்தது. அதில் அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் சேகு இஸ்ஸதீனும், மயோன் முஸ்தபாவும், இன்னும் 6முஸ்லிம் வேட்பாளர்களும், 2சிங்களவர்களும் போட்டியிட்டனர்.

இத்தேர்தலில் அங்கு முஸ்லிம் காங்கிரஸ், பொதுஜன ஐக்கிய முன்னணியின் கதிரைச் சின்னத்தில் போட்டியிட்டது. மு.கா.தலைவர் அஷ்ரப், விமான விபத்தில் உயிரிழந்ததும் இந்தத் தேர்தலின் போது தான்.

## ஐ.தே.கா.வில் சேகு

இந்தப் பொதுத் தேர்தலில் தனது ஐ.தே.க.வின் சகவேட்பாளரான மயோன் முஸ்தபாவைத் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக, சேகு இஸ்ஸதீன் பிரதேச வாதத்தைதூண்டியிருந்தார் என அப்போது ஒரு குற்றச்சாட்டு எழுந்தது.

எவ்வாறாயினும் மயோன் முஸ்தபாவும், சேகு இஸ்ஸதீனும் 33 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றபோதிலும், இருவரும் தோல்வியடைந்தனர். ஐ.தே.க.வில் போட்டியிட்ட இரண்டு சிங்கள வேட்பாளர்களே வெற்றியீட்டினர். பொ.ஐ.முன்னணியுடன் கூட்டிணைந்து போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ் நான்கு ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது.

இத்தேர்தலின்போது மு.கா. முதன்மை வேட்பாளரான தலைவர் அஷ்ரப் திடீர் மரணமடைந்ததால், அந்த வேட்பாளர் வெற்றிடத்திற்கு அவரது மனைவி பேரியல் நியமனம் செய்யப்பட்டார்.

தலைவரின் மரணத்தை அடுத்து முஸ்லிம் மக்களின் அனுதாபம், முஸ்லிம் கங்கிரஸ் பக்கமும், பேரியல் அஷ்ரப்பின் பக்கமும் திரும்பியது. இந்த அனுதாப அலையை உடைப்பதற்காக எதிரணி (ஐ.தே.க.) வேட்பாளரான சேகு இஸ்ஸதீன், பேரியலைத் தனிப்பட்ட ரீதியாக மேடைகளில் தாக்கிப் பேசினார். பேரியல் அஷ்ரப் தொடர்பாக அவர் வெளியிட்ட கருத்துக்கள் மிகக் கேவலமானவையாக அமைந்திருந்தன.



## நுஆவுக்குள் பிரவேசம்

எனினும், தேர்தல் முடிந்து சில மாதங்களின் பின் முஸ்லிம் காங்கிரஸில் ஏற்பட்ட தலைமைத்துப் பிரச்சினை காரணமாக அக்கட்சி பிளவுபட்டு, நுஆ தனி அணியாக மாறியபோது, அதன் தலைவி பேரியல் அஷ்ரபையும், மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரபின் கொள்கைகளையும் காப்பாற்றப் போவதாகக் கூறிக் கொண்டு சேகு இஸ்ஸதீன் நுஆவில் இணைந்து கொண்டார்.

அதைத் தொடர்ந்து அவரை நுஆவின் செயலாளர் நாயகமாக பேரியல் அஷ்ரப் நியமனம் செய்தார். 2001 டிசெம்பர், 2004 ஏப்ரல் பொதுத் தேர்தல்களில் அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகியவற்றில் போட்டியிட்ட பேரியல் அஷ்ரபின் வெற்றிக்காக சேகு இஸ்ஸதீன் அதி உச்ச பங்களிப்பை வழங்கினார்.


அதற்காக இரு தடவைகளும் சேகு இஸ்ஸதீன், பேரியல் அஷ்ரபின் சிபார்சில் தேசியப்பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டார். இம்முறை அவருக்கு பிரதி அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், இப்போது பேரியல் - சேகு ஆகியோருக்கிடையே முரண்பாடு தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'நுஆ' கட்சியின் செயற்பாடுகள், அமைப்பாளர்கள் தெரிவு பேரியல், அஷ்ரபின் அமைச்சுக்கான இணைப்பாளர்கள் நியமனம், தனக்கான ஒரு முழு அமைச்சுக் கோரிக்கை போன்றவை தொடர்பிலேயே பேரியலுடன் சேகு முரண்பட்டு வருகிறார் எனவும் கூறப்படுகிறது.

## சேகு அணி

அதன் எதிரொலியாகவே பேரியல் அஷ்ரப் நியமித்த பிரதேச அமைப்பாளர்கள் ஒரு புறமிருக்க, தானும் தனக்கு வேண்டியவர்களை சேகு இஸ்ஸதீன் நியமித்து வருகின்றார் எனத் தெரியவருகிறது. அதனால், அம்பாறை மாவட்டத்தின்



முஸ்லிம் கிராமங்களில் நுஆ அமைப்பாளர்களாக தலா இருவர் செயற்பட்டு வருகின்றனர் என அறிய முடிகின்றது.

இப்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்படும்வரைநுஆவில் இருந்து கொண்டே கட்சிக்குள் தனக்கென தனி அணி ஒன்றை ஏற்படுத்தும் முயற்சிகளில் சேகு இஸ்ஸதீன் ரகசியமாக ஈடுபடுவார் எனவும், நாடாளுமன்றம் கலைந்தவுடன் அந்த அணியை துஆ வில் இணைத்து விடுவார் எனவும் முஸ்லிம் அரசியல் புள்ளிகள் மூலம் அறிய முடிகின்றது. அவருக்கு நெருக்கமான வட்டாரங்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

துஆ வில் இணைவது தொடர்பாக அதன் செயலாளர்நாயகம் ஹாபிஸ் நஸீர் அஹமதுடன், சேகு இஸ்ஸதீன் பேச்சுக்களை நடத்தியுள்ளார் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீனின் பணிப்புரையின் பேரிலேயே அரச ஊடகங்கள் 'துஆ' செய்திகளுக்கு மிகப்பெரும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன எனவும், அவை அமைச்சர் பேரியல் அஷ்ரபின் செய்திகளுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்காதிருக்கின்றன எனவும் சொல்லப்படுகிறது.

துஆவுடன் இணைவதென்ற நோக்கிலேயே முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றைத் தாம் அமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக சேகு இஸ்ஸதீன் கூறுகின்றார் என்றொரு அபிப்பிராயமும் நிலவுகின்றது.

எது எவ்வாறாயினும் இப்போதுள்ள நடாளுமன்றம் கலைக்கப்படும் வரை சேகு இஸ்ஸதீனின் துஆவுடனான இசைவு விவகாரம் ஒரு முடு மந்திரமாகவே இருக்கும்.

நாடாளுமன்றம் கலைந்த பின்னரே யார் எந்தக் கொப்புக்குப் பாய்வர் என்பதை அறிந்து கொள்ளமுடியும்.

அதுவரை இவ்வாறான ஊகங்களை பெரிதாக அலட்டிக் கொள்ளவும் முடியாது. முற்றாக நிராகரிக்கவும் முடியாது.

-அஸ்லம் எஸ். மௌலானா.

சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**புரூடாவை நம்பாதீர்**

அந்த வேந்தனை கொழுமண்டபத்தின் உறுப்பினர் பதவியிலிருந்து ஒதுக்கிவிட்டு காந்தமான அப்புக்காத்தரை அந்த இடத்துக்கு போடப் போகினம் என்று ஒரு எதிர்த்தரப்பு உறுப்பினர் கூறினார். அதற்கான காரணங்களும் உண்டு. வேந்தர் செய்யும் சில இசகு பிசகுச் செயல்களால் கட்சியின் உறுப்பினர்களும் முகம் சுளிப்பது உண்டு. யாரோடு பேசுகின்றோம், –என்ன பேசுகின்றோம் என்பதைக்கூட மறந்து விடுவதுதான் அவரின் தற்போதைய நிலை.

பேனா நண்பரோ, சரி இதை அவரிடமே கேட்டு விடுவோம் என்று தொலைபேசி அழைப்பொன்றை விடுத்தார். ''ஐயா! இப்படி ஒரு பேச்சு இருக்கிறதே உண்மையா?'' என்றார். வேந்தனுக்கு பொத்துக்கொண்டு வந்ததே ஆத்திரம். ''யார் இப்படிச் சொல்றவை என்பது எனக்குத் தெரியும். யாராலும் என்னை எதுவும் செய்ய முடியாது. நான் தம்பியின்ற நேரடி ஆள். எது உண்மை என்று இருந்து பாருங்கள் தெரியும். வரலாறு தெரியாதவர்கள் விடும் புரூடாவை நம்பாதீர்கள்'' என்றார் உறுதியாக.

''சரி ஐயா இதைக் கேட்கத்தான் எடுத்தனான். பிறகு கதைக்கிறேன்'' என்றார் பேனா நண்பர்.

''தம்பி நீங்களும் எனது வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்று பேசத் தொடங்கிய வேந்தனார், மகாத்மா முதல் வீரவன்ச வரை மூச்சு விடாமல் பேசினார்.

ஆனால், முடிக்க முடியாமல் போய்விட்டது. காரணம் அவரது கையடக்கத் தொலைபேசி பற்றரி தனது இயக்கத்தை நிறுத்தி விட்டது.

தப்பித்துக் கொண்டோம் என்று போனை வைத்தார் பேனா நண்பர்.

**ப்ளீஸ் கோல் லேட்டர்**

அரசுக்கு முட்டுக் கொடுக்கப் போகிறார் மலை முகத்தார் என்ற செய்தியை ஊடகங்கள் அறம்புறமாக விளாசித்தள்ளின.

மலை முகத்தாரோ எதற்கும் மசியவில்லை. அவரின் வாயிலிருந்து எப்படியாவது ஒரு சொல் தமது செய்திக்கு சாதகமாக கிடைத்து விடாதா என்று பேனா நண்பர்கள் போட்டி போட்டுக் கொண்டு அவருக்கு தொலைபேசி அழைப்பு விடுத்தனர். அவரோ வாய் தவறியும் ஒரு வார்த்தை கூட பேசுவதில்லை. உரிய நேரத்தில் சரியான முடிவு எடுப்போம் என்பதுதான் அவரின் பதில்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் ஒரு பேனாநண்பர், ''ஐயா நீங்க நேத்து மெடத்த சந்திச்சதா? ஒரு கதை உலாவருகிறதே உண்மையா?'' என்றார்.

மறு முனையில் கடு கடுப்பாகிப்போன மலைமுகத்தாரோ ''ஏனப்பா நானும் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன். யாராக இருந்தாலும் கற்பனை பண்ணி செய்தி போடுறதுக்கும் ஒரு அளவு இருக்கு. நானும் வாய மூடிக்கிட்டு இருந்தா எதையும் எழுதலாம் என்று நினைச்சிக் கிட்டாங்களா?'' என்றார்.

நண்பர் மறுவார்த்தை பேசுவதற்கு முன்னர் அவரின் கையடக்க தொலைபேசி கப்சிப்.

மீண்டும் நண்பர் அழைப்பொன்றை விடுத்தார். மறு முனையில் நங்கை ஒருவரின் குரல் மணியாக ஹலோ என்றது.

ஐயாவுக்கு கொஞ்சம் கொடுங்க அவரோடு கதைக்கனும் என்றார் பேனா நண்பர்.

ஐயா இப்போதைக்கு யாரிடமும் கதைக்கும் நிலையில் இல்லை. ப்ளீஸ் கோல் லேட்டர் என்றது அந்த அம்மணியின் பதில்.

**எல்லாம் அவன் செயல்**

விலைவாசி வானத்தை தொடும் அளவுக்கு உயர்ந்துவிட்டது. மக்களோ பெரும் திண்டாட்டத்தில் இருக்கின்றனர். அரசோ அசட்டை. வாக்குறுதிகளோ விலைவாசியை விஞ்சும் அளவுக்குப் போய் விட்டது. 'ரட்ட பெரட்ட' என்பதின் அர்த்தம் இதுதானோ அந்த வாணிபத்திற்குப் பொறுப்பான ராஜ்ஜிடம் பேனா நண்பர் கேட்டார்.

ஆமாம் நாங்க சொன்னது உண்மைதான். ஆனால் நீங்க நினைக்கிற மாதிரி உடனே எல்லாம் செய்ய முடியாது தானே என்றார் கொச்சையான தமிழில். அதற்கு மேலே பேசத் தடுமாறிய அவர் கூறினார், சிங்களத்தில் இப்படி ''நானும் ரோட்டில இறங்கமுடியாத நிலையில் தான் இருக்கிறேன். பானையில சோறு இருந்தால் தானே அதை உங்களுக்குக் கொடுக்க முடியும் இன்னும் மூன்று மாதம் பொறுத்துக்கொள்ளுங்கள். எப்படிச் செய்கிறோம் என்று நீங்களே ஆச்சரியப்படுவீர்கள் என்றார். அது எப்படி சார் உங்களால் முடியும் என இழுத்தார் நண்பர். எல்லாம் அவன் செயல் என்றார் அவர்.

**அதுதான்வெசயம்**

முல்லாவின் கதைகள் மிகவும் சுவாரஸ்யமானவை. அறிவூட்டக்கூடியவை. ஏற்ற வகையில் பல சிந்தனைகள் அவைகளில் பொதிந்துள்ளன.

ஆனால்எமது நாட்டில் ஒரு லா இருக்கிறார். அவர் மூன்று கட்சிகளில் அங்கம்வகித்தவிட்டு நான்காவதுகட்சிக்குத் தாவி வீதிகளை விஸ்தீரணம் செய்து கொண்டிருக்கின்றார்.

இந்த லா எப்போதும் காலத்துக்குப் பொருத்தமான பேச்சுக்களை பேசுவதே இல்லை. இனவாதிகளுடன் சேர்ந்து கொண்டு தானும் ஒரு சிறுபான்மை என்பதை மறந்து விட்டு கதை அளப்பார்.

அண்மையில் அவர், மூன்றாவது இடத்தில் இருக்கும் நாங்கள் இந்த நாட்டில் இரண்டாவது இடத்தில் இருக்கும் உங்களுக்கு எதிராக போராடினால் என்ன செய்வீர்கள்? என்று கேள்வி எழுப்பினார்.

பாஞ்சானுக்கு படையினரை அனுப்பிக் கைப்பற்றுங்கள் என்று கொக்கரித்தார்.

அவருக்கு அடுத்த தரத்தில் உள்ள அந்த முக்கியஸ்தரிடம், என்ன ஹாஜி உங்கட ஆள் இப்பிடி பேசிக்கிட்டு இருக்கின்றார் என்றார் பேனா நண்பர்.

ஐயோ நீங்கள் ஒருபக்கம். நம்மவங்க கிட்ட இப்படிப் பேசினாத்தானே எடுபடும், அது தான் வெசயம். நீங்க ஒன்றும் பெரிசா யோசிக்க வேணாம் —என்றார்.


**Organ / Violin Notes**

நீங்களாகவே புதிய பாடல்களை இசைக்கருவிகளில் வாசிக்க வேண்டுமா? உங்கள் ஆசை நிறைவேற The Home Feeling என்னும் புத்தகம் வழிசெய்யும். இந்த நூலானது மேற்கத்தேய கர்நாடக சங்கீத முறைகளில் தமிழில் விளக்கமளிக்கப்பட்டுள்ள நூலாகும். எமது மாதாந்த வெளியிடான இசைக்குறிப்புகள் பாகம் 31 வெளிவந்துள்ளது.

S.S Rajeendran, Karaweena Isaimanram
75, Temple Road, Nallur, Jaffna.
T.P: 0777 031293
(தபாலில் பெறுவதற்கு ரூபா 250 Mony order அனுப்பவேண்டும்) (35111) (19–32)

**Bright Training Centre**

தபால் மூலம் கல்வி பிறைட் கல்வி நிறுவனத்தினால் பேச்சு ஆங்கிலம் (Spoken English), பேச்சு சிங்களம் (Spoken Singhala), வியாபார ஆங்கிலம் (Business English), கணனி மூலம் கணக்குப் பதிவியலும் கணக்கீடும் Method of computerised Book keeping & Accountancy.

பாலர் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிநெறி Nursery Teacher Training Course, டிப்ளோமா இன் லோ Diploma in Law, டிப்ளோமா இன் ஜேனலிசம் Diploma in Journalism, குடும்ப வாழ்க்கை நலக்கல்வி Family Life Education, யோகாசனக் கலை Art of Yogasanam தரம் 5 புலமை பரிசில் பயிற்சிநெறி.

மேற்படி பாடத்திட்டங்கள் தபால் மூலம் நடைபெறுகின்றன. மேலதிக விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்க.

**Bright Training Centre**
P.O. Box-162, Colombo.
T.p. 2434770, Fax: 2434770

பேருவளையில் பரம்பரை
**மாந்திரீகம்**



அரபு, உருது, மலையாள
சகல மதத்தவர்களுக்கும் செய்து கொடுக்கப்படும்
உங்கள் பிரச்சினை எதுவானாலும்

- தீராத வியாதி
- ஆண்/பெண் திருமண தடை
- புத்திரபாக்கியமின்மை
- கணவன் மனைவி விவகாரம்
- விரும்புபவர்களின் அன்பை பெறவும்

வெளிநாட்டில் வசிப்போர் தபால் மூலம்அல்லது பெக்ஸ் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

வெள்ளிக்கிழமை தவிர்த்து ஏனைய நாட்களில் காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை சந்திக்கலாம். (இரகசியம் பேணப்படும்) நேரில் வரவும்.

நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**A.H.A. நவ்பர் ஹாஜியார்**
69, பழைய ரோட்,
மொள்ளியாமலை,
பேருவளை.
Tel: 034-2276932
Fax: 034-2276923

வீடு இருக்கும் இடத்தை விபரமாக சாமிலா ஜுவலர்ஸில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**சாமிலா ஜுவலர்ஸ்**
15, சுப்பர் மார்க்கட், காலி வீதி, பேருவளை.
Tel: 034-2277586.

**உங்கள் பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டுமா?**



சிறிய பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
உடைவுப்பொருட்கள்
கோவில் பொருட்கள்

[ஆலய மணி, கொடிமரம், தேர், ஊர்வல வாகனங்கள், மணவறை]
**பெரிய அளவிலான வீட்டுப்பொருட்கள்**
[வரவேற்பு அறை தொடங்கி – சமையலறை வரை]

**எம்மிடம் ஒப்படைத்து நீங்கள் ஓய்வெடுங்கள்**

தாய்மொழியாம் தமிழ் மொழியில் ஆலோசனை வழங்கி, உங்கள் பொருட்களை உங்கள் இடத்திற்கே வந்து பெற்று பொதி.காப்புறுதி, சுங்கப்பரிசோதனை யாவையும் உங்கள் கண் எதிரே மேற்கொண்டு உங்கள் வசதிக்கும், தேவைக்கும் ஏற்ப...

5 நாட்கள் (விமான மூலமாக – வீட்டில் ஒப்படைக்கப்படும்)
3 வாரங்கள் (விமான மூலமாக – வீட்டில் ஒப்படைக்கப்படும்)
30 – 40 நாட்கள் (கப்பல் மூலமாக – அந்நாட்டில் உள்ள எமது முகவர் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.)
30 – 90 நாட்கள் (கப்பல் மூலமாக – வீட்டில் ஒப்படைக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட வழிகளில் உங்கள் பொருட்களை பாதுகாப்பாக அனுப்பி வைக்க உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**SHIP TRANS**
No. 8/48, Sri Siddartha Path,
Kirulapona, Colombo - 06.
Tel : 5 - 523226
[கிருலப்பனை பாலத்திற்கு அருகாமையில் உள்ள பாதையால் வந்து வலக்கைப் பக்கமாக உள்ள முதல் பாதை]
RAJ - [எவ்வேளையிலும்] 0777 358229
நேரில் வருவோர் தயவு செய்து தொடர்பு கொண்டு வரவும்.
(வீட்டுப் பொருட்கள் அனுப்புவதில் முன்னோடி)

**நல்லதொரு வாய்ப்பு**
**Institute of Computer Studies**
**கணினிக் கல்வி நிறுவனம்**
பிரதான வீதி, பண்டத்தரிப்பு. Main Street, Pandaterruppu.
Certificate Courses
*Microsoft Windows
*Microsoft Word
*Microsoft Excel
*Microsoft Access
*Microsoft PowerPoint
சிறுவர்களுக்கான Microsoft Kids Programme
உங்கள் கணினி தொழில்நுட்பத்தை வளர்த்துக்கொள்ள எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்
பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்படும்

**பாலியல் பலவீனத்திற்கு ரிஷி அஜமாமிச லேகியம்**

தேவையில்லை வயாகரா நம்பிக்கையுடன் பாலியல் பலவீனத்திற்கும், ஆண்மைக்கும், வீரிய விருத்திக்கும் ரிஷி அஜமாமிச லேகியம்
ரூபா.250/– தங்கபஸ்பம் கலந்தது ரூபா 1475/–

தங்கபஸ்பம் தனியாகவும் பெறலாம்

மூல வியாதியா ரிஷி லேகியம் பாவியுங்கள். உள்மூலம், வெளிமூலம் இவற்றை சுகப்படுத்தும் ரூபா. 250/–



**ஞானசுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி : 2421398


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
செப். 06 – 12, 2004
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

## கூட்டமைப்பு எம்.பிக்களும் பிரசாரத் திட்டங்களும்

நாட்டுக்குள்ளும், சர்வதேச ரீதியிலும் ஈழத்தமிழ் மக்களின் நியாயமான நிலைப்பாட்டை எடுத்துரைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள்தங்களுக்குள் நான்கு குழுக்களை அமைத்துள்ளனர்.

அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை, தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்தித்து கலந்துரையாடிய போது இது குறித்து தெரிவிக்கப்பட்டது.

தமிழர் தரப்பின் நியாயப்பாட்டை நாடாளுமன்றம் மூலம் சகல தரப்புக்களுக்குக் தெரியப்படுத்துவதும்–

தமிழர் தாயகப் பிரதேசத்தில் தமிழ் தேசியம், தமிழர் தரப்பின் தலைமை ஆகியவை குறித்து மக்களுக்கு விளக்குவதும்–

தென்னிலங்கை மக்களுக்கு தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறுவதும்–

சர்வதேச சமூகத்துக்கு தமிழர் தரப்பு நிலைப்பாட்டை விளக்குவதும்– இந்தக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள் ஆகும்.

இலங்கை இனப்பிரச்சினை, சமாதான முயற்சிகளின் இன்றைய நிலைமை, புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபு ஆகியவை குறித்தும், கிழக்கின் உண்மை நிலைமை பற்றியும் இக்குழுக்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பிரசாரங்களை மேற்கொள்ளும்.

தென்னிலங்கை மக்களுக்கு விளக்குவதற்கான பணி இந்த மாத நடுப்பகுதியிலேயே ஆரம்பிக்கப்படவிருப்பதாக இது தொடர்பான குழுவைச் சேர்ந்த சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.தெரிவித்துள்ளார். ஆகவே அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் பெயரளவில் இயங்காமல் துரிதமாகச்செயற்படவுள்ளன என்பதற்கு இது நல்லதொரு அறிகுறி.

நீதி கோரிப் போராடும் தமது இனத்துக்கு எந்தவகையில் உதவலாம் என்று தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆராய்ந்து இந்தப் பணியை முன்னெடுப்பதற்கு முன்வந்திருப்பது வரவேற்கத் தக்கது.

இரண்டரை வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகள் தற்பொழுது முட்டுக்கட்டை நிலையை அடைந்துள்ளன. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் சமாதானப் பேச்சுக்களே நடைபெறவில்லை.

உள்நாட்டில் சமாதான முயற்சிகளுக்கு எதிராக பேரினவாதிகளின் கைஓங்கி வருகிறது. புலிகள் கோரும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வழங்கப்பட்டு விட்டால் அவர்களுக்கு தனி நாடு கொடுத்ததாகிவிடும் என்று ஜே. வி. பியினரும் மற்றும் இனவாதிகளும் நடத்தி வரும் பிரசாரத்துக்கு தென்னிலங்கையில் கணிசமான அளவு ஆதரவு இருந்துவருகிறது. இன்றைய நிலையில் மக்களுக்கு உண்மையை விளக்குவது மிகவும் அவசியமானது.

அதே போன்று வெளிநாடுகளிலும் புலிகள் பற்றிய தப்பபிப்பிராயங்களை நீக்குவது அவசியம். சமாதானப் பேச்சுக்கள் முட்டுக்கட்டை நிலையை அடைந்ததுக்கு புலிகள் தான் காரணம், புலிகள் கொலைகள் செய்கிறார்கள் என்று அரசு வெளிநாடுகளில் பிரசாரம் செய்து வருகிறது. அமெரிக்கா போன்ற நாடுகளை தனது நிலைப்பாட்டை ஏற்க வைப்பதிலும் கணிசமான அளவு அரசு வெற்றி கண்டுள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் புலிகள் மீது விதித்த தடைகளை அமெரிக்கா உட்பட வெளிநாடுகள் நீக்காததுக்கு அரசின் பிரசாரமே காரணம் ஆகும்.

ஆகவே தமிழ் மக்கள் தங்களின் நீதியான கோரிக்கைகளையும் நியாயமான அபிலாஷைகளையும் பெற்றுக்கொள்ளவும் உரிமைப் போரட்டத்தை வென்றெடுக்கவும் கௌரவமான வாழ்வியல் இருப்பை உறுதிப்படுத்தவும் இன்று தேவையானது சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் ஆதரவுதான்.

தென்னிலங்கையில் அரசும், பேரினவாதச் சக்திகளும் அவற்றுக்குத் துணை போகும் ஊடகங்களும் தமிழர்களுக்கு எதிரான பிரசாரத்தில் முனைப்பாக இருக்கும் போது தமிழர் தரப்பு வாய் மூடி மௌனம் காத்தால் தமிழர் தரப்பின் நியாயங்கள் அடிபட்டுப் போய்விடும்.

இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்து தமிழர் கூட்டமைப்பு எம். பிக்கள் செயற்பட முடிவு எடுத்தது பாராட்டுக்குரியதே.

# போர் முஸ்தீபும் சமாதான முன்னெடுப்பும்

ஒருவருடகாலத்துக்கு மேலாக முட்டுக்கட்டை நிலையில் இருந்துவரும் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியாக நோர்வே அனுசரணைக் குழுவின் விசேஷ பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் இம் மாதம் 13 ஆம் திகதி மீண்டும் இலங்கை வருகிறார்.

இதற்கு முன்னோடியாக கடந்த 31 ஆம் திகதி லண்டனில், புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கத்தை எரிக் சொல்ஹெய்ம் சந்தித்தார். எரிக் சொல்ஹெய்முடன் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்ஹரும் சென்றிந்தார்.

கிழக்கில் தொடரும்படுகொலைகள், புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை யோசனை ஆகியவையே சமாதான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இருந்தும்வரும் பிரதான தடைகள்.


சொல்ஹெய்ம்

கிழக்கில் இராணுவத்தின் மறைமுக ஆதரவுடன் துணைப்படைகள் செயற்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று புலிகள் கோருகின்றனர். தாம் தயாரித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைக்கு மாற்றீடாக அரசு தயாரிக்கும் மாற்று யோசனையையும் அவர்கள் நிராகரித்து விட்டார்கள்.

### துணைப்படைகள் ஒழிக்கப்பட வேண்டும்

கிழக்கில் கருணா விவகாரம் ஆரம்பமாவதற்கு முன்னர் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஓரளவு சீராகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

கருணா விவகாரத்தை பயன்படுத்தி புலிகளைப் பலவீனப்படுத்த அரசு எப்பொழுது முடிவு செய்ததோ அன்றில் இருந்து கிழக்கில் அமைதி குலைந்து விட்டது.

துணைப்படைகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று யுத்த நிறுத்த ஒப்பந்தம் கூறுகிறது. ஆனால், அரசபடைகள் இத்தகைய துணைப்படைகளுக்கு மறைமுகமாக ஆதரவு வழங்கி வருகின்றன. 'அரசபடைகளின் ஆதரவுடன் துணைப்படைகள் ஆயுதங்களுடன் திரிகின்றன. சமாதான சூழ்நிலை பாதிக்கப்பட்டதற்கு இதுவே காரணம்.

இதனால் தான், யுத்த நிறுத்தம் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு புரிந்துணர்வு அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால், அரசு தனது நல்லெண்ண நடவடிக்கை மூலம் தனது விருப்பத்தை முதலில் வெளிப்படுத்த வேண்டும் என்று அன்டன் பாலசிங்கம் எரிக் சொல்ஹெய்முடனான சந்திப்பின் போது தெளிவாகக் கூறியுள்ளார்.

13ஆம் திகதி கொழும்பு வரும் எரிக் சொல்ஹெய்ம் இலங்கையில் நான்கு நாட்கள் தங்கி இருப்பார். 15 ஆம் திகதி அவர் கிளிநொச்சி சென்று புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனைச் சந்திப்பார்.

கொழும்பில் அவர் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அரசியல் தலைவர்களைச் சந்திப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இம்முறை ஏதாவது ஒரு முன்னேற்றம் ஏற்படும் என்றே சொல் ஹெய்ம் நம்புகிறார்.

### முட்டுக்கட்டை நீங்கும் அறிகுறி இல்லை

ஆனால், முட்டுக்கட்டை நீங்குவதற்கான எந்த ஒரு அறிகுறியும் இதுவரை தென்படவில்லை. தன்னாட்சி அதிகார சபை குறித்து பேசக்கூடாது என்கிறது அரசில் அங்கம் வகிக்கும் பிரதானக்கட்சியான ஜே.வி.பி.

தன்னாட்சி அதிகாரசபைகுறித்து புலிகளுடன் பேசத்தயார். ஆனால், அரசு தனது மாற்று யோசனைகளையும் சமர்ப்பிக்கும் என்கிறார் ஜனாதிபதி.

தன்னாட்சி அதிகாரசபை குறித்து முதலில் பேச்சுவார்த்தை நடத்தி அதனைப் பெற்றுக்கொண்ட பின்பே ஏனைய விடயங்கள் பற்றிப் பேசலாம் என்கின்றனர் புலிகள்.

ஜே.வி.பியின் பலத்திலேயே இந்த அரசு உயிர்வாழ்ந்து கொண்டிருப்பதால் ஜே.வி.பியை மீறி எதனையும் செய்ய முடியாத நிலையில் ஜனாதிபதி தடுமாறுகிறார்.

அரசு மாற்று யோசனை ஒன்றைத் தயாரிக்கிறது என்று அவர் கூறியது ஜே.வி.பியைச் சமாளிக்கவே.

யுத்த நிறுத்தம் ஏற்பட்டு இரண்டரை வருடங்கள் கழிந்துவிட்டதால் மக்களின் துயரங்களுக்கு முடியு வேண்டும், முதலில் இயல்புநிலைதிரும்ப வேண்டும் என்பதில் புலிகள் உறுதியாக இருந்துவருகிறார்கள்.

இயல்புநிலைதிரும்புவதற்கு வடக்கு– கிழக்குக்கு புலிகளின் கட்டுப்பாட்டில் இயங்கக் கூடிய நிர்வாக கட்டமைப்பு ஒன்று தேவை.

சொல் ஹெய்ம் கடைசியாக இலங்கை வந்த போது முட்டுக்கட்டை நிலையை அகற்றும் முயற்சியில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஏமாற்றத்துடனேயே சென்றிருந்தார்.

தற்பொழுது கிழக்கில் புலிகளும், படைத்தரப்பும் மீண்டும் சந்தித்துப் பேசுவதற்கு இணக்கம் ஏற்பட்டுள்ள நிலையில் சொல் ஹெய்மின் வருகை இடம்பெறுகின்றது.

எனினும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் இருந்து வரும் தடங்கல்களை இவரின் வருகை அகற்றும் என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

### புலிகள் – படைகள் சந்திக்க இணக்கம்

கருணா விவகாரத்தை அடுத்து அரச படைகளைச் சந்திப்பதை புலிகள் நிறுத்தி இருந்தனர். வவுணதீவு பிரதேச செயலகத்தில் ஜூன் 5 ஆம் திகதியே புலிகளும் அரச படையினரும் கடைசியாக சந்தித்தனர். அதன்பின்பு சந்திப்பு இடம்பெறவில்லை.

கிழக்கில் புலிகளும் அரச படைத்தரப்பும் சந்தித்துப் பேசினால் மட்டுமே கிழக்கில் இடம்பெறும் படுகொலைகளை நிறுத்தமுடியும் என்று கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் டொன் புரு ஹொவ்டே நம்புகிறார்.

கண்காணிப்புக்குழுத்தலைவர் கொழும்பில் படை உயர் அதிகாரிகளுடன் கிளிநொச்சியில் புலிகள் பிரதிநிதிகளுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்தே, படையினருடன் சந்திப்புக்களை வைத்துக் கொள்ள புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

### கண்காணிப்புக்குழுவின் பணிகள் விஸ்தரிப்பு

அதேசமயம், கண்காணிப்புக்குழுவின் பங்கு, பணிகள் விஸ்தரிக்கப்பட உள்ளன. கண்காணிப்புக்குழுவுக்கு ஆட்கள் அதிகரிக்கப்படவுள்ளனர். தற்பொழுது 50பேர் மட்டுமே கண்காணிப்புக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

சுமுகமான சூழ்நிலையை உருவாக்க அரசு விரும்பினால், இன்றைய நிலையில் முதலில் செய்ய வேண்டியது துணைப் படைகளை பயன்படுத்துவதை நிறுத்துவதுதான்.

புலிகள் கொலை செய்கிறார்கள் என்று கூறிக்கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை.

யுத்த நிறுத்தம் பேணப்படுவதற்கும், சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கும் முதலில் புரிந்துணர்வு சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் அரசு பரஸ்பர நம்பிக்கையைக் கட்டி வளர்க்க முடியும்.

ஆனால் அரசு பதவிக்கு வந்த நாள் முதலே இந்த சூழ்நிலையை கெடுக்கும் முயற்சியிலேயே இறங்கியிருக்கிறது. மீண்டும் யுத்தம் ஏற்படாது என்று அரசு கூறிக்கொண்டிருந்தாலும் யுத்தத்துக்கான ஆயத்தங்களையும் செய்து கொண்டே இருக்கிறது. சமீபத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் தெரிவித்த கருத்துக்கள் படையினரை யுத்தம் ஒன்றுக்கு உஷார் படுத்தக்கூடியவையே.

### ஆபத்து கடந்து விட்டதா?

எனினும் கிழக்கில் அரச தரப்பினரும் புலிகளும் மீண்டும் சந்திப்பிற்கு இணக்கம் தெரிவித்திருப்பது குறித்து கண்காணிப்புக்குழு திருப்தி தெரிவித்துள்ளது.

கண்காணிப்புக்குழுத் தலைவர் புரு ஹொவ்டே ரோய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு வழங்கிய பேட்டியில் "இலங்கையில் யுத்த நிறுத்தம் சீர் குலையும் ஆபத்து கடந்துவிட்டது" என்று தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதி

கிழக்கில் படையினரைச்சந்திப்பதற்கு புலிகள் இணங்கியதை வைத்தே புரு ஹொவ்டே மேற்கண்ட கருத்தைத் தெரிவித்திருக்கிறார். ஆனால், புலிகள் - படையினர் சந்திப்பு அரசு ஆதரவுத் துணைப் படையின் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தால் மட்டுமே நிலைமை சீரடையும்.

ஒருபுறம் புலிகளும் அரச படைகளும் சந்தித்துப் பேச்சு நடத்திக்கொண்டிருக்க மறுபுறம் துணைப்படைகள் தமது கைவரிசையை தொடருவார்களானால் புலிகள் – அரச படையினர் சந்திப்பினால் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை.

### நோர்வே பயணம்

அதே சமயம் கண்காணிப்புக்குழுத் தலைவர் புருஹொவ்டே நோர்வே சென்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸனை சந்திப்பதற்கு ஏற்பாடாகி இருக்கிறது.

பொறுப்புள்ள இலங்கை அமைச்சர்கள் நோர்வேக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்த ஆரம்பித்துள்ள போதிலும் இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் தனது முயற்சியில் நோர்வே தொடர்ந்தும் தீவிர ஆர்வம் காட்டி வருகிறது.

பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இரு தரப்பினருமே தயார் என்று நோர்வே நம்புகிறது. பேச்சுவார்த்தை மேசைக்கு வர இன்னும் சில கட்டங்களைத் தாண்ட வேண்டும் என்று நோர்வே கருதுகிறது. சொல்ஹெய்மின் இலங்கை விஜயத்தின் நோக்கமும் இதுதான். ஆனால், சமாதான முன்னெடுப்புக்கள் ஒருபுறம் நடைபெற மறுபுறம் யுத்தத்துக்கான முஸ்தீபுகள் நடைபெற்று வருவதையும் நோர்வே அறியாமல் இல்லை.

-சஞ்சாரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு- கிழக்கின் பேண்தகு அபிவிருத்திக்கு பொருத்தமான தந்திரோபாயம்!

யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் மாதந்தோறும் பூரணை விடுமுறை தினத்தில் சமூக விஞ்ஞானத் துறைகள் சார்ந்த கருத்தரங்குத் தொடர்களையும் கலந்துரையாடல்களையும் நடத்தி வருகின்றது.

கடந்த 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்.நகரில் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில்வடக்குகிழக்கின்பேண்தகு அபிவிருத்திக்கு பொருத்தமான தந்திரோபாயம் எனும் விடயத்தின் கீழ் சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் கருத்தரங்கை நடத்தியது. யாழ்.பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் வி. நித்தியானந்தன் அப்பொழுது ஆற்றிய கருத்துரையின் முதல் பகுதி, வாசகர்களுக்கு யாழ்.ஆத்மாவால் தொகுத்து வழங்கப்படுகிறது. (மறு பகுதி அடுத்த ஞாயிறு 'சுடர்ஒளி'யில் வரும்.)

வடக்கு கிழக்கின் பேண் தகு அபிவிருத்திக்கு என்று கூறுகிறபொழுது – அதற்கான தந்திரோபாயத்தைச் சிந்திக்கின்ற பொழுது – தனியே உற்பத்தியைக் கூட்டி வருமானத்தையும் வேலை வாய்ப்புகளையும் அதிகரிக்க வேண்டும் என்பதை மட்டும் கருதிவிடக் கூடாது. அபிவிருத்தி என்பதற்குள் வளர்ச்சி என்பது உள்ளடங்கியிருக்கிறது.

ஆனால், அதற்கும் மேலாக சமூக அம்சங்களையும் பண்பாட்டு அம்சங்கள், விழுமியங்களையும் அபிவிருத்தி கொண்டிருக்கிற போதுதான் சமூகமேம்பாடு(Social Promotion) அல்லது சமூக முன்னேற்றம் நிச்சயமாக ஏற்படும் என்று கூறலாம்.

## தமிழர்களுக்கு வாய்ப்பான நிலை

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் பேண்தகுஅபிவிருத்திக்கானதந்திரோபாயத்தை வகுப்பதில் தமிழர்கள் வாய்ப்பான நிலையில் இருக்கிறார்கள். இது ஒரு முக்கியமான அம்சமாகும். கைத் தொழில் புரட்சிக்காலத்தில் இங்கிலாந்து மிக ஆரம்ப நிலையிலிருந்து– அதாவது விவசாய சமூகத்திலிருந்து கைத்தொழில் சமூகத்துக்குச் சென்ற போது – வளர்ச்சி, உற்பத்தி என்பன பெருகிக் கொண்டிருக்க, அதனுடன் இணைந்த வகையிலேயே அவர்களது பண்பாட்டுச்சீர்திறன்கள், சமூக விழுமியங்கள் என்பனவெல்லாம் எவ்வாறு கைகோத்துக்கொண்டு சென்றனவோ– அதேபோன்றே நிலமையை நாங்களும் எய்தக்கூடிய வாய்ப்பானசூழல் வடக்குகிழக்கில் எங்களுக்குக் கிடைத்துள்ளது. இங்கிலாந்திலும் ஆங்கில மக்கள் ஒரு வெறுமைநிலையிலேதான்தொடங்கினார்கள்.

நாங்கள் இன்னும் சற்று மாறுபட்ட வெறுமை நிலையிலே இருக்கிறோம். எங்களுடைய இனத்துவப் போர் காரணமாக எங்களுடைய கீழ்க்கட்டுமானம்என்று கூறக்கூடிய அனைத்தும்–பொருளாதாரக் கீழ்க்கட்டுமானம் சமூகக் கீழ்க்கட்டுமானம், பண்பாட்டு கீழ்க்கட்டுமானம் ஆகிய அனைத்தும் – கிட்டத்தட்ட முற்றாகச் சிதைக்கப்பட்ட நிலைமையை கடந்த இருபது வருடங்களாக அனுபவித்து வருகின்றோம். இவ்வாறான ஒரு வெறுமை நிலை"யில், இருக்கின்ற போது நாங்களும் இந்த வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் சமூக மேம்படுத்துகையையும் ஒரு சேரத் தொடங்குகின்ற தந்திரோபாயத்தை பின்பற்ற முடியும். அதுதான் எமது அடிப்படையான தந்திரோபாயமாக இருக்க வேண்டும்.

## இவ்வளவு கஷ்டப்பட்டது ஏன்?

பத்திரிகைச் செய்தியைப் பார்த்தபோது காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை மீளவும் இயங்க வைப்பது தொடர்பாக ஆராய்வதற்காக சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வந்து சென்றுள்ளார் என்பதை அறிய முடிந்தது. யாழ். குடாநாட்டை அல்லது வடக்கை முன்பிருந்த பழைய நிலைக்கும் கொண்டு வருவது தான் அரசாங்கத்தின் முக்கியமான நோக்கம் என்றும் அதில் ஜனாதிபதி கூடியளவு அக்கறை உள்ளவராக இருக்கின்றார் என்றும் அவர் கூறியிருந்தார்.

உண்மையில் அது எங்களுக்கு தேவையற்றது. பழைய முந்திய நிலைக்குத் தான் போவது என்றால், நாங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டு எல்லாவற்றையும் சிதைத்து இழந்து இருக்கவேண்டியதில்லை.

அவ்வாறு பழைய நிலைக்கு சென்றால் வடக்கு – கிழக்கில் ஒரு சில இடங்களில் வளர்ச்சி இருக்கும். ஆனால், ஒரு பேண்தகு அபிவிருத்தி முற்றிலும் இல்லாதநிலை,சமூக முன்னேற்றம் இல்லாத நிலை என்பனவே மீண்டும் நிகழும். 1977 அல்லது 1980 ஆம் ஆண்டு நிலையில் ஈழத்தமிழர் சமூகம் வடக்கு – கிழக்கில் எவ்வாறு இருந்தது என்பதை அறிகின்ற போது அச்சமூகத்தை அபிவிருத்தியின் பாற்பட்ட சமூகமாக நிச்சயமாகக் கொள்ளமுடியுமா என்ற கேள்வி எழுகிறது. அது உண்மையில் ஒரு அபிவிருத்தியை நோக்கிய சமூகமாக நிச்சயம் இருக்கவில்லை.

ஒரளவு உற்பத்தி இடம்பெற்றிருந்தாலும் வருமானத்தைப் பெருக்குவதற்கு நாட்டை விட்டுஓடவேண்டியதாயிற்று; வளங்கள் இங்கே பூரணமான பயன்பாட்டில் இல்லை; சமூகத்தை எடுத்தால் சாதிப்பாகுபாட்டு முறைமைகள், சீதனமுறை இவையெல்லாம் மலிந்து கிடக்கின்றன. இவையெல்லாம் இருக்கின்ற நிலைமையை உண்மையில் நாங்கள் அபிவிருத்தி நோக்கிய நிலையென்று ஏற்கமுடியுமா? பொருளியல் ரீதியாக ஆம் என்று பதில் கூற முடியாது! இவ்வாறான நிலையில் மீண்டும் அதே பழைய நிலைமைக்குச் செல்வதை நிராகரிக்க வேண்டும். அவ்வாறு பழைய நிலைக்குச் செல்வதற்கு இவ்வளவு கஷ்டப்பட்டிருக்கத்தேவையில்லை.

## வடக்குக் கிழக்குத் தொடர்பாக நிலவிவருகின்ற அணுகுமுறை

புவியியல் ரீதியாக இலங்கைத் தீவுக்குள் வடக்கு–கிழக்கு அடங்குகிறது என்ற அணுகுமுறை இருப்பினும் வடக்கு கிழக்கு பகுதிக்கும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குமிடையில் தரைத்தோற்றம், பௌதீகவளங்கள் என்பனவற்றின் அடிப்படையிலும் மக்களுடைய பண்பாட்டு கலாசார அம்சங்கள், நடையுடை பாவனை, மொழி முதலியவற்றின் அடிப்படையிலும் பாரிய வேறுபாடுகளும் ஒத்திசைவற்ற தன்மைகளும் காணப்படுகின்றன.

இலங்கைத் தேசிய வாதம் என்பதன் ஒரு பகுதியாக வடக்கு – கிழக்கு இருக்கவேண்டும் என்று கூறுகிற போது வடக்கு–கிழக்கின் வேறுபாடுகளும் ஒத்திசைவற்ற தன்மைகளுமே பிரச்சினைகளாக இருந்துவந்துள்ளன.

இவ்வாறான வரையறைகள், வேறுபாடுகள் இருந்த நிலையிலும் இலங்கைத் தேசிய வாதம் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்துவதில் வெற்றி கண்டிருக்கமுடியும். எப்படியென்றால் இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் அதற்குரியவகையில் அபிவிருத்திக்கொள்கைகளை பேணுவதற்கு முயன்றிருந்தால் இந்த வேறுபாடுகளைக் கடந்து சீரான, சுமுகமான ஒற்றுமையான இலங்கைப் பொருளாதார சமூகம் ஒன்றை கட்டியெழுப்பியிருந்திருக்க முடியும்.

புவியியல் ரீதியான வேறுபாடுகள் இலங்கைக்கு மட்டும் உரியனஅல்ல. உலகின் பல நாடுகளிலும் புவியியல் ரீதியான வேறுபாடுகள் உள்ளன. அவற்றை கருத்தில் எடுத்த முறையில் அபிவிருத்தித் திட்டங்களைத் தீட்டுவதோ முன்னெடுத்துக்கொண்டு செல்வதோ அனேக நாடுகளுக்குள் பாரிய சவால்களாக இருந்திருக்கவில்லைஎன்றேகூறலாம்.

## இலங்கைத் தேசியவாதம் தோற்றது ஏன்?

இலங்கைக்கு என்றொரு தேசியவாதத்தை முன்னிறுத்தி அதற்கேற்ப அபிவிருத்தியை கட்டியெழுப்பிக் கொண்டு செல்வதற்கு முனைத்திருந்த போது, இலங்கை என்பது ஒரு பல்லின சமூகம்என்பதும் வேறுபட்ட மொழிகள், இனங்கள், பண்பாடுகள் என்பனஎல்லாம் இருக்கின்றனஎன்றும் கருதியே தான் இந்தத் தேசிய மட்டக்கொள்கை என்பது பின்பற்றப்பட வேண்டும் என்ற கருத்து நிலைப்பாட்டை அரசாங்கங்கள் பின்பற்றி வந்திருந்தால் இனப்பிரச்சினையை எதிர்கொள்வதிலிருந்து விலகி தேசியமட்டக் கொள்கையூடாக நாங்கள் அபிவிருத்தயை முன்னெடுத்திருக்க முடியும்.

ஆனால், உண்மையில் எமக்கெல்லோருக்கும் தெரிந்தவாறு இலங்கையின் ஆட்சியாளர்கள் இலங்கை தேசிய வாதத்தை எதிர்க்கணியமாகவே பயன்படுத்தி வந்தனர். நேர்க்கணியமாக அவர்கள் பார்க்கவில்லை. எதிர்க்கணியமாக இலங்கைதேசிய வாதத்தை இலங்கை ஆட்சியாளர்கள் பார்த்தார்கள் எனும்போது கருதுவது யாதெனில் தேசியவாதம் என்பது சிங்கள மேலாதிக்கத்துக்கு சமமானது என்ற அவர்களது நிலைப்பாடே ஆகும். சிங்கள மேலாதிக்கத்தைத்தான் இலங்கை தேசியவாதம் என்பதாக அவர்கள் எப்பொழுதும் முன்னிலைப்படுத்தித்தான் அபிவிருத்தித் தந்திரோபாயங்களை அவர்கள் வகுத்தார்கள்.

## பல்லினச் சூழலை ஏற்காத அபிவிருத்திக் கொள்கைகள்

காலனித்துவக்காலத்தில் எவ்வாறாக இருந்திருப்பினும் இந்த இலங்கை தேசிய வாதத்திற்கான அபிவிருத்தியை பல்லினச் சூழலுக்குப் பொருத்தமான வகையில் சுதந்திரத்தின் பின்னராவது – 1948இன் பின்னராவது – கொண்டு சென்றிருக்க வேண்டும். ஆனால், உண்மையில் நாங்கள் கண்டு கொண்டது என்னவெனில் இலங்கை சுதந்திரமடைந்த மாத்திரத்தில் அந்த நிலையிலிருந்து உடனடியாகவே வழுவக்கூடிய முறையில்தான் இலங்கை தேசியவாதம் முன்னிலைப்படுத்தப்பட்டது. அதற்குரிய சிறந்த எடுத்துக்காட்டுத்தான் இந்தியத்தொழிலாளர்களுடையவாக்குரிமையைப்பறித்தமைஆகும்.

அங்கே சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவது என்பதே பின்னணியில் இருந்திருந்தாலும் ஈழத்தமிழர்களையும் ஒரளவுக்கு இணைத்து இலங்கை தேசியவாதம் என்பதை முன்னிறுத்திச் செயற்பட்டிருந்தார்கள் அன்றைய ஆட்சியாளர்கள். எப்பொழுது இந்தியத் தமிழர்களான தோட்டத் தொழிலாளர்களுடைய வாக்குரிமை பறிக்கப்பட்டதோ அன்றே இலங்கை தேசியவாதம் என்பது பல்லினச்சூழலை அவமதித்து வழுவிவிட்டது என்பதை நாங்கள் காண்கின்றோம்.

பின்னர் 1956ஆம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டம், வடக்கு–கிழக்கின் அரசியல் – பொருளாதாரத்தை இனத்துவரீதியாக முகாமைத்துவம் செய்யமுற்பட்ட அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தெரியப்படுத்தியது. பின்னர் வடக்கு– கிழக்கின் போராட்ட சூழல் எழுகின்ற காலப்பகுதியில் பொருளாதாரத் தடைகள் அமுலுக்கு வருகின்ற வேளைகளில்கூட வடக்கு–கிழக்கின் பொருளாதார முகாமை இனத்துவரீதியான முகாமையாகவே இருந்து வந்திருக்கின்றது.

எமது மனிதவளத்தை பயன்படுத்துவதைத் தடுப்பது, கல்வித்துறைகளில் பாரபட்சம், உற்பத்தியைக் குழப்புவது, வேலைவாய்ப்புக்களை மறுப்பது, இங்குள்ள பௌதீக வளங்களைச் சூறையாடுவது என்பனவெல்லாம் இனத்துவரீதியாகவே மேற்கொள்ளப்பட்ட நிலைகள் உள்ளன. பொருளாதாரம் என்பது இலங்கை தேசியம் என்ற அடிப்படையில் முகாமைத்துவம் செய்யப்பட்டதற்கான எந்த ஆதாரங்களும் இல்லை. இவ்வாறான நிலையே எதிர்க்கணிய நிலையாகும்.

இந்நிலையில்தான் வடக்கு–கிழக்கு பொருளாதார ரீதியாகப் புறக்கணிக்கப் பட்டன. இன்றைய நிலையில் மொத்தத் தேசிய உற்பத்தியை இலங்கைக்கு கணிப்பிடுகின்றபோது வடக்கு–கிழக்கில் கணிப்பிட முடியாத நிலை உள்ளது.

## வடக்கு-கிழக்குக்கு மட்டுமல்ல முழு இலங்கைக்கும்

பின்பு போராட்ட அழுத்தங்களின் விளைவாக வடக்கு– கிழக்கை கட்டாயமாக கருத்தில் எடுக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டபோது கூட அவர்கள் (ஆட்சியாளர்கள்) ஒரு நேர்க்கணிய அணுகுமுறையைக் கையாளவில்லை. ஏதாவதுஒருவிடயத்தில்பொருளாதார ரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ வடக்கு–கிழக்கு திட்டங்களை முன்னெடுக்க முற்படுகின்ற வேளைகளில் எல்லாம் முழு இலங்கைக்கும் அவற்றை முன்னெடுக்க வேண்டும் என்றே அரசாங்கங்கள் கூறுகின்றன. இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு கொடுக்காமல் வடக்கு–கிழக்குக்கு விசேடமாக எதையும் கொடுக்க அரசாங்கங்கள் தயாராக இருக்கவில்லை. இதற்குச்சிறந்தஉதாரணமாக மாகாணசபை முறையை குறிப்பிடலாம். மாகாணசபைமுறையால் தமிழர்கள்பெரிதாக எவ்வித நன்மைகளையும் அடையாவிட்டாலும் வடக்கு–கிழக்கின் நிர்ப்பந்த நிலைமையால்தான் அம்முறைமையை அறிமுகப்படுத்த வேண்டியிருந்தது. எனினும், அன்றைய அரசாங்கம் வடக்கு–கிழக்குக்கு மட்டுமல்லாமல் இலங்கை முழுவதற்கும் மாகாணசபை முறைமையை அமுலாக்கியது.

இதுவே தேவையற்றபொருளாதாரச்சுமை. தேவையற்ற இடங்களில் இது அமுலாகும் போது ஏற்படும் சுமை அபிவிருத்தியை பின்நோக்கியே தள்ளும். இதுவும் அரசாங்கங்களின் எதிர்க்கணிய அணுகுமுறையால் ஏற்பட்டதே.

போர்நிறுத்தத்தின் பின்னரான தற்போதய அணுகுமுறைகளிலும் பொருளாதாரத்திட்டங்களில் இலங்கை முழுவதுக்குமாகவே எல்லாம் தயாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கையை மீட்டெடுத்தால் (REGAINING SRILANKA) என்கின்ற அறிக்கைத் திட்டத்தில் இலங்கை முழுமைக்குமான அபிவிருத்தி பற்றியே பேசப்படுகிறது. புறக்கணிக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட வடக்கு–கிழக்கு பிராந்தியத்தின் அபிவிருத்தியைசமரசமான அபிவிருத்திக்கொள்கைகளுடன் அணுகாதவரையில் வடக்கு–கிழக்குஇலங்கை தேசிய மட்டவரையறைகளுக்குள் நின்று பேண்தகு அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும் என்பது ஏற்றுக் கொள்ளமுடியாத விடயமாகும்.

(மிகுதி அடுத்தவாரம்)

-யாழ். ஆத்மா-


**பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் *(முத்திரை செலவுடன்)* விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**
செப்டெம்பர் 22 - 27 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

**கல்முனையில்..**
செப்டெம்பர் 04 - 05
திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205

**வவுனியாவில்...**
செப்டெம்பர் 10 - 11 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**யாழ்ப்பாணத்தில்...**
செப்டெம்பர் 13 - 18
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399
பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக் கொலைகள்

1935 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் எடின்போ நகரையே அதிரவைத்த கொலைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

மனித நடமாட்டம் மிகக்குறைவாக இருந்த அந்தப் பாதை வழியே மிஸ் லிண்டா மட்டும் இயற்கைக் காட்சிகளை ரசித்த வண்ணம் வந்து கொண்டிருந்தாள்.

அப்பாதையில் உள்ள சிறிய பாலம் ஒன்றின் கீழ் ஓடுகின்ற நீரின் அழகில் மெய் மறந்து அப்படியே நின்றாள்.

சற்றும் எதிர்பாராத வண்ணம் அந்த நீரோடைக்கருகில், மனித உடலில் இருந்து துண்டிக்கப்பட்ட கை ஒன்றைக் கண்டதும் திடுக்கிட்டுப் போனாள்.

உடனே தான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு விரைந்து சென்று பொலிஸாருக்கு தெரிவித்தாள்.

அங்கு விரைந்து வந்த பொலிஸார், அந்த மனிதக் கையைக் கைப்பற்றியதுடன் அப்பகுதியில் தொடர்ந்து தேடுதலை நடத்தினர். கடதாசியில் பொதிசெய்யப்பட்ட இரண்டு பெரிய பொதிகளை பொலிஸார் கண்டெடுத்தனர்.

அவற்றைப் பிரித்துப் பார்க்கையில், ஒவ்வொரு பொதியிலும் 70 க்கும் மேற்பட்ட மனித உடல் துண்டுகள் காணப்பட்டன. பொலிஸார் அதிர்ந்து போயினர். இரண்டு மனிதர்கள் கொலை செய்யப்பட்டு, இவ்வாறு துண்டுகளாய் வெட்டிப் போடப்பட்டிருப்பதை பொலிஸார் உணர்ந்தனர். கொலை செய்யப்பட்டிருப்பவர்கள் பெண்கள் என உணர்ந்த பொலிஸாரால் கொல்லப்பட்டவர்களை அடையாளம் காண முடியவில்லை. அந்த அளவுக்கு உடல்கள் சிதைக்கப்பட்டு இரு தலைகளும் அகற்றப்பட்டிருந்தன.

இச்செய்தி நாடு முழுவதும் பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மக்களால் நம்ப முடியவில்லை. ஆனால், ஊடகங்கள் மெய்ப்பித்தன.

இக்கொலைகளின் சூத்திரதாரியைக் கண்டுபிடிக்க உளவுத்துறையினர் தயாராகினர். முதலில் இவர்களின் உருவத் தோற்றத்தை மருந்துவாரீதியாக அடையாளம் காண்பதற்காக வைத்தியர் குழாம் ஒன்று ஆராய்ச்சியில் இறங்கியது.

எழும்புகள், தசைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அந்த இருவரினதும் வயது, உயரம், நிறை போன்றவற்றைக் கண்டுபிடித்தனர். ஆனால், விசாரணைக்குத் தேவையான உருவத் தோற்றத்தை அவர்களால் சரியான முறையில் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் உளவுத் துறையினர் மாற்று வழியைக் கையாண்டனர்.

அந்த உடல் துண்டுகளைப் பொதி செய்திருந்த கடதாசிகள், அதனுடன் காணப்பட்ட குழந்தை ஆடைகள், கட்டில் மெத்தை, விரிப்புத்துண்டு போன்றவற்றை மையமாகக் கொண்டே தேடுதலை நடத்தினர். அதில் பலதரப்பட்ட கடதாசிகளும் காணப்பட்டன. அவற்றுள் 1935 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் திகதி வெளிவந்த துண்டுப்பிரசுரம் ஒன்று முக்கிய இடம் வகித்தது.

மோகேம்ப் என்னும் இடத்தில் உள்ள லேன்ட் கசியர் சீசைட் ஹோட்டலில் கத்தோலிக்கத் திருவிழாவும், மோகேம்ப்பையும், அதனை அண்டியுள்ள கிராமமான லேன்ட் காஸ்ட்டரிலும் திருவிழாக் கால மலிவு விற்பனையும் இடம்பெறவிருப்பதாக அந்த பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சம்பம் இடம்பெற்ற எடின்போ நகருக்கும் மோகேம்ப் பகுதிக்கும் இடையில் பல மைல் தொலைவு இடைவெளி உள்ளது. அந்தப் பகுதியில் மாத்திரம் வெளியிடப்பட்ட இந்தத் துண்டுப் பிரசுரம் இந்த உடல்களுடன் எப்படி வந்தது? அப்படியானால் பெண்கள் இருவரும் அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்க வேண்டும். அங்கு வைத்துக் கொலை




செய்யப்பட்டபின்பே, இங்குகொண்டு வந்து போடப்பட்டிருக்க வேண்டும் என் உளவுத்துறையினர் சந்தேகித்தனர்.

உளவுத்துறையினர் உடனடியாக மோகேம்ப் பகுதிக்கு விரைந்தனர். அங்கு நடத்திய பரவலான விசாரணயின் போது, அப்பகுதியில் எவரும் காணாமல் போகவில்லை என்பது தெரியவந்தது. இதில் ஏதோ மர்மம் இருப்பதை உணர்ந்த உளவுத்துறையினர் தங்களின் விசாரணையைப் பரவலாக ஆரம்பித்தனர்.

1935 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்துக்கு முன்பு காணாமல் போனவர்கள் அத்தனை பேரினதும் விவரங்களைத் திரட்டி அதனூடாக விசாரணையை மேற்கொண்டனர். இந்த விசாரணையின் போது பெறப்பட்ட ஒரு தகவல் கொலைகாரனைக் கண்டுபிடிக்கக் கூடியதாக இருந்தது.

1935 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மேரி ரொஸ்லின் என்பவர் காணாமல் போய் உள்ளதாய், அவ்வருடம் ஒக்டோபர் மாதம் வெளியான உள்நாட்டுப் பத்திரிகையில் செய்திஒன்று வெளியிடப்பட்டிருந்தது. அதனையடுத்து இச்செய்தியினைத் தெரிவித்த அப்பெண்ணின் தாயார் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். ராக்ஸன் என்ற வைத்தியர் ஒருவரின் வீட்டில் மேரி ரொஸ்லின் மூன்று மாதங்களுக்கு முன் வேலைக்குச் சேர்ந்தார் என்றும், செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி வழமைபோல் வேலைக்கு சென்ற அவர் வீடு திரும்பவில்லை என்றும் மேரி ரொஸ்லினின் தாயார் தெரிவித்தார்.

பிணத்துடன் காணப்பட்ட குழந்தை ஆடை ஒன்றை அவரிடம் காட்டியதும், அது மேரி ரொஸ்லினின் குழந்தையின் ஆடை என்றும் அதை உறவினர் ஒருவர் அன்பளிப்புச் செய்திருந்தார் என்றும் கூறினார். ஆனால், இதனைத் தன்னுடன் எடுத்துச் சென்றதுக்கான காரணம் எதுவும் தெரியாது என்றார். ஆயினும் கொலை செய்யப்பட்ட இருவரில் ஒருவர் மேரி ரொஸ்லின் என்பது உறுதியாகிவிட்டது.

இதனையடுத்து டாக்டர் ராக்ஸன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். செப்டம்பர் 10 ஆம் திகதி என் மனைவி எலிஸபெத்தும், வேலைக்காரி மேரி ரொஸ்லினும் கடைத் தெருவுக்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்றனர். காலை சென்றவர்கள் இரவாகியும் வரவில்லை. இதனால் அச்சமடைந்த நான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவிட்டுப் பல இடங்களிலும் தேடிப் பார்த்தேன் என டாக்டர் ராக்ஸன் விசாரணையின் போது கூறினார்.

கொலை செய்யப்பட்ட அடுத்த பெண் ராக்ஸனின் மனவி எலிசபெத்தான் என்பதும் உறுதியாகிவிட்டது. இதனையடுத்து ராக்ஸனின் பின்னணியை உளவுத்துறையினர் ஆராய்ந்தனர்.

ராக்ஸன் இந்தியாவின் மும்பாயில் 1899 இல் பிறந்தார். மும்பைப் பல்கலைகழகத்தில் படித்து ஒரு சத்திர சிகிச்சையாளராக வெளியேறினார். பல்கலைகழகத்தைவிட்டு வெளியேறியதும் மும்பாயில் உள்ள வைத்திய சாலை ஒன்றில் கடமையாற்றினார். அப்போது மலேரியா நோய்த்தடுப்பு ஆணைக்குழுவுக்கு வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

அதன்பின்பு இந்திய வைத்திய சேவைப் பிரிவில் இணைந்து பக்தாத், பஸ்ரா போன்ற இடங்களில் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றார். மும்பாய் வைத்திய கலாசாலையின் அனுமதியுடன் லண்டன் பல்கலைக் கழக வைத்தியசாலையில் பல பாடநெறிகளையும் பூர்த்திசெய்தார்.

இறுதியாக எடின்போ நகரில் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போதுதான் எலிஸபெத்தைச் சந்தித்தார். எலிஸபெத் டச்சுக்காரர் ஒருவரைத் திருமணம் செய்து விவாகரத்துப் பெற்றிருந்த நேரம் அது. அப்போது எலிஸபெத் எடின்போ நகரில் உள்ள உணவகம் ஒன்றில் முகாமையாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். இவர்கள் இருவருக்குமிடையில் ஏற்பட்ட சாதாரண நட்பு, எல்லோருக்கும் போல் காதலாக மாறி திருமணத்தில் முடிந்தது.

1932 இல் இவர்களது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அடுத்த வருடம் மற்றுமொரு பெண்



குழந்தை பிறந்தது. 1934 இல் மூன்றாவதாய் மற்றுமொரு பெண் குழந்தை மரணித்துப் பிறந்தது. இதனால் எலிஸபெத் நிலை குலைந்து போயிருந்தார். இயல்பு மன நிலை பாதிப்படைந்து கணவனுடன் அடிக்கடி சண்டை பிடிக்கத் தொடங்கினார்.

1934 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கணவனை விட்டுப் பிரிந்து சில காலம் தன் சகோதரியுடன் வாழ்ந்து வந்தார். குழந்தைகளின் நலன்கருதி ஒருவாறு சமரசத்தை மேற்கொண்டு மீண்டும் எலிஸபெதை தன்னுடன் இணைத்துக்கொண்டார் ராக்ஸன்.

இருப்பினும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாய் எலிஸபெத் பழைய மனநிலைக்கே திரும்பினார். இதனால் இருவருக்குமிடையிலான சண்டை அதிகரித்துக்கொண்டே போனது. இந்த நிலையில் தான் தனது குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்காக மேரி ரொஸ்லினை ராக்ஸன் வேலைக்காரியாக நியமித்தார். சமயல் வேலைகளுக்கு வேறொரு பெண்ணை நியமித்தார்.

இந்ததகவலினைத்திரட்டிய உளவுத்துறையினர் ராக்ஸனின் மீதே சந்தேகப் பார்வையைச் செலுத்தினர். மேலதிக விசாரணைகளைச் சாதுர்யமாக நகர்த்தினர். ராக்ஸனின் வீட்டுச் சமையல்காரி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். சம்பவ தினத்தன்று இவருக்கு மூன்று நாள் விடுமுறை கொடுத்து வீட்டுக்கு அனுப்பிவைத்ததாக கூறினார் அந்த சமையல்காரி.

ராக்ஸனின் மீது சந்தேகம் வலுவடைந்த நிலையில், ராக்ஸனின் வீட்டில் இருந்த சந்தேகத்திற்கிடமான சில பொருட்களையும் உளவுத்துறையினர் பெற்றுக்கொண்டனர்.

பல செய்திப் பத்திரிகைகளும், கிழித்த நிலையில் காணப்பட்ட கட்டில் மெத்தை விரிப்பு ஒன்றும் இதில் அடங்கும்.

உடல் துண்டுகளைச் சுற்றியிருந்த பத்திரிகைகளுடன் காணப்பட்ட கிழிந்த கட்டில் மெத்தை விரிப்பின் துண்டும். ராக்ஸனின் வீட்டில் கைப்பற்றப்பட்ட அத்துண்டும் ஒரே ராகமாய் இருந்தன. இணைத்துப் பார்க்கையில் இரண்டும் பொருந்தியிருந்தன. ஆகவே கொலை இடம்பெற்றது ராக்ஸனின் வீட்டில்தான் என்பதை உளவுத்துறையினர் கண்டுபிடித்துவிட்டனர்.

இதனையடுத்து ராக்ஸன் கைது செய்யப்பட்டார். ஆனாலும் கொலைக்குற்றத்தை மறுத்தார். உளவுத்துறையினர் தகுந்த ஆதாரங்களை முன்வைத்ததும் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

தன் மனைவியுடன் தொடர்ந்தும் ஏற்பட்ட சண்டையின் காரணத்தாலேயே அவரைக் கொன்றதாகவும், அச்சமயம் வேலைக்காரி மேரி ரொஸ்லின் இதனைக் கண்டுவிட்டதால் தன்னைப் பொலிஸில் காட்டிக் கொடுத்து விடுவார் என அஞ்சியே அவளையும் கொன்றதாகவும் ராக்ஸன் கூறினார்.

அந்த விசாரணையைத் திசைதிருப்ப முயன்ற அந்தத் துண்டுப்பிரசுரம் பற்றிக் கேட்டபோது, அது தனது நண்பன் அனுப்பி வைத்ததாகக் கூறினார்.

இதனையடுத்து எடின்போ நீதிமன்றம் ராக்ஸனுக்குத் தூக்குத்தண்டனை விதித்தது.

# பிழைவிடும் பிரபல்யங்கள்

பிரபல்யமாக இருப்பது என்பது எல்லோருக்குமே விருப்பமான விடயம் தான். ஆனால் பலரிடையே பிரபல்யமாக வருவது என்பது சுலபமான விடயமல்ல. பல இடர்கள் தாண்டும் கடின உழைப்புத்தான் ஒருவரை மக்களிடையே பிரபல்யமாக்கிவிடுகின்றது.

எப்படியாவது புகழ் பெற்றுவிட வேண்டும் என்ற வெறியோடு அலைபவர்கள் பலர். ஆனால் எல்லோராலும் இதைச் சாதிக்க முடிவதில்லை. பொறுமையோடு பல ஆண்டுகள் காத்திருந்து, பல எதிரிகளிடமிருந்து மீண்டு, ஒருவர் சாதனையாளராக வேண்டி இருக்கிறது.

உலகப் பிரபல்யமான பொப் பாடகர் மைக்கல் ஜாக்ஸனை யாருக்குத் தான் தெரியாது? இவர்தம் பாடல்களால் கோடிக்கணக்கான விசிறிகளைச் சம்பாதித்தவர். இன்றும் சம்பாதித்துக்கொண்டிருப்பவர். முழு உலகிலும் உச்ச இடத்தில் இருக்கும் இந்தப் பாடகரின் அல்பங்களின் விற்பனை 165 மில்லியனைத் தொட்டுவிட்டது. கடைசியாக வெளிவந்த அல்பம், 100,000 தொடக்கம் 121,000 வரை விற்பனையாகலாம் என்று கணிப்பிட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் தான், மைக்கல் ஜாக்ஸன் கைது விவகாரம் இடம்பெற்றது.

கலிபோர்னியாவின் அரச சட்ட வல்லுனர்கள், சிறுவர்களுடன் தகாத உறவு வைத்திருப்பதாக, இவர் மீது குற்றம் சாட்டி இருக்கிறார்கள்.

ஆனால், குற்றச்சாட்டுச் சரித்திரம் திரும்புவதாக எல்லோராலும் கூறப்படுகிறது. காரணம் 1993 இலும் இதே குற்றச்சாட்டு இவர் மீது சுமத்தப்பட்டது. 13 வயதுச் சிறுவனான ஜோர்டான் சாண்லர் என்பவனுடன் தகாத உறவு கொண்டிருந்தார் என்பது குற்றச்சாட்டாக இருந்தது. ஆனால், நீதிமன்றத்தில் இந்தச்சிறுவனின் பெற்றோரும், சிறுவனும் இதை உறுதிப்படுத்த முன்வர மறுத்தமையால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.



[illegible]

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட நீண்ட காலம் எடுக்கலாம் என்கிறார்கள். முதலில் ஆரம்பவிசாரணைக்கு எடுக்கப்பட்டு, தேவையான சாட்சிகள் இருக்கின்றார்களா என்று நீதிபதியால் ஆராயப்பட்டு, அதன் பின்பு தான் இது பெரிய அளவிலான வழக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படும்.

இந்தத்தடவை 12 வயதுப்பையன் ஒருவன்தான் முறைப்பாடு செய்திருக்கிறான். நீதிபதி வழக்கு விசாரணைக்கான நாளைக் குறித்தாலும், குற்றம் சுமத்தப்பட்டவர், இத்திகதியைப் பின்தள்ளிப் போட கோர முடியும். இதற்கு அனுமதியும் வழங்கப்படும்.

பொப்பாடகரின் விசிறிகள் உஷாராகி இருக்கின்றார்கள். சமீபத்தில் அமெரிக்க நகர்களிலும், இன்னும் 14 நாடுகளிலும் விழித்திருந்து தமது எதிர்ப்பைக் காண்பித்தார்கள். இந்தக் கைதின் பின்னணியில் அரசியலும், நிறவெறியும் இருக்கின்றன என்கிறார்கள் இவரது குடும்ப அங்கத்தவர்களும், ஆதரவாளர்களும். கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட ஜாக்ஸனை 3 பில்லியன் டொலர் தொகையை பிணைப் பணமாகக் கட்டிவிட்டு, மறுபடியும் சுதந்திரப் பறவையாக நடமாட விட்டிருக்கின்றார்கள்.

குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டால், குறைந்தது 3 வருடங்களாவது ஜாக்ஸன் சிறை வாசம் அனுபவிக்க வேண்டிவரலாம். அதிகூடிய தண்டனையாக 8 வருடங்கள் கூடக் கிடைக்கலாம்.

பாடிய குயில் வாய் மூடி நிற்கப் போகின்றதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் பதில்கள்

*எஸ்.அனித்தா— வடலியடைப்பு*

**கேள்வி:—** பிரிவே இல்லாத காதல் எப்படி இருக்கும் பித்தா?

**பதில்:—** சுவாரஸ்யமில்லாததாக இருக்கும் தான். ஆனால் இப்போது தான் காதலுக்குப்பிரிவே கிடையாதே... உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் செல்போன்,



எஸ்.எம்.எஸ், ஈ.மெயில், சற் என்று ஏதோ ஒரு வகையில் தொடர்புகள் இருந்து கொண்டே இருக்குமே. காதலன் பக்கத்தில் இல்லையே என்ற கவலை தவிர. பக்கத்திலே இருந்தால் எப்போதாவது ஒரு முறை தான் சந்திக்க முடியும். இப்போ பிரிந்திருந்தால் அடிக்கடி தொடர்பு கொள்ள முடியுமே.

*செ.சிந்துஜா — முழங்காவில்*

**கேள்வி:—** காதல் கடிதம் அல்பத்தின் பாடல்களான, 'பனங்காய்ப் பணியாரமே', 'யாழ் தேவியில் காதல் செய்தால்' என்ற பாடல்கள் சூப்பராக இருக்கின்றன... உமக்குப்பிடித்துள்ளதா?

**பதில்:—** எங்கள் ஊர் நடைமுறைகள், அன்றாட வாழ்வில் சந்திக்கும் நிகழ்வுகள், எமது சாப்பாட்டு வகைகள் என்பவற்றைப் பாட்டாகக் கேட்கும்போது உடம்பு சிலிர்க்கிறது. அதிலும் கொழும்பு வானொலிகள் அடிக்கடி போட்டுத் தள்ளுகின்றன. பெருமையாக இருக்கிறது ஆனால் இந்தப் பாடல்களில் எதுகை மோனை கொஞ்சம் மிஸ்ஸிங். ஆன ் ஏதோ நெருடுகிற மாதிரி ஒரு உண ு.

*ச.மலர்விழ -கொக்கட்டிச்சோலை.*

**கேள்வி:—** ஆசை றுபது நாள். மோகம் முப்பது நாள் எ ாகிறார்களே! அதற்கு விளக்கம் என்ன

**பதில்:—** திருமண ன புதிதில் கணவன் மனைவியைக் கூ டிக்கொண்டு உலாவச் செல்கிறான். ழியிலே கிடந்த முள் ஒன்று மனைவ யின் காலில் குத்தி விடுகிது. இதன எக் கண்டு துடித்துப் போகிறான் கணவன். அந்த முள்ளை மெதுவாக மனைவியின் காலிலிருந்து பிடுங்கி—சனியன் பிடித்த முள்ளே... உனக்குக் குத்துவதற்கு வேறு இடம் கிடைக்கவில்லையா? எனது மனைவியின் கால் தானா கிடைத்தது என்று கோபமாகக் கேட்டுவிட்டு அந்த முள்ளை தூரத்தில் வீசி எறிகிறான். இது ஆசையும் — மோகமும் உள்ள காலத்தில்.



திருமணம் முடித்து ஒரு வருடம் கழிந்துவிட்டது என்று வைத்துக்கொள்வோம். கணவனும்— மனைவியும் உலாவச் செல்கின்றனர். வழியிலே கிடந்த முள் மனைவியின் காலில் குத்திவிடுகிறது. இதனைக் கண்டு எரிச்சலடையும் கணவன், அந்த முள்ளை மனைவியின் காலிலிருந்து பிடுங்கி எறிந்துவிட்டு— சனியன் பிடித்தவளே— உனக்கு நடப்பதற்கு வேறிடம் கிடைக்கவில்லையா? அந்த முள் ஊள்ள இடம் தான் கிடைத்ததா என்று திட்டுவான்.

இது ஆசையும், மோகமும் அற்றுப் போய் விட்ட காலத்தில்.

*சி.பிரகாஷ்— அல்வாய்.*

**கேள்வி:—** ஒரே நேரத்தில் பலரைக் காதலிப்பவர்களைப் பற்றி பித்தா உங்கள் அபிப்பிராயம்?

**பதில்:—**
* மச்சமுள்ளவர்கள்
* கொடுத்து வைத்தவர்கள்.
* அட்டாவதானிகள்

எங்களால் ஒரு காதலைக்கூட ஒளித்து வைத்திருக்கத் தெரியவில்லை. வீட்டிலே மாட்டுப்பட்டு வாங்கிக்கட்ட நேர்ந்தது. இவர்கள் ஒரே நேரத்தில் ஒருவருக்குத் தெரியாமல் மற்றவர்களைக் காதலிப்பது என்பது கெட்டிக்காரத் தனமல்லவா?

*த.உமா—வட்டக்கச்சி.*

**கேள்வி:—** அரசியலில் ஈடுபட உங்களுக்கு விருப்பமா?

**பதில்:—** சுங்கத் தீர்வையற்ற வாகனம், இருப்பதற்கு கொழும்பிலே வீடு, பேப்பர், பென்சில், பேனா, கார்பன் என்பன இலவசம், குறைந்த விலையில் கொம்பியூட்டர், இலவச தொலைபேசி, சாரதி, உதவியாளருக்குச் சம்பளம், ஏவலுக்கு ஏகப்பட்ட பேர்கள், எங்கேயாவது சென்றால் முன்னேயும் பின்னேயும் வாகனங்களில் ஊர்வலம், பாதுகாப்புக்குப் படையினர், நாளுக்கு பல இடங்களில் பிரதம விருந்தினர் என்ற அழைப்பு எல்லாவற்றையும் நினைத்துப்பார்க்கும்போது, அடடா நாமும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரானால் என்ன என்று வாயிலே எச்சில் ஊறும். ஆனால் முன்பெல்லாம் இந்த வசதிகளை ஐந்து வருடங்கள் அனுபவிக்கலாம். இப்போ அற்ப ஆயுள். எப்போ ஆட்சி கவிழுமோ எப்போது எமது பதவி பறிபோகுமோ என்ற பதட்டத்தில் வாழும் எம்.பிக்களையும், அமைச்சர்களையும் பார்க்கும்போது சீ... சீ... இந்தப்பழம் புளிக்கும் என்று தோன்றுகிறது.

*கெ.தாமரை—வட்டகச்சி.*

**கேள்வி:—** இந்த வாரம் என்ன ஜோக் தரப் போகிறீர் பித்தா?

**பதில்:—** மத்தியக் கிழக்கு நாடொன்றில் ஒரு பாகிஸ்தான் காரர், ஒரு இந்தியர், ஒரு இலங்கையர் ஆகிய மூவரும் தப்புப் பண்ணிவிட்டார்கள். மூவருக்கும் ஐந்து ... ஐந்து... கசையடிகளை வழங்கும்படி நீதிபதி தீர்ப்பளித்தார்.

பின்னர் நீதிபதி அவர்களைப் பார்த்து உங்களுக்கு ஒரு சலுகை தருகிறேன். வலியைத் தாங்குவதற்காக உங்கள் முதுகில் எதையாவது வைத்துக்கொள்ள விரும்பினால் வைத்துக் கொள்ளலாம் என்றார்.

முதலில் பாகிஸ்தான் காரருக்கு தண்டனை வழங்கப்பட்டது. அவர் பெரிய கல் ஒன்றைத் தூக்கி தனது முதுகில் வைத்துக் கொண்டார். அப்படியே தண்டனை நிறைவேற்றப்பட்டது. கசையடி அவருக்கு வலிக்கவில்லை.

அடுத்து இந்தியரின் முறை. நான் மிகவும் உறுதியானவன் எனக்கு எதுவும் தேவை இல்லை என்றார் அவர். — தண்டனை நிறைவேற்றப்பட்டது. அவர் சிறு முனகலைக் கூட வெளிப்படுத்தாமல் கசையடிகளைத் தாங்கிக் கொண்டார்.

அடுத்து இலங்கையரின் முறை. இப்போது நீ முதுகிலே என்னத்தை வைத்துக் கொள்ளப் போகிறாய் என்று கேட்டார் நீதிபதி. இலங்கையர் சொன்னார். நீதிபதி அவர்களே! இந்த இந்தியரை எனது முதுகில் சாய்த்துப் பிடித்தபடி தண்டனையை நிறைவேற்றுங்கள்... என்றார்.



*எஸ்.கயல்விழி— கனகராயன் குளம்.*

**கேள்வி:—** நான் தான் படிப்பேன் என்று தலைக்கனம் கொண்டிருக்கும் மாணவர்கள் மற்றைய மாணவர்களை இழிவாக எண்ணி மட்டம் தட்டுகிறார்களே! அவர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர் பித்தா?

**பதில்:—** நிறைகுடம் தழும்பாது. குறை குடம் தான் தழும்பும் என்ற பழமொழியை நினைவில் வைத்துக்கொண்டிருங்கள்.

*ப.வையவன்—புதுகுடியிருப்பு.*

**கேள்வி:—** பித்தா! பெண்கள் இறுக்க... இறுக்க சட்டை போடுவதால் யாருக்கு என்ன நன்மை கிடைக்கிறது?

**பதில்:—** நன்மை இல்லை என்று யார் சொன்னது? பன்னிரெண்டு வயதில் தைத்த சட்டைகளை எல்லாம் பவுதிரமாக வைத்து பதினெட்டு—இருபது வயதிலேயும் போடுகிறார்களே... இதனால் அவர்களது பெற்றோர்களுக்கு லாபம் இல்லையா?



*து.புவிதரன்—உவர்மலை.*

**கேள்வி:—** பித்தா! புலிகளுடன் பேச்சு வேண்டாம் என்கிறார்கள். யுத்தத்துக்கு போகவும் மாட்டோம் என்கிறார்கள். நாட்டுக்குத் தேவையான நிதியை வெளிநாட்டு முதலீடுகள் மூலம் பெறவும் தடை செய்கிறார்கள். ஆனால் விலைவாசிகளை உயர்த்த வேண்டாம் என்கிறார்கள். இந்த ஜே.வி.பி. காரர்கள். என்ன தான் நினைத்துக்கொண்டு செயல்படுகிறார்கள்?

**பதில்:—** எமது முன்னோர் கூறிய பழமொழி ஒன்று தான் இவர்களுடைய அரசியலை நினைத்தால் நினைவுக்கு வருகிறது. சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது. லொத்தர் சீட்டிழுப்பின் மூலம் நாட்டின் சகல நிதிப்பிரச்சினைகளையும் தீர்த்துவிடலாம் என்று நினைக்கும் சிறுபிள்ளைத்தனமான அரசியல் அவர்களது.

*சு.வளர்மதி— கல்லாறு.*

**கேள்வி:—** வசூல் ராஜா எம்.பி.பி.எஸ் படம் பார்த்துவிட்டீரா பித்தா? பிடித்ததா?

**பதில்:—** கமலின் அவ்வை சண்முகி, பஞ்சதந்திரம், போன்ற படங்கள் அளவுக்கு வயிறு குலுங்கவில்லை. காதலா காதலா, பம்மல் கே.சம்பந்தம் போன்ற சுமார் ரகம் தான். கதை கொஞ்சம் ஏற்றுக்கொள்ள நெருடுகிறது.

அடிதடிக்காரரான கமல்—கிரேஷி மோகனை கொண்டு மருத்துவ கல்லூரிப் பரீட்சையில் குதிரை ஓடி பாஸ் பண்ணி மருத்துவக் கல்லூரி அனுமதி பெற்று... பிரகாஷ் ராஜ்ஜை கலாய் கிறாரே நம்பவா முடிகிறது... சும்மா கொடுத்த காசுக்கு வஞ்சனை இல்லாமல் புன்னகை செய்துவிட்டு வரலாம்.

*அ.நெவில் குமார்—கற்பிட்டி.*

**கேள்வி:—** பித்தா! உம்மை உமது மனைவி அடிப்பதாக அழுகிறீர். ஆனால், நான் எவ்வளவோ குழப்படி பண்ணியும் எனது மனைவி எனக்கு அடிக்கவே மாட்டேன் என்கிறாளே... பித்தா?

**பதில்:—** ம்...ம்...ம்... மச்சம்... ஐயா மச்சம்... எங்களுக்கெல்லாம் உடம்புக்கு நடுவிலே மச்சம் இருக்கிறது— உமக்கு— மச்சத்துக்கு நடுவே உடம்பு இருக்கிறது... ம்...ம்...ம்...

*கெ.வாருசன்—ஹட்டன்.*

**கேள்வி:—** பித்தா ! எங்கடைய மனைவிமார் எவ்வளவுதான் அழகாக இருந்தாலும்— எங்களுக்கென்னவோ அடுத்தவனின் மனைவிதான் அழகாக இருப்பதுபோல் தோன்றுகிறதே ஏன் பித்தா?

**பதில்:—** அடுத்தவனுக்கும் தன்னுடைய மனைவியை விட உம்முடைய மனைவி தான் அழகாகத் தெரிகிறாளே... என்ன செய்வது இது இயற்கை... மாற்ற முடியாது.

*வை.தாரணி—மானிப்பாய்.*

**கேள்வி:—** பித்தா! எனக்கு காய்ச்சல் வந்த போது நான் வழமையாகக் காட்டும் டாக்டரிடம் போனேன். அவர் இல்லை என்றார்கள். பின்னர் வேறொரு டாக்டரிடம் போனேன். அங்கே பார்த்தால் நான் வழமையாக காட்டும் டாக்டர் தனது காய்ச்சலுக்கு அந்த டாக்டரிடம் வந்து மருந்து எடுத்துக் கொண்டு செல்வதைக் கண்டேன் இவரை நம்பி நாங்கள் இனிமேல் எமது வருத்தத்தை எப்படி காட்டுவது பித்தா?

**பதில்:—** அதுதானே... தனக்கென்று வரும் போது நல்ல இடம் தேடிப்போகும் இவர்கள் பற்றி ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. அவர் டாக்டரல்ல... வசூல் ராஜா எம்.பி.பி.எஸ்...

*யோ.சசிகரன்—அச்சுவேலி தெற்கு*

**கேள்வி:—** என்னை ஒரு நாய் அடிக்கடி துரத்துகிறது. ஏன் பித்தா?

**பதில்:—** நாய்களுக்கு வழமையாக தங்களது ஏரியாவுக்குள் இன்னொரு நாய் வருவது பிடிப்பதில்லை. அதனால் தானாக இருக்கும்.

*து.சௌந்தர ராஜன்—புங்குடுதீவு.*

**கேள்வி:—** பித்தா! காதலித்து விட்டு கல்யாணம் முடிப்பதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு... கையை விடுவது தப்பா பித்தா?

**பதில்:—** எவனவனோ... வேறு எவைகளையோ எல்லாம் கொடுத்துவிட்டு கையை விடுகிறானாம்... நீர் என்ன வாக்குறுதி மட்டும் தானே கொடுத்திருக்கிறீர்... ஜுஜுபி...

**கேள்வி :—** பித்தா! ஒலிம்பிக்கில் நீர் ஓடுவது போலவும், தங்கப்பதக்கம் வெல்வதுபோலவும் கனவு கண்டேன் — கனவு பலிக்குமா?

**பதில்:—** ஒலிம்பிக்கில் ஓடுவதும் — தங்கப் பதக்கம் வெல்வதும் பெரிய பிரச்சினையே அல்ல எனக்கு. ஆனால், நான் தனியாக ஓட மாட்டேன். எனது மனைவி என்னைத் துரத்துவதாக இருந்தால் தங்கப்பதக்கம் எனக்கே.

*நி.கார்த்திகா—கொட்டாஞ்சேனை.*

**கேள்வி:—** பித்தா! உமது மனைவி உம்மைக் கத்தியால் குத்திக் கொலை செய்வதாகக் கனவு கண்டேன். உண்மையிலேயே அது நடந்தால், எமது கேள்விக்கு யார் பதில் தருவது?

**பதில்:—** சே.. எனது மனைவி அப்படியெல்லாம் செய்யக்கூடிய புத்தி கெட்டவள் இல்லை. அப்படிச் செய்துவிட்டால் சமையலுக்கு ஒரு ஆள், தோய்ப்பதற்கு ஒரு ஆள், வீட்டுக்காவலுக்கு ஒரு ஆள், பிள்ளைகளைப் பார்ப்பதற்கு ஒரு ஆள், உழைத்துக்கொடுப்பதற்கு ஒரு ஆள் என்று எத்தனை பேரைத் தேட வேண்டும்... இப்போ all in one ஆக கிடைக்கும் வாய்ப்பை அவள் அசவரப்பட்டுக் கெடுத்துக்கொள்ளும் அவசரக் குடுக்கை அல்ல.



## பித்தனின் கேள்வி

கேள்வி:— சின்னத்திரையா சினிமாவா பெண்களைச் சோம்பலாக்குகின்றது?

## வாசகர் பதில்கள்

*வனித்தா, கொழும்பு.*

சினிமாவில் உள்ள உற்சாகம் குறையாத வரை சினிமாதான் பெண்களைச் சோம்பலாக்குகின்றது.

*டேவிட், திருகோணமலை.*

சிணுங்கள் காட்சிகள் இடம் பெறும் சின்னத்திரையே பெண்களைச் சோம்பலாக்குகின்றது.

*சங்கீதா, மட்டக்களப்பு.*

சின்னத்திரை சின்னச் சின்ன நேரங்களைக் கொண்டு இயங்குவதால் சினிமாவே சோம்பலாக்குகின்றது. காரணம் சினிமா நீண்ட நேர சோம்பலை அல்லவா தருகின்றது.

*விஜிமயூரன், யழ்ப்பாணம்.*

பெண்களை அதிக நேரம் வாய் பிளக்க வைத்திருப்பது சினிமா. எனவே சினிமா தான் அவர்களைச் சோம்பலாக்குகின்றது.

*ரீ.அஞ்சலோ, கெட்டாஞ்சேனை.*

சின்ன வீடுகளில் பெரிய சினிமாத் திரை இல்லை. ஆதலால் சின்னத்திரை தான் பெண்களை சோம்பலாக்குகின்றது.

---

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை செப்டம்பர் 12 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.





**கேள்வி:—** ஒலிம்பிக் போட்டியில் இலங்கை வீராங்கனை சுசந்திகா பங்குபற்றாதது ஏன்?

**பதில்:—** ஒன்று நிச்சயம் தோல்வி என்று தெரிந்து பங்குபற்றாது விடுதல் மற்றையது தான் எதிர்பார்ப்பது கிடைக்காது போகின்றமை.

**இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்பவேண்டிய முகவரி.**

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு— 14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'செல்லமே'
ரீமா சென்
விஷால்



'மீசைமாதவன்' குட்டிராதிகா – ரமணா



'குடைக்குள் மழை'
பார்த்தீபன் –
மதுமிதா



'மதுர'
ரக்ஷிதா–
விஜய்

# சிங்கள மொழியில் 'காசி'

விக்ரம் நடித்து வெளிவந்த காசிப்படம் சூர்யா என்ற பெயரில் சிங்கள மொழியில் தயாராகின்றது. இந்தப் படத்தில் கதாநாயகனாக நிரஞ்சன் நடிப்பதோடு படத்தையும் இயக்குகிறார். இலங்கைத் திரைப்பட உலகின் முன்னணி நடிகர்களான காஞ்சனா மென்டிஸ், தில்ஹானி இருவரும் நாயகிகளாக நடிக்கிறார்கள். இவர்களுடன் பைலட் பிரேமநாத் திரைப்படத்தில் சிவாஜி கணேசனுடன் ஜோடியாக நடித்த மாலினி பொன்சேகா – முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தை சேர்ந்த சரத்பெரேரா, ஸ்ரீசாய் சினி மூவிஸுற்காக தயாரிக்கும் இந்த படத்தின் மேற்பார்வை பொறுப்பை முள்ளும் மலரும், உதிரிப்பூக்கள் போன்ற படங்களை இயக்கிய பிரபல டைரக்டர் மகேந்திரன் ஏற்றுள்ளார். படப்பிடிப்பு செப்டெம்பர் மாதம் இலங்கையில் தொடங்குகிறது.

# 'நிறைஞ்ச மனசு' விஜயகாந்

நடிகர் விஜயகாந் நடிக்கும் 'நெறஞ்ச மனசு' என்னும் சினிமாப் படத்தை தயாரித்து வருகிறார்கள். இப்படத்தின் படப்பிடிப்பிற்கான வெளிப்புறக் காட்சிகள் இந்தியாவின் பல பாகங்களிலும் நடைபெற்று வருகின்றன.

இப்படத்தின் கிளைமாக்ஸ் காட்சிக்காக பழனி அருகே ஐயர் மலைக்கு பின்புறம் ஒரு தனியாருக்கு சொந்தமான நிலத்தில் ஐய்யனார் கோவில் உருவாக்கப்பட்டு வருகிறது. தற்போது இரண்டு பூதப்பொம்மைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றையொட்டி குதிரையில் அரிவாளுடன் ஐய்யனார் அரிவாளுடன் வருவது போன்று சிலை வேகமாக அமைக்கப்பட்டு வருகிறது. தென்னை தோப்புக்குள் அய்யனார் கோவில், கோவில் திருவிழா போன்ற தோற்றத்தை ஏற்படுத்த சுமார் 20 ஏக்கர் சுற்றளவில் தென்னை மரங்கள் நடப்பட்டுள்ளன

இதற்கான வேலைகளை பழனியைச் சேர்ந்த சினிமா நடிகரும் கட்டட கலைஞருமான கே.பி. ஆறுமுகம் பழனியிலுள்ள கட்டடக் கலைஞர்களுடன் இணைந்து புதிய அய்யனார் கோவிலையும், அதற்கான படப்பிடிப்பு தளங்களையும் அமைத்து வருகிறார்

இப்படத்தை 'உன்னை சரணடைந்தேன்' படத்தை இயக்கிய புதிய இயக்குநர் சமுத்திரகனி தயாரிக்கிறார். இப்படத்தில் விஜயகாந்தின் ஜோடியாக மும்பாயைச் சேர்ந்த சூசன் நடித்து வருகிறார்.

# ரோஜாத் தகவல்

ரோஜவுக்கு தற்போது சினிமா வாய்ப்புகள் குறைந்து விட்டன. இதையடுத்து சின்னத்திரைக்கு வந்துள்ளார். ஏராளமான தமிழ், தெலுங்கு படங்களில் நடித்தவர் ரோஜா. இவரும் பிரபல படத் தயாரிப்பாளர் ஆர்.கே.செல்வமணியும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர்.

பின்னர் ரோஜா அரசியலில் குதித்தார். சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் கட்சியில் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு தோற்றார்.

ரோஜாவுக்கு தற்போது சினிமா வாய்ப்புகள் குறைந்து விட்டன. இதையடுத்து சின்னத்திரைக்கு வந்துள்ளார். 'உத்தராயனா' என்ற கன்னட மொழித் தொடரில் நடிக்கிறார். இந்த தொடர் உதயா டி.வியில் திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 7.30 மணிக்கு ஒளிபரப்பாகிறது.

ரோஜா விதவை கேரக்டரில் நடிக்கிறார். தான் சம்பாதித்து குடும்பத்தை காப்பாற்றும் பாத்திரத்தில் நடிக்கிறார். பெண்கள் மத்தியில் இந்த தொடர் நல்ல வரவேற்பை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அப்பாஸ்

முதல் படத்திலேயே உச்சிக்குப்போனவர் அப்பாஸ். ஆனால் இன்று அவர் சிறு சிறு வேடங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார். ஏன் இந்த நிலைமை. அப்பாசிடம் கேட்டோம்.

சினிமாவில் திறமை இரண்டாம் பட்சம் தான். வெற்றி தான் முக்கியமானது. அந்த வெற்றி இப்ப எனக்குத் தூரமா இருக்கு. அதனால் தான் தற்போதைய நிலை. இது நிரந்தரமில்லைன்னு எனக்குத் தெரியும் நம்பிக்கையுடன் அப்பாஸ்.

# சம்பளம் பத்தாது

நியூ படம் மூலம் ரசிகர்களை ஜொள் ஆற்றில் நீந்த வைத்திருக்கும் கிரண் தனது தொப்புள் சமாச்சாரங்களையெல்லாம் தெலுங்கில் காட்ட அவர் நடித்த 'அந்தரு தொய்கலே தெரிகிதே' படம் சூப்பர் சூப்பர் ஹிட். இதைத் தொடர்ந்து தயாரிப்பாளர்கள் அவரை மொய்க்கத் தொடங்கினர். ஆனால் அங்கேயும் தமிழைப் போல சம்பள டிமாண்ட் செய்ய எல்லோரும் பின் வாங்குகிறார்கள்.





'அட்டகாசம்'
அஜித் – பூஜா



'போஸ்'
ஸ்ரீகாந் – சிநேகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'அழகியதீயே'


'குஸ்தி' கார்த்திக் – பிரபு
மான்யா – புளோரா


# பாடகர் வரிசையில்

மிழில் தரணி இயக்கத்தில் விக்ரம் நடித்து பெரிய வெற்றி பெற்றுள்ள தில் அப்படியே தெலுங்கில் மொழி மாற்றம் செய்து வெளியிடப்பட்டுள்ளது. தில் என்று தமிழில் இடம்பெற்ற ஒரு பாடலை விக்ரம் தெலுங்கில் பாடினால் னஸ் செய்ய வசதியாக இருக்கும் என்று தயாரிப்பாளர் நினைத்தார். தயறிந்த விக்ரம், பாடல் பதிவுத் தியேட்டருக்கு வந்து அந்தப்பாடலை ாகமாகப்பாடிக்கொடுத்து அசத்தினார். தவிர, வசூல் ராஜா எம்.பி.எஸ்ஸில் சு சிரிச்சு வந்தா சீனா தானா டேய் என்று பாடி பரபரப்பாகிவிட்ட கருணாஸ் னவி கிரேஸ், மச்சான் மீசை வெட்டருவா... என்ற பாடலை தெலுங்கில் புள்ளார். இதைக்கேட்டு வேறு சில படங்களிலும் கிரேஸுக்கு வாய்ப்பு ுள்ளது. இதனால் அவர் சந்தோஷத்தில் மிதக்கிறார்.

# சத்ய சிபிராஜ்

நடிப்பில் எனக்கு எனது அப்பா தான் குரு என்கிறார் சிபிராஜ். அப்பா வோட சாயல், பாணி இல்லாமல் தனித்தன்மையோடு மாறுபட்ட வேடங்களில் நடிக்கவே விருப்பம்.

இருந்தபோதிலும் என்னையும் மீறி சில இடங்களில் அப்பாவோட சாயல் வந்தாலும் அதில் ஒன்றும் தப்பில்லை. அவர் மக்களுக்கு மிக வும் பிடித்த நடிகர். அதனால் அப்பா வின் சாயல் நடிப்பில் தெரிவது எனக்கு பிளஸ் பாயிண்ட் தான் என்கிறார் இந்தக் கலை வாரிசு.


பிரபு தேவா – நமீதா
'நான் ரெடி நீ ரெடியா'

# பேட்டி த்ரிஷா பேட்டி

**ள்வி– ...ங்கள் குடும்பம் பற்றிச் சொல்லுங்கள்**
*ில்– என் தந்தை பிசினசில் இருக்கிறார். தாயார் என்னுடனேயே இருக்கிறார். பெற்றோருக்கு ஒரு பெண்.*
**ள்வி– எவ்வளவு படித்து இருக்கிறீர்கள்?**
*ில்– நான் கல்லூரியில் பிசினஸ் அட்மினிஸ்ரேசன் படித்துக்கொண்டு போது சினிமா வாய்ப்பு வந்து நடிக்க வந்துவிட்டேன். ஆனாலும் படிப்பு பம் என்று பெற்றோர் கூறி வருகிறார்கள். இதனால் நடித்துக்கொண்டே ப தொடர்கிறேன்.*
**ள்வி– சினிமா பிரவேசம் எப்படி?**
*ில்– என் குடும்பத்துக்கும் சினிமாவுக்கும் சம்பந்தம் இல்லை. மாடலிங் பில் நான் இருந்த போது எதிர்பாராத விதமாக நடிக்க வாய்ப்பு வந்தது.*
**ள்வி– முதல் படம் எது?**
*ில்– முதலில் நடித்த படம் லேசா லேசா. வெளி வந்த படம் மௌனம் தே.*
**ள்வி– நீங்கள் நடித்ததில் பிடித்த படம் எது?**
*ில்– 9 தமிழ்ப்படங்களும், 2 தெலுங்குப் படங்களும் நடித்து இருக்கிறேன். நடித்த எல்லாப் படங்களுமே எனக்குப்பிடிக்கும். லேசா லேசா படம் மட்டும் பாவத்துக்கு ஒத்துவருகிறது மாதிரி இருந்தது.*
**ள்வி– தெலுங்கில் வர்ஷம் வெற்றி பற்றி**
*ில்– தெலுங்கு சினிமாவில் எனக்கு பெரிய பிரேக் கொடுத்த படம் வர்ஷம். ப் பிடித்திருந்தது. மறக்க முடியாத படம்.*
**ள்வி– ...சாந்தக் குரலிலா பேசி நடிக்கிறீர்கள்?**
*ில்– இல்லை. இதுவரை டப்பிங்கில் பேசித்தான் நடிக்கிறேன். எனக்கு ப்பு பிரச்சினை உள்ளது.*
**ள்வி– நடிப்பு, நடனம் பயிற்சி உண்டா?**
*ில்– நடிப்பு பயிற்சி இல்லை. நடிக்க வருவதற்கு 2 மாதங்களுக்கு முன்பு ராஜு" ்திடமும், கலா மாஸ்டரிடமும் நடனம் பயிற்சி பெற்றேன்.*
**ள்வி– பொழுதுபோக்கு எப்படி?**
*ில்– இன்டர்நெட் பார்ப்பேன். புத்தகம் படிப்பேன். சினிமாவும் பார்ப்பேன்.*

# அது லைலா!

சில நடிகைகள் சினிமாவுக்கு வந்தது கலைச்சேவை செய்வதற்காகத் தான். பணம் எங்களுக்கு முக்கியமல்ல என்று கூறுவர். ஆனால் இந்த விஷயத்தில் லைலா வெளிப்படை.

நடிப்பதற்காகத்தான் சினிமாவில் இருக்கிறோம். சினிமாவினால் தான் எங்களுக்கு பணம், புகழ், பெருமை எல்லாம் கிடைக்கிறது. கைநிறைய காசு கொடுப்பதால் விளம்பரப் படங்களிலும் நடிக்கிறோம். நடிப்பு மட்டுமே தொழில். கலைச்சேவையே என் குறிக்கோள். காசு, பணம் பற்றி கவலைப்பட வில்லை" என்று கூறுமளவுக்கு நான் முட்டாள் அல்ல என்கிறார் லைலா.



# சிநேகா - மீனா

விளம்பர பட உலகிலும் தற்போது முன்னணியில் இருப்பது நடிகை ஸ்நேகா தானாம். வாரத்திற்கு இரண்டு நாள் விடுமுறை கிடைக்கிறது. அந்த நாட்களில் சூட்டிங் வைத்துக் கொள்வதால் எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என்று ஸ்நேகா பச்சைக் கொடி காட்ட அவரை மொய்க்க ஆரம்பித்துள்ளனவாம் விளம்பரப்பட நிறுவனங்கள்.

தமிழில் சிவாஜி நடிப்பில் வெளிவந்து பெரிய வெற்றி பெற்ற முதல் மரியாதை கன்னடத்தில் விஷ்ணுவர்த்தன் நடிப்பில் தயாராகிறது. இதில் தமிழில் ராதா செய்த வேடத்தை மீனா செய்யவுள்ளாராம். ராதாவைப் போல் மீனாவும் மேக்கப் இல்லாமல் நடித்தாலும் நடிப்பார்.

# சூர்யாவின் தம்பி

த எழுத்துப் படத்தில் நடித்த போது மணிரத்தினத்திடம் ாளராக வேலை பார்த்துவந்த தனது தம்பி கார்த்திக்கின் யைப் பார்த்து வியந்த சூர்யா அவர் இயக்கத்தில் ஒரு படத்தில் முடிவெடுத்துள்ளாராம். அண்ணன் இயக்கத்தில் தனுஷ் போல் பக்கத்தில் சூர்யா.




'துள்ளல்' பிரவிந் –
குர்லின் – சோப்ரா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு பொலிஸ் அதிகாரிகளை வலையில் வீழ்த்தியது எப்படி?

தனது அழகாலும், சாதுரியமான பேச்சாலும் பொலிஸ் அதிகாரிகளை மயக்கி, அவர்களிடமிருந்து லட்சக்கணக்கில் பணம் பறித்துள்ளார் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜெயலட்சுமி என்ற பெண்.

இவர் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களையும், ஒரு எஸ்.பி. யையும் திருமணம் செய்த தகவலும் தற்போது தெரிய வந்துள்ளது.

வேலூரில் பொலிசாரிடம் சிக்கிய ஜெயலட்சுமி பற்றிய பரபரப்பான தகவல்கள் ஒவ்வொன்றாக தற்போது வெளியே வர ஆரம்பித்துள்ளன.

திருநெல்வேலியில் டி.எஸ்.பி. யாக பணியாற்றிய ராஜா என்ற பெயருடைய பொலிஸ் அதிகாரி தான் முதலில் ஜெயலட்சுமியின் வலையில் வீழ்ந்தார். ஜெயலட்சுமிக்காக பொலிஸ் குடியிருப்பிலேயே தனியாக வீடு எடுத்து அவரைக் குடியமர்த்தினார்.

ஜெயலட்சுமி தங்கியிருந்த வீட்டுப் பக்கம் சென்றதற்காகவே பல பொலிஸார் பழி வாங்கப்பட்டனர் அந்த அதிகாரி சிலரை வேறு ஊருக்கு இடமாற்றம் செய்தார். அந்தளவுக்கு ஜெயலட்சுமி மீதான மோகம் இவரை ஆட்டிப் படைத்தது. முதன் முதலில் அந்த அதிகாரி தான் ஜெயலட்சுமியை திருமணம் செய்தார். இந்த விவகாரம் வெளியே தெரிந்ததால் அதிகாரி மதுரைக்கு இடமாற்றப்பட்டு, பின்னர் திண்டுக்கல்லுக்கு மாற்றப்பட்டார். அதிகாரியின் மனைவிக்கு இந்த விஷயம் தெரிந்ததால் அவர்கள் வீட்டில் புயல் வீசியது. இதனால் பல முறை அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டு அதிகாரியின் மனைவி தற்கொலை செய்து கொண்டார்.

அதன் பின்னர் எந்தத் தடையுமின்றி ஜெயலட்சுமியுடன் அந்த அதிகாரி ஜாலியாக இருந்து வந்தார். அதன் பின்னர் அங்கிருந்து எஸ்.பி.யாக பதவி உயர்வு பெற்று அந்த அதிகாரி மாறுதலாகி சென்று விட்டார். அந்த அதிகாரியிடமிருந்து ஜெயலட்சுமி ரூபா 10 லட்சம்வரைபணம் பெற்றுள்ளார்.

அந்த எஸ்.பி.யுடன் சேர்ந்து அடிக்கடி கோவைக்கு சென்ற போது அங்கிருந்த ஓர் இன்ஸ்பெக்டரின் 'நட்பு' ஜெயலட்சுமிக்கு கிடைத்தது.

## இரண்டாவது திருமணம்

அதன் பின்னர் கோவைக்கு ஜெயலட்சுமி சென்றார். அந்த இன்ஸ்பெக்டருடன் கோவையில் தங்கியிருந்தார். மற்றைய பொலிஸ் அதிகாரிகளிடம் தன்னை அறிமுகப்படுத்தும் போது ஒரு எஸ்.பியின் பெயரைச் சொல்லி அவரது தங்கை என்று கூறிக்கொள்வார். எஸ்.பியின் தங்கை என்பதால் ஏற்பட்ட நெருக்கத்தை பயன் படுத்திமேலும் பலரை தனது வலையில் வீழ்த்தினார். அந்த இன்ஸ்பெக்டருடன் நெருக்கம் அதிகமானவுடன் அவரையும் திருமணம் செய்து கொண்டார். சிலமாதங்கள் இருவரும் அங்கேயே வீடுபார்த்து குடும்பம் நடத்தினர். இந்த நேரத்தில் ரூபா 7 லட்சம் வரை அந்த இன்ஸ்பெக்டரிடம் பணம் வாங்கியுள்ளார் ஜெயலட்சுமி.

அதன் பின்பு கோவையில் இருந்து தனது இருப்பிடத்தை ஈரோட்டிற்கு ஜெலட்சுமி மாற்றிக் கொண்டார். அங்கு பணியாற்றிய மற்றொரு இன்ஸ்பெக்டருடன் ஜெயலட்சுமிக்கு பழக்கம் ஏற்பட்டது. அவருடன் உல்லாசமாகப் பழகி அவரையும் தனது காம வலையில் வீழ்த்தினார். அந்த இன்ஸ்பெக்டரிடம் இருந்து ரூபா 6 லட்சம் வரை பணம் பெற்றார்.

ஈரோட்டில் இருந்து அடுத்து மதுரைக்கு ஜெயலட்சுமி வந்தார். அப்போது உசிலம் பட்டியில் பணியாற்றிய இன்ஸ்பெக்டர் ஒருவரை ஜெயலட்சுமி சந்தித்தார். இந்த இன்ஸ்பெக்டரின் தந்தையும் எஸ்.பியாக மதுரையில் பணியாற்றியவர். இன்ஸ்பெக்டருடன் உசிலம் பட்டியில் சில மாதங்கள் குடும்பம் நடத்தினார்.

இன்ஸ்பெக்டருக்கு திருமங்கலத்திற்கு மாறுதல் வந்தபோது ஜெயலட்சுமியும் அங்கிருந்து இடம் பெயர்ந்தார். இன்ஸ்பெக்டர் ஜெயலட்சுமியை 4 திருமணம் செய்து கொண்டார். விவகாரம் இன்ஸ்பெக்டரின்



ஜெயலட்சுமி

மனைவிக்கு தெரிந்ததும் அவர்கள் குடும்பத்திலும் புயல் வீசியது. இந்த ஆத்திரத்தில் இன்ஸ்பெக்டரின் மனைவி விஷம் குடித்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

அதன் பின்னர் கணவன் – மனைவி இருவரும் பிரிந்து வாழ்கின்றனர். ஜெயலட்சுமி அழகில் மயங்கிய இன்ஸ்பெக்டர் தனது அன்புப் பரிசாக மாருதி எஸ்டீம் கார் ஒன்றை வாங்கிக் கொடுத்தார். இன்ஸ்பெக்டரிடம் இருந்து ரூபா 15 லட்சம் வரை ஜெயலட்சுமி வாங்கியுள்ளார்.

இன்ஸ்பெக்டருடன் நெருக்கமாக இருந்த போது மதுரையில் பல பொலிஸ் அதிகாரிகளுடன் ஜெயலட்சுமிக்கு பழக்கம் ஏற்பட்டது. தன்னை பெண் பொலிஸ் இன்ஸ்பெக்டர் என்றும் எஸ்.ஐ. என்றும், டி.எஸ்.பி என்றும் இடத்திற்கு தக்கபடி ஜெயலட்சுமி மாற்றிக் கூறிக்கொள்வார். பலரையும் நம்ப வைப்பதற்காக பொலிஸ் யூனிபோமில் அவ்வப் போது செல்வதும் வழக்கம்.

## ஏமாந்த தொழிலதிபர்

இப்படி பொலிஸ் அதிகாரிகளை ஏமாற்றி லட்சக்கணக்கில் பணம் வாங்கிய ஜெயலட்சுமி நகை, பட்டுப்புடைவைகள், மொபைல் போன் என்று ஆடம்பரமாக வாழ்ந்தார். பணம் கொடுத்தவர்களின் நெருக்கடி அதிகமானதும் ஜெயலட்சுமி மதுரையில் இருந்து உடுமலைப்பேட்டைக்குஇடம்பெயர்ந்தார். அங்கு கோழிப்பண்ணைவைத்துள்ள தொழில் அதிபர் ஒருவரை தனது காமவலையில் சிக்கவைத்தார்.

ஜெயலட்சுமியை திருமணம் செய்ய தொழில் அதிபர் விரும்பினார். இதற்காக ரூபா ஐம்பது லட்சம் கொடுப்பதற்கு தொழில் அதிபர் இணங்கினார். அந்தத் தொழிலதிபர் இதற்குத் தயாராக தனது குழந்தைகளை பல்லடத்தில் உள்ள பள்ளி விடுதி ஒன்றில் சேர்த்தார்.

திருமணம் நடப்பதற்கு முன்பாக மதுரை வந்த அந்த தொழிலதிபருக்கு ஜெயலட்சுமியின் பழைய வாழ்க்கை பற்றிய அதிர்ச்சித் தகவல்கள் தெரியவந்தன. இதனால் ஜெயலட்சுமி விரித்த வலையிலிருந்து அந்தத் தொழிலதிபர் தப்பமுடிந்தது. பண் நெருக்கடி அதிகரித்ததால் தலைமறைவான போது ஜெயலட்சுமி மீது பலரும் முறைப்பாடு கூறத் தொடங்கினர். இதனை அடுத்து அவர் கைதானார்.

## சொற்சிலம்பம் போட்டி இல.124

சொற்சிலம்பம் 124 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் செப்டெம்பர் 06 ஆம் திகதி ஆகும். விடைகள் செப்டெம்பர்19 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் செப்டெம்பர்26ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.121க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,

கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.123

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | 2 வ | 3 த | ணு | 4 சு | ■ | 5 மா | 6 தா |
| 7 த | ட | ம் | ■ | 8 ப | 9 க | ர் | வு |
| ம் | ■ | 10 ப | ரு | த் | 11 தி | ■ | த |
| 12 ப | 13 ரி | தி | ■ | 14 தி | ரை | 15 த | ல் |
| 16 ர | சி | ■ | 17 கூ | ரை | ■ | ர | ■ |
| ம் | ■ | 18 க | ட | ■ | 19 த | கு | 20 தி |
| ■ | 21 க | ர | ம் | 22 கு | வி | ■ | ற |
| 23 க | ண் | டி | ■ | 24 வி | ல் | ல | ன் |

## சொற்சிலம்பம் போட்டி இல.124

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | | |
| 10 | | 11 | | ■ | 12 | | ■ |
| | ■ | 13 | | | ■ | 14 | 15 |
| ■ | 16 | | | ■ | 17 | | |
| 18 | | | ■ | 19 | | ■ | |
| 20 | | ■ | 21 | | | 22 | ■ |
| 23 | | | | | ■ | 24 | |

## சொற்சிலம்பம் போட்டி இல.124

**இடமிருந்து வலம்**

1. வலமிருந்து பார்த்தாலும் இந்த ஏளனப் புலவர் தோன்றுவார்.
5. துணை என்று பொருள் தரும்.
7. காயத்தின் மறு/ அடையாளம்.
8. வணங்குதல் / தொழுதல் / கும்பிடல்.
10. பல மரக்கறிகளுடன் வரும். இட்லிக்கு தோசைக்கு பக்க உணவு.
12. சாப்பிடு.
13. நூறு. ரூபாவிலும் நூறு.
14. பாவம் செய்தவன்.
16. நெருப்பு/தீ.
17. சிறிது ஆனால் காரம் பெரிது.
18. பசளை.
19. வடிவம்.
20. குளிர்மை.
21. இனிமையானது / சீனித் தயாரிப்புக்கு மூலம்
23. வைகறையில் கீழ் வானத்தில் தோன்றும்.
24. விதலை: நிலைமை.

**மேலிருந்து கீழ்**

1. கமக்காரன்.
2. கொடுமையான/கடுமையான.
3. திருடுதல்:
4. கண்.
5. இணக்கம்.
6. பலதையும் குறிக்கும்/வாயில் இருப்பதையும் குறிக்கும்.
9. அரசன்/ஊர்/புனித இடம்.
11. விவசாயம்.
15. பகுபத உறுப்பில் ஒன்று.
16. அகப்பை போன்றது/ அள்ளிப்போட உதவும்.
17. கறுப்பு நிறத்தைக் குறிக்கும் அடைமொழி.
18. ஒத்தாசை.
19. உருண்டு செல்லக்கூடியது.
21. பன்மையையும் குறிக்கும், போதையையும் தரும்.
22. நெருப்பில்லாமல் வராது.

## சொற்சிலம்பம்-121 பரிசு பெறுவோர்.

1. சு.திருவரங்கன்,
   இந்துக்கல்லூரி வீதி,
   பண்டத்தரிப்பு.
2. அன்ரனிற்றா செபஸ்ரியாம்பிள்ளை,
   ''வர்ணவாசம்''
   32, கோவில் வீதி, சுண்டிக்குளி,
   யாழ்ப்பாணம்.
3. திருமதி.ம.வரதராஜன்,
   மணிமேகலை இல்லம்,
   வந்தாறுமூலை.

## பாராட்டுப்பெறுவோர்

1. செல்வி: எஸ்.நீரஜா
   14/37, பாரதி ஒழுங்கை,
   மட்டக்களப்பு.
2. திருமதி.ரபீக்கா முஹம்மது யூசுப் ஜான்
   31, கல்லூரி வீதி,
   திருகோணமலை – 3100.
3. திருமதி: எம்.சி. ஆரோக்கியநாதர்
   8 ஆம் வாய்க்கால்,
   கிளிநொச்சி.
4. திருமதி: ஜீவா கணபதி
   "C", 2/2, எல்விட்டிகல தொடர்மாடி,
   கொழும்பு – 08.
5. ம.பிரகாஷ்
   451/2, திருஞானசம்பந்தர் வீதி,
   திருகோணமலை.
6. க.கமால்தீன்
   புன்னக்குடாவீதி,
   ஏறாவூர் – 3.
7. சி.அரசரத்தினம்
   சங்குவேலி
   மானிப்பாய்.
8. இ.கோபாலபிள்ளை,
   மானிப்பாய் வீதி,
   யாழ்ப்பாணம்.
9. திருமதி: நவம்
   36. பழைய கல்முனை வீதி,
   கல்லடி மட்டக்களப்பு.
10. ஆர்.இராஜேந்திரா
    $21^{B}$, கனகரட்ணம் வீதி, அரியாலை,
    யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபான வகைகளும் ஏற்படும் தீங்குகளும்

**கேள்வி: ஆண், வயது 30. எனது உத்தியோக நிமித்தம் கேளிக்கை விருந்துகளில் கலந்து கொண்டு மது அருந்துவது வழக்கம். ஆனால் குடிப்பிரியன் இல்லை. சிலவேளை வாரத்துக்கு மூன்று தடவையாவது இப்படி விருந்துகளுக்குப் போக வேண்டிய கட்டாயம் உண்டு. எனவே மது அருந்துவதைத் தவிர்க்க முடியாது. எந்த வித மதுபானவகைகள் உடலுக்குத் தீங்கு விளைவிக்காதவை என்பதை, மருத்துவ ரீதியில் நீங்கள் ஆலோசனை தந்தால் உதவியாக இருக்கும்.**

**பதில்:** விஷத்தில் நல்ல விஷம், கெட்ட விஷம் என்பது இல்லாதது போல, காட்டில் வாழும் கொடும் புலிகளில் நல்ல புலி, கெட்டபுலி என்று வகை பிரிக்க இயலாமல் இருப்பது போல, மதுவிலும் குடிப்பதற்கு நல்ல மது, கெட்ட மது என்று பிரித்துக் கூறுவது அபத்தமானது.

எல்லாவகையான மதுபானங்களிலும் உள்ள அடிப்படையான பொருள்Ethyl Alcohol எனப்படும். இந்தப் பொருள் இரத்தத்தில் கலக்கும் போது குறுகிய மன சந்தோஷத்தையும், உற்சாகத்தையும், உடலுக்குச் சக்தியையும் கொடுக்கின்றது. ஒவ்வொரு மதுபானத்திலும் இந்த அல்கஹோலின் – மதுசாரத்தின் – அளவு வித்தியாசப்படுகிறது.

உதாரணமாக பியரில் (BEER) 3 – 8 சதவீதம் என்ற அளவிலும், திராட்சை மதுவான வைனில் (WINE) 8 – 14 சதவீதத்திலும் பிரண்டி (BRANDY), விஸ்கி (WHISKEY), ரம் (RUM), வொட்கா (VODKA) போன்றவற்றில் 40 – 50 சதவீதத்திலும், எமது சாராயத்தில் 30 – 35 சதவீதத்திலும் ஒரே விதமான – மதுசாரம் உள்ளது. இதனால் குறைந்த அளவில் மதுசாரம்தான் உள்ள மதுபானங்களை அதிகளவில் அருந்தினால் தான் போதை ஏறுகிறது.

மதுபானம் உண்மையில் ஒரு விஷமல்ல. அது ஒரு மருந்து என்று கூடச் சொல்லலாம். மிதமான அளவில் மதுபானம் நல்ல கொலஸ்திரோல் எனப்படும் HDL CHOLESTROL லின் அளவை அதிகரிக்கின்றது; இரத்தக் குழாய்களில் இரத்தம் கட்டியாவதைத் தடுக்கின்றது; இரத்தக் குழாய்களைக், குறிப்பாக இருதயத்தைப் போஷிக்கும் கொரனரி (CORONARY) இரத்த குழாய்களை விரிவடையச் செய்கிறது. இந்த நல்ல குணங்களைக் கொண்ட மதுவுக்கு – அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்ற பழமொழி பொருத்தமானது. மதுபானம் குடிப்பவர்கள், தமது குடிக்கும் அளவை DRINK என்று குறிப்பிடுவார்கள். நான் ஒரு டிரிங் எடுப்பேன் அல்லது இரண்டு டிரிங் தான் என் அளவு என்பது அவர்களின் குடிப் 'பாஷை'யாகும். இந்த டிரிங்க் என்ற அளவு 10 கிராம் மதுசாரத்திற்குச் சமனானது. அதனை அவர்கள் அருந்தும் மதுபானவகைகளின்அளவில் சொன்னால் 340 மி.லீ. பியர், 115 மி.லீ. வைன், 60 மி.லீ. சாராயம், 43 மி.லீ. விஸ்கி, பிராந்திஎன்பவைஒருடிரிங்குக்குச்சமனானவைகும். மிதமான மது அருந்துதல் என்பது ஆண்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு டிரிங்கும், பெண்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு டிரிங்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மிதமான அளவு குடித்தால் நோய்கள் வராது என்று தப்புக் கணக்கு போடக்கூடாது. மதுவுக்கு இன்னொரு கெட்ட குணம், குடிப் பழக்கத்தை ஏற்படுத்தும் போதைக் குணத்தை (ADDICTIVE) கொண்டுள்ளதுதான். மிதமான அளவைத் தொடர்ந்து வழக்கமாகக் குடித்துவந்தால் கூட – அவை உடலுக்குத் தீங்குதரும். மெல்ல மெல்ல மதுசாரமானது உடலில் சேரும் போது ஈரல் கலங்கள், மூளையின் கலங்கள் கொஞ்சம்கொஞ்சமாக அழிந்து போகின்றன. உங்களைப் போன்றவர்கள் விருந்துகளில் குடிப்பதை SOCIAL DRINKING என்று சொல்வார்கள். உங்களை அறியாமலே இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்து – மதுவுக்கு அடிமையாகும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும். எனவே பொதுவில் மதுவைத் தவிர்த்தலே உங்களைப் போன்றவர்களுக்குச் சிறந்தது. அதுசரி உத்தியோக விருந்துகளில் மதுவை அருந்துவற்கு ஒரு காரணம் உண்டு. மது மனிதனில் எதைச் செய்வது, எதைச் செய்யாமல் விடுவது, எதைப் பேசுவது, எதைப் பேசாமல் விடுவது போன்ற கட்டுப்பாடுகளை (INHIBITIONS) அகற்றி விடுகிறது. இதனால் மது அருந்திக் கொண்டு 'பிஸினஸ்' விஷயங்களைப் பேசுவது வர்த்தகப் பரிமாற்றங்கள் (DEALS) செய்வது – பங்கு பெறும் இரு சாராரும் மனம் விட்டு, மனம் திறந்து பேச வழி செய்கிறது.



ஆனால், இப்படியான நேரங்களில் கட்டாயம் மது அருந்திக் கொண்டுதான் பேசவேண்டும் என்பதில்லை. எனக்கு தெரிந்த பெரிய வர்த்தக புள்ளிகள், பெரும் நிறுவனங்களின் முகாமையாளர்கள் மதுவை தொடுவதே இல்லை. மது பரிமாறும் போது, தாம் மது உபயோகிப்பதில்லை என்று பகிரங்கமாகவே மறுப்பதை தமது பலம், என்று சொல்லுகின்றார்கள். எனவே நீங்களும் மதுவை மறுப்பதை ஒரு நாகரீகமான செயல் என்று மனதிற் கொண்டு – மதுவைத் தவிருங்கள்.

**கேள்வி: எனது மகள், 14 வயது. அவரது பாடசாலையில் பொது சுகாதார மருத்துவர் ஜெர்மன் சின்னம்மை தடுப்பு ஊசி போடச் சொல்லி ஆலோசனை கூறியுள்ளார். சிறு வயதில் அவருக்கு சகல தடுப்பூசிகளும் போட்டுள்ளேன். இப்பொழுது இந்தத் தடுப்பூசி அவசியமா?**

**பதில்:** முதலில் உங்கள் பெண்ணுக்கு வயது 14. எனவே நிச்சயம் சிறு வயதில் தடுப்பூசி போடப்படும்போது, ஜெர்மன் சின்னம்மை (RUBELLA) க்கு உரிய தடுப்பூசி போடப்பட்டிருக்க மாட்டது. ஏனெனில் ருபெல்லா தடுப்பூசி இலங்கை தடுப்பூசி அட்டவணையில் நடைமுறைக்கு வந்து ஆறு வருடங்கள் தான் ஆகின்றன. ருபெல்லா தடுப்புமருந்து தற்பொழுதுள்ள தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி சகல குழந்தைகளுக்கும் 3 வயது ஆரம்பத்தில் கொடுக்கப்படுகிறது. அதன் பின்னர் பெண் குழந்தைகளுக்கு 12 – 15 வயதிற்கிடையில் இன்னொரு தடவை தரப்படுகிறது. ருபெல்லா தடுப்பூசி கொடுக்கப்பட்டதோ, இல்லையோ என்று தெரியாமல் இருந்தால் கூட திருமணமாகும் பெண்கள் – திருமணத்திற்கு 3 மாதங்கள் முன்னர் கட்டாயம் இந்த தடுப்பூசியை போட்டுக் கொள்வது அவசியம். ஏனென்றால் கர்ப்ப காலத்தில் பெண் ருபெல்லா தொற்றுக்கு ஆளானால், அவள் மூலம் அந்த நோய் கருவிலிருக்கும் குழந்தைக்குப் பரவும். இதனால் குழந்தைக்கு கடுமையான பிறவிக் குறைபாடுகள் (CONGENITAL MALFORMATIONS) ஏற்படும். செவிட்டுத்தன்மை, கிளைக்கோமா (GLYCOMA) என்ற கண்நோய், கண்ணில் பூவிழுதல் (CATARACT), மனவளர்ச்சிக் குறைவு, இருதய நோய்கள் என்பன இந்தக் குறைபாடுகளாகும். மூன்று மாத கர்ப்பகாலத்தில் ருபெல்லா நோய்த் தொற்று ஏற்பட்டால் அதிகளவில் இந்தக் குறைபாடுகள் ஏற்படும். இதனை CONGENITAL RUBELLA SYNDRO MEஎன்று மருத்துவர் கூறுவர்.

எனவே – முன்னர் போட்டிருந்தாலும் பரவாயில்லை, உங்கள் மகள் ருபெல்லா தடுப்பூசி எடுப்பது நன்மையைத் தான் தரும்.

**கேள்வி: வயது 40, ஆண். கடந்த 10 வருடங்களாக நீரிழிவு நோயாளியாக இருக்கிறேன். கடந்த சில வாரங்களாக எனது இடது கண்ணுக்குள் சிறு வஸ்துகள் மிதந்து செல்வது போன்ற ஒரு உணர்வு, பார்வையும் குறைவு. கண் வைத்தியரிடம் காட்டினேன். கண்ணுக்குள் இரத்த குழாய்கள் உடைந்திருப்பதாகக் கூறி – உடனடியாக லேசர் சிகிச்சை செய்யச் சொன்னார். உங்கள் ஆலோசனை என்ன?**

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராச்சி மாவத்தை
கொழும்பு - 14

**பதில்:** கண் வைத்தியரை விட அதிகம் கண்ணைப் பற்றி படித்தவன் அல்ல நான். நீங்கள் இப்படிப் பல பேரிடம் ஆலோசனை கேட்டுக், கேட்டே பார்வையை இழக்கப் போகின்றீர்கள். நீரிழிவு நோயாளிகளுக்கு DIABETIC RETINOPATHY என்ற விழித்திரை நோய் ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகம். இரத்தீந்தில் உள்ள அதிகளவு சீனித்தன்மை கண்களின் இரத்தக் குழாய்கள், மற்றும்ஒளி உணரும் பகுதியான – நரம்பு வலைகளைச் சேதப்படுத்துகிறது. மேலும் அதிக இரத்த அழுத்தம், கொலஸ்திரோல், சிறுநீரக நோய் ஆகியவற்றால் கூட இந்த நோய் வரலாம். விழித்திரை நோய் இருக்கிறது என்று கண்டறியப்பட்டால் லேசர் ஒளிக்கதிர் உபயோகித்து, இரத்தம் கசியும் இடங்களை உறைய வைக்க வேண்டும். இதனை LASER PHOTOCOAGULATION என்பர். கண்ணுக்குள் உள்ள VITREOUS HUMOR என்ற திரவப் பொருளினுள் இரத்தக்கசிவு ஏற்பட்டால் VITREOUS சத்திரசிகிச்சை செய்யப்படும். இந்தச் சிகிச்சைகள் மூலம் மேலும் பார்வைத்திறன் இழப்பைத் தடுத்து நிறுத்தலாமே தவிர – பழையபடி சாதாரண பார்வையைப் பெறலாம் என்று நிச்சயமாகக் கூற முடியாது. அதனால்தான் உங்களை உடனடியாக உங்கள் கண் சிகிச்சை நிபுணரின் ஆலோசனைப்படி லேசர் சிகிச்சைக்குப் போகும் படி ஆலோசனை சொன்னேன்.

# உலகிலேயே உச்ச பாதுகாப்பு பெற்றுள்ள நீதிபதி

றெய்ட் ஜுகி அல் சாடி 34வயது இளைஞர். அழகான மனைவி, மூன்று குழந்தைகள். வீட்டில் தங்கியுள்ள போதும் வெளியில் செல்லும் போதும் எப்போதும் பீரங்கி வண்டி, ஹெலிக்கொப்டர் பாதுகாப்பு. வீட்டுக்கு ரேடார் கண்காணிப்பு.

யார் இவர்? இவர்தான் விசாரணைக் கூண்டில் நிற்கும் சதாம் ஹுசேனுக்கு தண்டனை தரப்போகும் நீதிபதி.

சதாம், அவருடைய அமைச்சர்கள், அதிகாரிகள் என்று 11 பேர் மீது கொலை, கொள்ளை, மோசடிகள் என்று பல வழக்குகள் போடப்பட்டுள்ளன.

சதாமை விசாரிக்கப் போவது எந்த நீதிபதி என்பதை அமெரிக்கப்படை அதிகாரிகள் ஆரம்பத்தில் இருந்தே ரகசியமாக் வைத்திருந்தனர். நீதிபதியின் பெயரை வெளியிடவேண்டாம் என்று பத்திரிகையாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நீதிபதிபெயரைவெளியிடுவது இல்லை என்று ஒப்புக்கொண்டாலும், முதல் நாளே சதாமுடன் சில நிமிடம் நீதிபதி காட்டமாகப் பேசியதால், நீதிபதியை அடையாளம்காட்ட வேண்டியதாகி விட்டது.

'நான் குற்றவாளி அல்ல, அமெரிக்க அதிபர் புஷ் தான் உண்மையான குற்றவாளி' என்று சரமாரியாக சதாம் பேசியதால் நீதிமன்ற அறை பரபரப்பானது. சதாமை பல விதங்களில் புகைப்படங்கள் எடுத்து பத்திரிகையில்போட்டுத்தள்ளி விட்டனர்.

ஆனால், நீதிபதியை சர்ச்சைக்குள்ளாக்கி விடவில்லை என்பது ஆறுதலான விஷயம். 26 நிமிட பரபரப்பான விவாதம், உலகம் முழுவதும் பந்தரிகைகளில் விளக்கமாக வந்ததை அடுத்துதான் நீதிபதியின் பெயர் வெளியே பிரட்லமானது.

சதாமை விசாரிக்க எந்த நீதிபதியும் முன்வரத் தயங்கிய போது, ஜுகி அல்சாடிதான் தைரியமாக முன்வந்தார். இவர் சமீபத்தில் அமெரிக்காவின் நியூயோர்க்டைம்ஸ் பத்திரிகைக்கு பேட்டி அளித்தார்.

''சதாம் முன்பு எங்களுக்கு தலைவர்தான். ஆனால், இப்போது அவர் சட்டத்தின் முன் குற்றவாளி. என் முன் அவர் குற்றவாளியாகத் தான் நிற்கிறார். நான் அவரை இதுவரை கண்டதில்லை.

என் முன் நிற்கும் குற்றவாளிகளில்ஒருவராகத் தான் நான் சாதாமைப்பார்க்றேன். எந்த தயக்கமுமின்றித் தான் விசாரிக்கிறேன்.

சதாம் இப்போது நாட்டை ஆளவில்லை என்பது மக்களுக்கு ஆறுதலான பெரிய



விஷயம்'' என்றார்.

சதாம் முதன் முதலில் ஆஜரானபோது பத்திரிகையாளர்கள் நீதிமன்றில் அனுமதிக்கப்பட்டனர். இனிவரும் விசாரணைகள் எதுவும் பகிரங்கமாக நடக்காது. ரகசியமாகத்தான் நடக்கும். பத்திரிகையாளர்களை விடுவது சாத்தியமில்லை. விசாரணையும் இப்போதுதான் ஆரம்பநிலையில் இருக்கிறது.

கிட்டத்தட்ட 10 ஆயிரம் மைல் தூரத்தை நாம் கடக்கவேண்டும். இப்போதுதான் ஒரு காலடி வைத்துள்ளோம் என்று நீதிபதி சாடி கூறுகிறார். இதில் இருந்து சதாம் வழக்கு விசாரணை ஆண்டுக்கணக்கில் இழுக்கும் என்பது மட்டும் புரிகிறது. ஆரம்ப விசாரணையே தாமதமானது. காரணம் தன் சார்பில் வழக்காட வழக்கறிஞர்களை அமர்த்துவேன் என்று கூறிய சதாம் நீதிமன்ற வழக்கு ஆவணத்தில் கையெழுத்திடவில்லை.

இப்போது வக்கறிஞர்கள் குழு பட்டியல் தயாரிக்கப்பட்டு, விசாரணை தொடர வழி செய்யப்பட்டுள்ளது. எகிப்து, ஜோர்டான்... ஏன் இந்தியாவில் இருந்தும் கூட சதாம் மற்றும் அவரது சகாக்களுக்காக ஆஜராக வழக்கறிஞர்கள் தயாராகவுள்ளனர்.

தமிழகத்தில் மனித உரிமை வழக்கறிஞர் பக்தவத்சலமும் இந்தப்பட்டியலில் உள்ளார்.

1988 ஆம் ஆண்டு குர்திஷ் மக்களை வதைத்து சாகடித்து, குவைத்தைப் பிடித்து வைத்தது, அமெரிக்கர்கள் பலரைக் கொன்றது, மக்களில் பலரை சிறையில் அடைத்தது என்று நீள குற்றப்பட்டியல் சதாமுக்கு எதிராக தயாராக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு ஒரு பகிரங்க மடல்!

பிரதிப்பாதுகாப்பு அமைச்சரே! உங்களுக்கு முதலில் எனது சத்தானதமிழ் வணக்கங்களை கரம் கூப்பித் தெரிவித்துக் கொள்கின்றேன். எமதுநாட்டில் இன்று எள்ளளவேனும் மனித உயிர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. நாடானது இன்று மீண்டுமொரு யுத்தத்தைக் காணுமோ என்று விளிம்பில் நிற்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இன்று உயர்பாதுகாப்பு வலயங்கள் என்றும் சூனியப்பிரதேசங்கள் என்றும் கேந்திர இடங்கள் என்றும் கூறி எல்லாஇடங்களிலும் முகாம்கள், காவல் நிலையங்கள் அமைத்து பாதுகாக்கின்றீர்கள். இது இன்று நேற்று ஏற்பட்ட பாதுகாப்புநிலைவரமல்ல. பல வருடங்களாக இருந்து வருகின்றது.

பதில் பாது காப்பு அமைச்சராயுள்ள நீங்கள் அண்மையில் நாட்டின் பலபகுதிகளிலுமுள்ள படைத்தளங்களுக்கு விஜயம் செய்து வருகிறீர்கள். அதிலுள்ள அந்தரங்கம் என்ன என்று நீங்கள் எனக்குச் சொல்லவில்லையே! நீங்கள் என்ன சதித்திட்டங்களை படைமுகாம் அதிகாரிகளுடன் சேர்ந்து வகுத்தீர்கள் என்று என் சிந்தனை விழித்துக் கொள்கின்றது.

நீங்கள் நாட்டின் அமைதிச் சூழலைக் குழப்பி விடுவதற்கு இவர்களுடன் சேர்ந்து நாசகார ஆலோசனை செய்தீர்களோ என்று சந்தேகமாக இருக்கிறது. உங்களின் இந்தப் படைமுகாம் விஜயம் குறித்து நான் துப்பறிந்து பார்த்த போது எனக்குக் கிடைத்த தகவலையும் நான்உங்களுக்கு தெரியப் படுத்த விரும்புகின்றேன்.

அதாவது புரையோடிப்போய் உள்ள இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு தங்களைத் தயார்ப்படுத்தி அமைதி வழியில் தீர்வுகாணும் நல்லெண்ணத்துடன் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சதிசெய்யும்நோக்குடன், அவர்களுக்கு எதிராக கடுமையான தொனியில் பேச்சு நடத்தி உள்ளீர்கள் என்ற தகவல்கள் காற்றில் கலந்து வந்து காதோரம் கதைபேசின.

அத்துடன் நீங்கள் உங்கள் குள்ளத்தனத்தை விட்டுவிடாமல், யுத்த நிறுத்தச் சூழலைக்கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்ட போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு எதிராகவும் கடுமையான தொனியில் பேச்சு நடத்தினீர்கள் அல்லவா? உள்ளத்தில் கைவைத்து மனச்சாட்சியுடன் சொல்லுங்கள். இப்படி நீங்கள் பேசியது உண்மைதானே.

கிடைத்துள்ள அருமையான சந்தர்ப்பத்தை சாதகமாய் பயன்படுத்துவதை விட்டு விட்டு ஒரு சிறு தீவுக்குள்ளேயே அடிபாடுபட்டுக்கொள்ள நீங்கள் அழைப்பு விடுக்கின்றீர்களே! மனித உருவிலுள்ள யுத்த அரக்கனோ நீங்கள் என்று எனக்குச் சிந்திக்கத் தோன்றுகின்றது.

ஒரு நாட்டிலே ஒருதாய் பெற்ற பிள்ளைகள் போல ஒற்றுமையாய் இருப்பதை நீங்கள் விரும்பவில்லையே. உங்களுக்கு ஒன்றைக்கூற விரும்புகின்றேன். கூண்டிலே இருக்கும் கோழிகளுக்குக் கூட ஒற்றுமையாய் இருக்கத் தெரிகின்றது; ஏன் உங்களுக்கு இந்த மனப்பான்மை உருவாகவில்லை என்று சிந்திக்கும் போது கூண்டுக்குள் இருக்கும் கோழிகளைவிட நீங்கள் போக்கணம் கெட்டவர்கள் என்று எனக்குத் தென்படுகின்றது.

கிழக்கு நிலைமை காரணமாக வன்செயல்கள் தீவிரமடைந்திருப்பதை அடுத்து: போர் நிறுத்த உடன்படிக்கை முறிந்து விடுமோ என்று மக்கள் பீதி கொண்டு வாழ்கின்றனர். இந்தநிலையில் நீங்கள் மேற் கொண்ட படைத்தள விஜயங்கள்; படையினரைத்தட்டி விட்டு வலிந்து யுத்தத்தைக் கேட்கின்றீர்களோ என்று மக்கள் பதட்டமடையுமளவுக்கு தாங்கள் பங்களிப்புச் செய்து விட்டீர்கள் என்பதை நான் மூடி மறைக்க விரும்பவில்லை.

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் நீங்கள் படைத்தளங்களுக்குச் சென்று நிலைவரங்களைப்பார்வையிடுவதுவேறு. ஆனால் நீங்கள் அதற்குள் நடத்திய பேச்சுக்கள் தான் உங்களுக்கு இந்த மடல் வரைய காரணமாய் அமைந்த விடயம் என்பதையும் தெரியப் படுத்த விரும்புகின்றேன்.

தரைப்படை முகாம்களுக்கு விஜயம் செய்தது போதாதென்று கடற்படை முகாமுக்குமல்லவா நீங்கள் சென்றுள்ளீர்கள். அங்கு நீங்கள் உரையாற்றும் போது அரசாங்கம் நியாயமான அளவுக்கு பொறுமை காத்துள்ளது, அந்தப் பொறுமைக்கும் எல்லை உண்டு என்று தம் பட்டம் அடித்திருக்கின்றீர்களே: யுத்த நிறுத்த காலத்தில் உங்கள் படைத்தரப்புக்கள் அத்து மீறி: முல்லைத்தீவுக் கடற்பரப்பில் புலிகளின் படகுகளை அழித்தபோது அதற்கு பதிலடி கொடுக்காமல் ,யுத்த நிறுத்தத்தை மீறிவிடாமல் ஏற்பட்ட இழப்பிலும் கூட புலிகள் பொறுமை காத்தார்களே அதை நீங்கள் மறந்து விட்டீர்களா?

போர் நிறுத்த உடன்படிக்கை மீறல் தொடர்பாக போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழு உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறுகின்றீர்களே! அப்படி நடவடிக்கை எடுக்கவென அவர்கள் செயற்பாட்டில் இறங்கியிருந்தால் முல்லைத்தீவு கடற்சமரின் போதே உங்கள் கடற்படைமீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்கின்ற இந்தச்சாதாரணவிடயம் கூட உங்களுக்குப் புரியாமல் இப்படிப் பேசுகின்றீர்களே. வயதான நிலையில் உங்களுக்கு


ரட்ணசிறி விக்ரமநாயக்க

மூளைக்குழப்பம் ஏற்பட்டு விட்டதா என்ன என்று நான் அறிய ஆசைப்படுகின்றேன்.

விடுதலைப்புலிகள் மீது நீங்கள் எப்பொழுதும் கடும் தொனியில்பேசுவது எனும் விடயம் எவரும் அறிந்த விடயம் தான். ஆனால், நீங்கள் ஏன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மீது குற்றம் சுமத்துகின்றீர்கள் என்பதுதான் தர்மசங்கடமாய் உள்ளது.

அப்படி ஒரு கண்காணிப்புக்குழு இருப்பதனால் தொடர்ந்தும் நீங்கள் அடாவடித்தனம் செய்வதற்கு இடைஞ்சலாய் இருக்கின்றதென்று சிந்திக்கின்றீர்கள் போல் எனக்குத் தென்படுகின்றது. ஒன்றை மாத்திரம் சொல்கின்றேன் உங்கள் நடத்தையிலும் பேச்சிலும் நீங்கள் ஜாக்கிருதையாயிருங்கள். கண்டதையெல்லாம் பேசி சும்மாகிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி என்கின்ற பட்டத்தை நீங்கள் வாங்கிவிடாதீர்கள். யுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்க வேறு தரப்பினரை ஈடுபடுத்துவது குறித்துப் பரிசீலனை செய்ய வேண்டிய நிலை உருவாகலாம் என்று குறிப்பிட்டு இருக்கின்றீர்களே! அப்படி யாரையாவது உங்கள் பக்கம் சார்ந்தவர்களாகப் பார்த்து விலைகொடுத்து வாங்கி விட்டீர்களோ? உங்கள் தந்திரம் ஒன்றும் இந்த மறத்தமிழனிடம் பலிக்காது என்று உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்.

உள்நாட்டுப் போரில் சம்பந்தப் பட்ட இரு தரப்பினரில் எவருமே மீண்டும் போருக்கு திரும்புவதை விரும்பவில்லை என்று மீண்டும் மீண்டும் கூறிவந்த நீங்கள் இன்று ஏன் அப்படி மாற்றுப் பேச்சுப் பேசவேண்டும்? உங்களுக்கு தலை பழுது என்பது மெய்தானோ?

மேற்கூறிய விடயங்கள் உண்மையானால் இருதரப்பினருமே மோதலில் ஈடுபடக்கூடும் என்று மக்கள் அஞ்சக்கூடிய அளவுக்கு பதற்ற நிலையை தோற்றுவிக்கக்கூடிய காரணிகளின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்ற கேள்வி எனக்கு இயல்வாகவே எழுகின்றது.

அதற்கு நீங்கள் தான் காரணகர்த்தா என்று தமிழ் சமூகம் அத்தனை பேருடைய சுட்டுவிரலும் உங்களையே சுட்டிக்காட்டும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. நோர்வே அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் முன்னேற்றம் காண்பதற்கு அனுமதிக்கக் கூடாதென்ற வக்கிர உணர்வுடன் செயற்படும் உள்நாட்டு அரசியல் சக்திகளும் அவற்றுக்குப் பின்னணியில் இருக்கும் வெளிச் சக்திகளும் உறைநிலையில் இருக்கும் போர் படிப்படியாக உருக ஆரம்பிப்பதில் மகிழ்ச்சி கொள்வர் என்பது உங்கள் எதிர்பார்ப்பு என்று நான் நினைக்கின்றேன். இதற்கு நீங்கள் மாற்றுக்கருத்து எதுவும் தெரிவிக்க இடமில்லை என்பதும் நிச்சயமே. காரணம் உண்மைநிலை அதுதான் என்பதை நான் அறிந்துவிட்டேன் அல்லவா?

தற்போதய அமைதிச் சூழ்நிலை உங்களால் சீர்குலைக்கப்பட்டால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் பற்றி அணுவளவேனும் கவலை கொள்ளாமல் சந்தர்ப்பவாத அரசியல் விளையாட்டில் நீங்கள் ஈடுபடுவதை நோக்கும் போது எனக்கு மிக மிக வேதனையாய் இருக்கின்றது. காரணம் மீண்டும் ஓர் இரத்த ஆறு இந்த நாட்டில் ஓடுவதற்கு நீங்கள் மதகு திறக்க முற்படுவதே ஆகும்.

ஒன்றை மாத்திரம் கூற விரும்புகின்றேன். உங்களால் நாடும், நாட்டு மக்களும் பாதுகாக்கப்படமுடியவில்லையானால் எங்கள் தமிழ் தேசியத் தலைவரிடம் கையளித்துப்பாருங்கள். ஓர் ஈ எறும்புக்குக்கூட ஆபத்துவராமல் அவர் நாட்டைப்பாதுகாத்து வழி நடத்துவார் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

எனவே நீங்கள் உங்களை அமைதி வழிக்குத் திருப்பிக் கொள்ளவேண்டியது இன்று அவசியமானதும் அவசரமானது மாகும்.

இப்படிக்கு
உண்மையுள்ள
பாபு

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங்ஸ்ரீலங்க |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை 7.55 அன்பு மடல் | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா 7.55 அன்பு மடல் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | ஒருகதையின் கதை |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | ஹோலிவூட் மூவி | அரட்டை அரங்கம் |
| 9.30 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | குட்டி சுட்டி | சமையல் |
| 10.00 | பெப்சி உங்கள் சொய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப்பாட்டு | நம்ம நேரம் | கொண்டாட்டம் | ரீபீர | சப்தஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | இசைத் தென்றல் | ரீபீர | டாப்10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | இப்படிக்கு நீங்கள் | கோல்டன் மூமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சன்டே சமையல் | மங்கை | மங்கை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (கிளசிக்) | (பமிலி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேடனி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | ஒரு கதையின் கதை | கில்லி | கில்லி | விக்கிரமாதித்தன் | ஜீ பூம்பா |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | கி—மேன் | தமிழ் கார்ட்டூன் | தமிழ கார்ட்டூன் | மலரும் மொட்டும் | விக்கிரமாதித்தன் அன்பு மடல் 4.55 | ஒப்போடு |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | என்றும் கலாட்டா | மிஸ்டர்.பீன் | "24" அக்ஷன் நாடகம் |
| 5.30 | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | ஸ்டாருடன் ஒரு நாள் | "24" அக்ஷன் நாடகம் |
| 6.00 | களம் | இளைய கானம் | ஒப்போடு | பாடல்கள்/இளந்தளிர் 6.15 | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிக்கட் | ஸ்டாருடன் ஒரு நாள் | மின்னல் 5.55 அன்பு மடல் |
| 6.30 | குங்குமம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | குங்குமம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | குங்குமம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | குங்குமம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | குங்குமம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | திமி தக்க தா | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | அலைய்ஸ் | வேலன் |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | அலைய்ஸ் | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ருத்ர வீணை | இளைய கானம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் வழமைபோல் பதக்கவேட்டையில் அமெரிக்காவே 35 தங்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்தபடியாக சீனா வியக்கத்தக்க வகையில் 31 தங்கங்களை வென்று இரண்டாம் இடத்தில் உள்ளது. மேலும் ரஷ்யா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் முறையே 27, 17, 16 தங்கங்களைப் பெற்று மூன்றாம், நான்காம், ஐந்தாம் இடங்களைப் பிடித்துள்ளன. இம்முறை பதக்க அறுவடையில் ஆரம்பத்தில் சீனாவே ஆதிக்கம் செலுத்தியது. ஆயினும் தடகளப் போட்டிகளில் அமெரிக்காவின் ஆதிக்கம் என்றும் போல் உயர்ந்து பதக்கப் பட்டியலில் அந்நாடு முன்நிலைப் பெற வழிவகுத்தது.

# ஒலிம்பிக் பதக்கப் பட்டியல் விவரம்

| இடம் | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | அமெரிக்கா | 35 | 39 | 29 | 103 |
| 2 | சீனா | 32 | 17 | 14 | 63 |
| 3 | ரஷ்யா | 27 | 27 | 38 | 92 |
| 4 | அவுஸ்திரேலியா | 17 | 16 | 16 | 49 |
| 5 | ஜப்பான் | 16 | 9 | 12 | 37 |
| 6 | ஜெர்மனி | 14 | 16 | 18 | 48 |
| 7 | பிரான்ஸ் | 11 | 9 | 13 | 33 |
| 8 | இத்தாலி | 9 | 11 | 11 | 31 |
| 9 | தென்கொரியா | 10 | 11 | 11 | 32 |
| 10 | பிரித்தானியா | 9 | 9 | 12 | 30 |
| 11 | கியூபா | 9 | 7 | 11 | 27 |
| 12 | உக்ரைன் | 9 | 5 | 9 | 23 |
| 13 | ஹங்கேரி | 8 | 6 | 3 | 17 |
| 14 | ருமேனியா | 8 | 5 | 6 | 19 |
| 15 | கிரீஸ் | 6 | 5 | 4 | 15 |
| 16 | நோர்வே | 5 | 0 | 1 | 6 |
| 17 | நெதர்லாந்து | 4 | 9 | 9 | 22 |
| 18 | பிரேஸில் | 4 | 3 | 3 | 10 |
| 19 | சுவீடன் | 4 | 1 | 2 | 7 |
| 20 | ஸ்பெயின் | 3 | 11 | 5 | 19 |
| 21 | கனடா | 3 | 6 | 3 | 12 |
| 22 | துருக்கி | 3 | 3 | 3 | 9 |
| 23 | போலந்து | 3 | 2 | 5 | 10 |
| 24 | நியூஸிலாந்து | 3 | 2 | 0 | 5 |
| 25 | தாய்லாந்து | 3 | 1 | 4 | 8 |
| 26 | பெலாரஸ் | 2 | 5 | 8 | 15 |
| 27 | ஒஸ்ட்ரியா | 2 | 4 | 1 | 7 |
| 28 | எத்தியோப்பியா | 2 | 3 | 2 | 7 |
| 29 | ஈரான் | 2 | 2 | 2 | 6 |
| 29 | ஸ்லோவாக்கியா | 2 | 2 | 2 | 6 |
| 31 | தாய்வான் | 2 | 2 | 1 | 5 |
| 32 | ஜோர்ஜியா | 2 | 2 | 0 | 4 |
| 33 | பல்கேரியா | 2 | 1 | 9 | 12 |
| 34 | ஜமைக்கா | 2 | 1 | 2 | 5 |
| 34 | உஸ்பெகிஸ்தான் | 2 | 1 | 2 | 5 |
| 36 | மொராக்கோ | 2 | 1 | 0 | 3 |
| 37 | டென்மார்க் | 2 | 0 | 6 | 8 |
| 38 | ஆர்ஜென்ரீனா | 2 | 0 | 4 | 6 |
| 39 | சிலி | 2 | 0 | 1 | 3 |
| 40 | கஸகஸ்தான் | 1 | 4 | 3 | 8 |
| 41 | கென்யா | 1 | 4 | 2 | 7 |
| 42 | செக் குடியரசு | 1 | 3 | 4 | 8 |
| 43 | தென்னாபிரிக்கா | 1 | 3 | 2 | 6 |
| 44 | குரோஷியா | 1 | 2 | 2 | 5 |
| 45 | லித்துவேனியா | 1 | 2 | 0 | 3 |
| 46 | எகிப்து | 1 | 1 | 3 | 5 |
| 46 | சுவிட்ஸர்லாந்து | 1 | 1 | 3 | 5 |
| 48 | இந்தோனேஷியா | 1 | 1 | 2 | 4 |
| 49 | ஸிம்பாப்வே | 1 | 1 | 1 | 3 |
| 50 | அஸர்பஜான் | 1 | 0 | 4 | 5 |
| 51 | பெல்ஜியம் | 1 | 0 | 2 | 3 |
| 52 | பஹாமாஸ் | 1. | 0 | 1 | 2 |
| 52 | இஸ்ரேல் | 1 | 0 | 1 | 2 |
| 54 | கெமரூன் | 1 | 0 | 0 | 1 |
| 54 | டொமினிக் குடியரசு | 1 | 0 | 0 | 1 |
| 54 | அயர்லாந்து | 1 | 0 | 0 | 1 |
| 54 | ஐ.அ.எமிரேட்ஸ் | 1 | 0 | 0 | 1 |
| 58 | வடகொரியா | 0 | 4 | 1 | 5 |
| 59 | லத்வியா | 0 | 4 | 0 | 4 |
| 60 | மெக்சிக்கோ | 0 | 3 | 1 | 4 |
| 61 | போர்த்துக்கல் | 0 | 2 | 1 | 3 |
| 62 | பின்லாந்து | 0 | 2 | 0 | 2 |
| 62 | சேர்பியா | 0 | 2 | 0 | 2 |
| 64 | ஸ்லோவேனியா | 0 | 1 | 3 | 4 |
| 65 | எஸ்தோனியா | 0 | 1 | 2 | 3 |
| 66 | ஹொங்கொங் | 0 | 1 | 0 | 1 |
| 66 | இந்தியா | 0 | 1 | 0 | 1 |
| 66 | பரகுவே | 0 | 1 | 0 | 1 |
| 69 | நைஜீரியா | 0 | 0 | 2 | 2 |
| 69 | வெனிசியூலா | 0 | 0 | 2 | 2 |
| 71 | கொலம்பியா | 0 | 0 | 1 | 1 |
| 71 | எரித்திரியா | 0 | 0 | 1 | 1 |
| 71 | மொங்கோலியா | 0 | 0 | 1 | 1 |
| 71 | சிரியா | 0 | 0 | 1 | 1 |
| 71 | ரினிடாட் | 0 | 0 | 1 | 1 |

# 2008ஐ நோக்கி சீனா

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் எதிர்பாராத வெற்றிகளுடன் பதக்க அறுவடை செய்த சீனா, தற்போது 2008ஐ எதிர்நோக்கிக் காத்திருக்கிறது.

2008 ஒலிம்பிக் போட்டிகளை சீனா நடத்த உள்ளது. தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெறும் 29 ஆவது ஒலிம்பிக்கில் உலகிற்கு தனது புதிய அவதாரத்தைக் காட்ட சீனா தயாராகிவருகிறது.

இந்த ஏற்பாடுகளுக்கு செயல்வடிவம் கொடுக்க சீனா 3லட்சத்து 40ஆயிரத்து 400 கோடி ரூபா செலவிடத் திட்டமிட்டுள்ளது. இதில் 18 ஆயிரத்து 400 கோடி ரூபா புதிய நவீன மைதானங்கள் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏதென்ஸ் ஒலிம்பிக் நடைபெறும் போதே புதிய மைதானங்களை அமைக்கும் பணியை சீனா தொடங்கிவிட்டது. நான்கு ஆண்டுகள் போதாது என்றும் அதற்குள் திட்டமிட்டதைவிட செலவு அதிகரிக்கக் கூடும் என்பதாலேயே அப்பணிகளை தொடங்கி விரைவில் முடிக்க அந்நாடு திட்டமிட்டுள்ளது.

முக்கிய மைதானம் ஒன்றுக்காக ஒதுக்கப்பட்ட 2ஆயிரத்து 850கோடி ரூபா திட்டத்தில், 230கோடி ரூபா செலவில் அமைக்கவிருந்த மேற்கூரைத் திட்டத்தை சீனா கைவிட உத்தேசித்துள்ளது.

ஏதென்ஸ் ஒலிம்பிக் அமைப்பாளர்கள் திட்டமிட்டதைவிட இருமடங்கு செலவிட உத்தேசித்திருப்பதாகவும் சீனாவின் ஒலிம்பிக் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். அதனால், அடுத்த நான்கு ஆண்டுகளைக் கருத்திற் கொண்டு திட்டப்பணிகளை தற்போதே மேற்கொண்டுவருகிறது சீனா.

உட்கட்டமைப்பு வசதிக்கான ஒதுக்கீட்டில் பெருமளவு தொகை புதிய சாலைகள், நிலத்தடி ரயில் ஆகியவற்றுக்காக செலவிடப்படவுள்ளது. அத்துடன் பெய்ஜிங்கை ஒலிம்பிக் போட்டிகளின் போது ஒரு பசுமையான நகரமாக மாற்றுவதற்கும் அதிகம் செலவிடப்படவுள்ளது.

இவ்வாறு மற்ற நாடுகளை பிரமிக்க வைக்கும் அளவில் வசதிகளை செய்வதுடன், அதிகப்பதங்கங்களை வெல்வதற்கான முனைப்பிலும் சீனா ஈடுபட்டுள்ளது.

20தங்கப்பதங்கள் என்ற கனவுடன் ஏதென்ஸுக்குச் சென்ற சீனா 32தங்கங்களை அள்ளிக்கொண்டது. இங்கு அனுப்பப்பட்ட 407 வீரர்களில் பெரும்பான்மையோருக்கு இது முதல் ஒலிம்பிக் என்பது குறிப்பிடத்தக்கது.

''2008 ஒலிம்பிக்கை நடத்தும் வாய்ப்பு கிடைத்தது நாட்டு மக்களை மட்டுமல்ல, வீரர்களையும் வெகுவாக ஊக்குவித்துள்ளது. அதுவே ஏதென்ஸில் பதக்க எண்ணிக்கை உயர வழிவகுத்தது''– என்கிறார் சீனக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர்.

மேலும், டெனிஸ், தடகளம், கரப்பந்து என்று இதுவரை பதக்கங்கள் பெற்றிராத போட்டிகளில் எல்லாம் ஏதென்ஸில் சீனா முதலிடம் பிடித்துள்ளமை விசேட அம்சமாகும்.

பிராங்

# ஒலிம்பிக்கை கலக்கிய மரதன் ஓட்டப்போட்டி

ஏதென்ஸ் ஒலிம்பிக்கின் இறுதிப்போட்டியான மரதன் ஓட்டத்தின் முடிவு இம்முறை ஒலிம்பிக் போட்டிகளை கலக்கியுள்ளது. இப்போட்டியின் போது பிரேஸில் வீரர் லிமா பார்வையாளர் ஒருவரால் தாக்கப்பட்டதால் அவரது தங்கப்பதக்க வாய்ப்பு தகர்க்கப்பட்டு வெண்கலமே கிடைத்தது. இம்முடிவை எதிர்த்து பிரேஸில் ஒலிம்பிக் குழு சர்வதேச விளையாட்டு நடுவர் மன்றத்திடம் மேல்முறையீடு செய்ய, முடிவை மாற்ற முடியாது என நடுவர் மன்றம் அறிவித்துள்ளது.

ஏதென்ஸ் ஒலிம்பிக்கின் கடைசி போட்டியாக ஆண்களுக்கான மரதன் ஓட்டம் நடந்தது. 16 நாட்களாக எந்தவிதமான பாதுகாப்புப் பிரச்சினைகளும் ஏற்படாத ஒலிம்பிக்கில் இப்போட்டியின்போது அசம்பாவிதம் ஏற்பட்டது. பிரேஸில் வீரர் வாண்டர் லிய் லிமா முதல் நபராக ஓடிக்கொண்டிருந்தார். இவரை நெருங்கும் தூரத்தில் ஒருவரைக் கூட காணவில்லை. வீதியின் இரு புறமும் கூடியிருந்த நூற்றுக்கணக்கான ரசிகர்கள் இவருக்கு உற்சாகம் அளித்தனர்.

போட்டி முடிய 6 கிலோ மீற்றர் தூரமே இருந்த நிலையில் கிரேக்க பாரம்பரிய உடை அணிந்த ஒருவர் இடையில் புகுந்து லிமாவைப் பிடித்து தள்ளியதோடு தாக்கவும் முற்பட்டார். இதனால், அவர் மிகுந்த அதிர்ச்சியடைந்தார். பின்னர், பாதுகாப்பு வீரர்கள் தலையிட்டு அவரை மீட்டனர். இதிலிருந்து மீண்ட லிமா தனது ஓட்டத்தைத் தொடர்ந்தார். ஆனாலும், அடுத்த ஐந்து நிமிடங்களில் இவரை இத்தாலியின் பால்டினி முந்தினார். இரண்டாம் இடத்தை அமெரிக்காவின் மெப்ராட்டம் கெப்லசிகி பெற்றார். இதனால், லிமா மூன்றாவது இடத்தையே பிடித்தார். தங்கம் எதிர்பார்த்த இவர் வெண்கலத்தையே பெற முடிந்தது. இச்சம்பவம் பிரமாண்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்த ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் கரும்புள்ளியாக அமைந்துள்ளது.

இதேவேளை, லிமாவைத் தாக்கியவர் அயர்லாந்தைச் சேர்ந்த முன்னாள் பாதிரியாரான கார்னிலியஸ் ஹோரன் என்று பொலிஸார் தெரிவித்தனர். 57 வயதான இவர் லண்டனில் வசித்து வருகிறார். முக்கிய போட்டிகளின் போது இடையில் புகுந்து பாதிப்பை ஏற்படுத்துவது இவரது வழக்கம். 2003இல் நடந்த பிரித்தானியா 'கிராண்ட் பிரிக்ஸ்' கார் ஓட்டத்தின்போதும் இவர் இடையில் புகுந்து சர்ச்சையைக் கிளப்பி இருந்தார். அப்போது கைது செய்யப்பட்ட இவருக்கு இரண்டுமாத சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது.

இப்போது கிரீஸ் விதிமுறைகளை மீறியதற்காக ஹோரனுக்கு நீதிமன்றம் மூன்று லட்சத்து 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது. இவரது மனநிலையைக் கருத்திற் கொண்டு 5 ஆண்டுகளுக்குப் பதிலாக ஒரு ஆண்டு சிறைத் தண்டனை அளித்தது. ஆயினும், இவர் லண்டன் திரும்ப திட்டமிட்டிருப்பதால் இவரது ஒரு ஆண்டு தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஹோரன் செயலுக்கு பிரேஸில் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. மரதன் வீரர்களுக்கு ஏதென்ஸ் ஒலிம்பிக் குழுவினர் உரிய பாதுகாப்பு அளிக்கத் தவறிவிட்டனர் என்றும் குற்றம் சாட்டியது. அத்துடன், மரதன் போட்டியின் முடிவை எதிர்த்து சர்வதசே விளையாட்டு நடுவர்



மன்றத்திடம் மேல்முறையீடு செய்தது பிரேஸில் ஒலிம்பிக் குழு.

இதனை ஆராய்ந்த சர்வதேச தடகளக் குழு ஒலிம்பிக் மரதன் முடிவை மாற்ற இயலாது எனத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில்–

''இந்தச் சம்பவம் எமக்கு மிகுந்த கவலை அளிக்கின்றது. ஒலிம்பிக் உணர்வுகளை மதித்து செயல்பட்ட லிமாவுக்கு உயரிய கௌரவம் அளிக்கப்பட்டது.


நிறைவு விழாவின்போது அவருக்கு நவீன ஒலிம்பிக்கின் தந்தையான டி கூபர்ட்டின் நினைவு பதக்கமும் அளித்து உற்சாகப் படுத்தினோம். ஆயினும், மரதன் முடிவை மாற்றுவது மிகக் கடினம்'' – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரச் சிரிப்பு




## ஒளிந்திருக்கும் ஓவியம்



அருகே உள்ள படத்தைப்பாருங்கள். ஒருஅழகானஇயற்கைக்காட்சி தெரிகிறது. வீடு ஒன்றின் திரைச் சீலைகள் விலக்கப்பட்ட நிலையில் ஜன்னல் ஊடாக இந்த அழகான இயற்கைக்காட்சி தெரிகிறதல்லவா? ஆனால், கொஞ்சம் உற்றுப்பார்த்தால் இயற்கைக் காட்சிக்கு இடையில் அந்த ஜன்னல் உள்ள அறையின் உள்ளேபலகை ஒன்றில் ஓர் இயற்கைக்காட்சி ஓவியம்வரைந்து வைக்கப்பட்டுள்ளது தெரியும். தெரிகிறதா?

நன்றாகப் பாருங்கள். ஓவியம் வரையப்பட்ட பலகையில்மூன்றுகால்களும்மேல்புறமும்தெரிகின்றன.

## ஜோக்

இலக்கிய வகுப்பு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் எல்லோருக்கும் ஒருபரீட்சை வைக்க ஆசிரியர் முடிவு செய்தார். இலக்கிய மாணவர்களைப்பார்த்து ஆசிரியர் சொன்னார் ''மாணவர்களே நீங்கள் இப்போது மிகச்சுருக்கமாக ஒருகதை எழுத வேண்டும் . அந்தக் கதையில் கடவுள் நம்பிக்கை இருக்க வேண்டும், அரச கதையாக இருக்க வேண்டும், கொஞ்சம் செக்ஸியாக திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்ததாக அந்தக் கதை இருக்க வேண்டும். மிகவும் சுருக்கமாக கதையை யார் எழுதுகின்றார்களோ ...அவர்களுக்கு ஒரு பரிசு காத்திருக்கின்றது'' என்றார்.

எல்லா மாணவர்களும் ஆவலாக கதை எழுதத்தொடங்கினர். ஆனால் ஒரு மாணவன் மட்டும் ஏதோசோம்பலாக உட்கார்ந்திருந்தான்.


ஆசிரியர் அவனைப்பார்த்து ''ஏன் நீ கதை எதுவும் எழுதவில்லையா'' என்று கேட்டார். அவன் ''எழுதி முடித்து விட்டேன் சேர்'' என்றான்.

ஆசிரியருக்கோ ஆச்சரியம். என்ன எல்லோரும் விழுந்து விழுந்து கதை எழுத இவன் மட்டும் சும்மா உட்கார்ந்து இருந்து விட்டு இப்போ கதை எழுதி விட்டேன் என்கிறானே... என்று ஆச்சரியத்துடன் அவன் கதை எழுதிய பேப்பரை வாசித்துப் பார்த்தார். அதில் எழுதியிருந்த கதை இது தான், ''கடவுளே அரசி கடந்த மூன்று மாதங்களாக கர்ப்பமாக இருக்கிறார்.




ஆனால், அரசர் கடந்த ஆறுமாதங்களாக ஊரிலே இல்லை. இதற்கு யார் காரணமாக இருப்பார்களோ? அரசர் நாடு திரும்பியதும் என்ன நடக்கப் போகின்றதோ ?

## போட்டி




அருகேயுள்ள படத்தைப்பாருங்கள் ஒரு வெற்றிக்கிண்ணத்தின் படம் நேரடியாகத் தெரிகின்றது. ஆனால் வெற்றிக்கிண்ணத்தின் இருபுறமும் இருமுகங்கள் தெரிகின்றனவே. கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

## நெட் குறும்பு



## கண்ணாமூச்சி



அருகேயுள்ள படத்தைப்பாருங்கள். அலை அலைபோல் கோடுகள் தெரிகின்றன அல்லவா? ஆனால் அந்தக் கோடுகளை நன்றாக உற்றுப் பாருங்கள். முப்பரிமாணத் தோற்றத்தில் இந்தப் படம் அமைந்துள்ளது. அதாவது நீளம் அகலம் ஆழம் என்று பார்த்தறியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேதாஜியின் போர் வியூகத் திட்டம்

1941 ஆண்டு கல்கத்தாவை விட்டு வெளியேறிய சுபாஸ் சந்திரபோஸ் கைபர் கணவாய் வழியாக ஆப்கன் தலைநகரான காபூல் போய் அங்கிருந்து ஜேர்மன் தலைநகரான பெர்லினை அடைந்தார். அங்கு ஹிட்லரைச் சந்தித்து ஆதரவு பெற்றார். பின்பு ஜப்பான் செல்லத் திட்டமிட்டார்.

ஜாவா, மலேசியா, பர்மா ஆகிய நாடுகளைத் தனது கட்டுப்பாட்டில் ஜப்பான் கொண்டுவந்ததைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் சாரை எதிர்க்க சுபாஷ் சந்திரபோஸ் திட்டம் வகுத்தார்.

ஜப்பானின் உதவியோடு கீழ்த்திசை நாடுகளில் இருந்து இந்தியாவை நோக்கி படைஎடுப்பது அவரது வியூகம்.

வட அட்லாண்டிக் கடல், தென் அட்லாண்டிக்கடல், இந்தியப் பெருங் கடல், பசுபிக் கடல் வழியாக நீர்மூழ்கிக் கப்பல் மூலம் 98 நாட்கள் பயணித்து சுமத்திராத்தீவை அடைந்தார்.

அங்கிருந்து மலேசியாவின் பினாங்கு நகர் சென்று விமானம் மூலம் டோக்கியோவை அடைந்தார். டோக்கியோவில் ஜப்பானிய பிரதமர் டோஜோ இராணுவத் தளபதி சூசியாமா ஆகியோரைச் சந்தித்தார்.

ஜப்பானிய அரசின் முழு ஆதரவு தமது திட்டத்திற்கு கிடைக்க பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஜூலை 2 ஆம் திகதி முழு நம்பிக்கையுடன் டோக்கியோவில் இருந்து சிங்கப்பூர் வந்து சேர்ந்தார்.

அதன்படி சிங்கப்பூர் வந்ததும் இந்திய தேசிய இராணுவத்தின் பிரதம தளபதியாக 1943 ஜூலை 4 ஆம் திகதி பொறுப்பேற்றுக் கொண்டார். அது முதல் அவர் நேதாஜி என அழைக்கப்பட்டார்.

அக்டோபர் 21 ஆம் திகதி சிங்கப்பூரில் ''விடுதலை இந்தியா தற்காலிக அரசாங்கத்தை பிரகடனப்படுத்தினார். இதனை 9 நாடுகள் அங்கீகரித்தன.

இந்தியா தேசிய காங்கிரஸின் கைராட்டை பொறித்த மூவர்ணக் கொடியே இந்திய தேசிய இராணுவத்தின் கொடியாகவும் ஏற்கப்பட்டு வானளாவப் பறக்க விடப்பட்டது.

''தேச பிதாவே! எங்களை வாழ்த்துங்கள். இன்ப துன்பங்களிலும் வெற்றி தோல்விகளிலும் நான் உங்களுடன் இருப்பேன்.

இந்தியா விடுதலை அடைவதற்கு எங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் மனமுவந்து அளிப்போம்.'' என நேதாஜி சிங்கப்பூரில் இருந்து வானொலி மூலமாக இந்திய மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

நேதாஜி தமது இராணுவத்தில் எல்லோரையும்இணைத்தார். குறிப்பாக மலேசியாவில் சிறுகடை வைத்திருப்போர், றப்பர் தோட்டங்களில் வேலை செய்வோர் ஆகியோரைப் படையில் சேர்த்தார்.

அன்றை இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் கூறினார். ''இறப்பர் பால் எடுக்கும் தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உறைந்து போய் உள்ளது. எனவே அவர் முட்டாள் தனமாக செயல்படுகிறார்'' என்று.

அதற்கு நேதாஜி ''இவர்கள் தான் ஆங்கில சாம்ராஜ்யத்தை ஒழிப்பார்கள்'' எனப் பதில் அளித்தார்.

மலேசியா வில் தங்கி இருக்கும் போது நேதாஜி தமிழர்களிடையே பேசும்போது அதை உடனுக்குடன் மொழிபெயர்த்து சொல்ல ஏற்பாடு செய்தார்.

அந்த மகத்தான பணியில் ஈடுபட்டு இந்த இராணுவத்தில் ஒருவராக மாறிப்போனவர் கண. முத்தையா.

தமது படை வீரர்கள் நல்ல பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவர் நேதாஜி.



எனவே ஜப்பானினுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி தம் இராணுவ வீரர்களை பயிற்சிக்காக ஜப்பானுக்கு அனுப்பி வைத்தார்.

இவர்கள் டோக்கியோ கடெட்டுகள் என அழைக்கப்பட்டனர். முதலில் 46 பேர் தேர்வு செய்யப்பட்டு 36 பேர் முதல் கட்டமாக அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் தமிழர்.

## அண்டைய நாட்டு வரலாற்றில் ஓர் பார்வை

''என்னருமை இளைஞர்களே எனக்கு ஆண் மகன் இல்லை. நீங்கள் தான் அன்புக்குரியவர்கள். நீங்கள் எங்கிருந்தாலும் நான் அங்கிருப்பேன்'' எனக் கூறி நேதாஜி அவர்களை வாழ்த்தி அனுப்பிவைத்தார்.

1944 பெப்ரவரியில் இவரது இராணுவம் வாடக்கு, கிழக்கு முனையில் முன்னேறத் தொடங்கியது ''டெல்லி சலோ'' என்ற பெயரில் நேதாஜி அழைப்பு விடுத்தார்.

வடகிழக்கு எல்லையான அரக்கான் மலைத் தொடரில் பிரிட்டிஷ் இராணுவத்தோடு மோதல் ஏற்பட்டது.

மார்ச் 18 ஆம் திகதி பிரிட்டிஷ் இராணுவம் பின்வாங்க நேதாஜியின் படை பர்மா எல்லையைக் கடந்து இந்திய மண்ணில் காலெடுத்து வைத்தது. இந்திய எல்லையில் உள்ள இம்பால் இந்தப்படை வசம் வீழ்ந்தது.

இப்படி வெற்றிக் கொடி நாட்டிய சில மணி நேரத்தில் டெ...த மழை நேதாஜியின் படைக்கு சவாலாக மாறியது. பிரிட்டிஷ் விமானம் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குண்டுமாரி பொழியத் தொடங்கியது.

வேறு வழியின்றி நேதாஜி தமது இராணுவ வீரர்களை திருப்பி விட உத்தரவிட்டார். மீண்டும் மேஜர் ஜெனரல் நவாஸ், கேர்ணல் தில்லான் ஆகியோருடன் படையை அனுப்பினார். ஆனால் ஆங்கில இராணுவத்தில் புதிய பீரங்கிகள், புதிய போர் முறை வந்து சேர்ந்ததால் நேதாஜியின் படை தோல்வி அடைய நேரிட்டது.

இதற்கிடையில் 1945 ஆகஸ்ட் 15 ஆம் திகதி ஜப்பான் சரண் அடைந்ததுடன் இனியும் சிங்கப்பூரில் இருப்பது உசிதம்இல்லை எனக் கருதி நேதாஜி பாங்கொங் சென்றார். ஆகஸ்ட் 17 ஆம் திகதி இந்தோ சீனாவின் தலைநகர் சைகோன் சென்றார். தன் நண்பரான தாசை அங்கு சந்தித்தார்.

அங்கு விமானத்தில் இடம் இல்லாதால் ஹபூர் ரஹமானை மட்டும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார். விமானம் அன்று இரவு இந்தோ — சீனாவில் உள்ள டுரையில் என்ற ஊரில் இறங்கியது. மீண்டும் காலை புறப்பட்டு ஆகஸ்ட் 18 ஆம் திகதி போர் மோஸா தீவில் உள்ள தைஹோ என்ற ஊரில் இறங்கியது. விமானம் 35 நிமிடம்கழித்து பறக்கத் தொடங்கியது. 300 அடி உயரத்தில் பறக்கும் போது விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு தீப்பிடித்து விமானம் கீழே வீழ்ந்தது.

நேதாஜியும், ஹபீபுர் ரகுமானும் தீக் காயங்களுடன் தைஹோகூவிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அங்கு 9 மணிக்கு நேதாஜி உயிர் நீத்ததாகவும் இங்கிலாந்து வானொலி அறிவித்தது.

ஆனால், அதை ஏற்க இயலாது என்றும் இன்றும் நேதாஜி உயிரோடு இருப்பதாகவும் கூறுவோரும் உண்டு. ஆகஸ்ட் 18 ஆம் திகதியுடன் தனது சாகசங்களையும், சாதனைகளை நேதாஜி முடித்துக் கொண்டார்.

-சாந்தையூரான்-

---

# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 06–09–2004 , 12 –09–2004

பொ. சந்திரன்

## இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| | செவ்வாய் பூரம் குரு<br>சுக்கிரன் புனர்பூசம் சனி<br>புதன் மகம் கேது<br>சூரியன் பூரம் சுக்கிரன்<br>குரு உத்தரம் சூரியன்<br>சனி புனர்பூசம் குரு | | சுக்கிரன் |
| | | | சூரியன்<br>புதன்<br>செவ் |
| | | கேது | குரு |

ஆவணி 21 முதல் ஆவணி 27 வரை

சந்திரன் இடபம் முதல் கடகம் வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

ராசிக்குரிய செவ்வாய் ஐந்தாம் வீட்டில் சுபஸ்தானங்களிலும் செவ்வாய் நன்மை செய்வதில்லை. மேலும் ராசியில் ராகு இருப்பதும்பிரச்சினை. இருப்பினும் குருவின் சாரத்தில் இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,7) உரிய சுக்கிரன் நாலில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். தொழிலுக்குரிய கிரகம் சனி மூன்றில் இருப்பது நல்லது. தொழில் துறை முன்னேறும். ராகு, கேதுக்கள் சகல கிரகங்களையும் அடைத்து இருப்பது ஒருவித முட்டுக்கட்டை. அத்துடன் குருவும் ஆறில் இருப்பது சுகக்குறைவு. இறைபிரார்த்தனையால் அமைதியடையலாம்.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகினி, மிருகசீரிடம் 1,2**

ராசிக்குரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது விசேஷம். மேலும் சனியின் சாரத்தில் இருப்பதும் பறவாயில்லை. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் நாலில் சூரியன், செவ்வாய் சேர்க்கை கையில் பணம் இருக்காது. குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தராது. நாலில் சூரியன் ஆட்சியாக இருப்பது நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். (7,12) உரிய செவ்வாய் நாலில் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். குருவின் இருப்பு நல்லதாக இருப்பதால் நிலமையில் மாற்றம் வரலாம். தொழிலுக்குரிய சனி இரண்டாம் வீட்டில் இருப்பது தொழில் துறையைப் பாதிக்கலாம். சுப ஸ்தானங்களில் கெட்ட கிரகங்கள் நன்மை செய்வதில்லை. ராசிக்கு இருபுறமும் தீய கிரகங்கள் இருப்பது நல்லதல்ல.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் மூன்றில் இருப்பது நல்லதல்ல. மேலும் கேதுவின் சாரம் பெற்று இருப்பதும் சிறப்பல்ல. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். ராசியில் சனி இருப்பது மன அமைதியைப் பாதிக்கும். ராகு, கேதுக்களுக்குள் எல்லாக்கிரகங்களும் அடங்குவது உலகியல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். இரண்டில் சுக்கிரன் இருப்பதால் கையில் பணம் இருக்கும். நாலில் குரு பெரிதாக நன்மை இல்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,10) உரிய குரு 4இல் இருப்பதும் இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில் துறையில் லாபம் இருக்காது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிக்குரிய சந்திரன் ராசிக்கு வருவது நல்லது. ராசியில் சுக்கிரன் இருப்பதும் நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்புகள் அமையலாம். இரண்டில் சூரியன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (இரண்டாம் வீட்டில் சூரியன் நன்மை செய்யாது) புதனுடன் இணைவது நன்மை. நாலுக்குரிய சந்திரன் 1இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 4இல் கேது இருப்பது நல்லதல்ல. (7,8) உரிய சனி 12இல் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். குரு மூன்றில் இருப்பதால் குரு சுகமும் இல்லை. பத்துக்குரிய செவ்வாய் இரண்டில் இருப்பதால் தொழில்துறையில் லாபம் இருக்காது. ராகு, கேதுக்கள் எல்லாக்கிரகங்களையும் அடைப்பது சுய முன்னேற்றத்துக்கு தடை இருக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் ராசியில் ஆட்சியாக இருந்தாலும் அங்கு செவ்வாய் இருப்பதும் மேலும் சுக்கிரன் சாரத்தில் இருப்பதும் நல்லதல்ல. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,11) புதன் ராசியில் இருப்பது நல்லதல்ல. இருப்பினும் குரு இரண்டில் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,9) உரிய செவ்வாய் ராசியில் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (6,7) உரிய சனி 11இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. 10க்குரிய சுக்கிரன் 12இல் இருப்பதால் தொழில் துறை முன்னேறும். சுக்கிரன் மட்டும் 12இல் மறைவதில்லை. ராசிக்கு இருபுறமும் சுக்கிரனும், குருவும் இருப்பது சிறப்பானது.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 12இல் இருப்பது நல்லதல்ல. மேலும் கேதுவின் சாரத்தில் இருப்பதும் சிறப்பு இல்லை. ராசியில் குரு இருப்பதும் பிரச்சினை தான். ராகு, கேதுக்களுக்குள் கிரகங்கள் அடைபடுவதும் நல்லதல்ல. எடுத்த முயற்சி தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. (2,9) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது கையில் பணம் இருக்கும். பிதாவுக்கும் நல்லது. (4,7) உரிய குரு ராசியில் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். நாலாம், ஏழாம் வீடுகளைச் சனி பார்ப்பதும் குறை. மன அமைதி குறைந்த வாரம். அவதானம் வேண்டும்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

ராசிக்குரிய சுக்கிரன் பத்தாம் வீட்டில் இருப்பது சிறப்பல்ல. சில நூல்கள் சிறப்பாக சொல்லவும் கூடும். சனி சாரத்தில் இருப்பது சங்கடம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,7) உரிய செவ்வாய் 11இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. 7இல் கேது இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. குரு 12இல் மறைவதால் மங்களகரமான வாய்ப்புகள் தாமதமாகலாம். (4,5) உரிய சனி 9இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (நல்ல பலனையும் சிலர் கூறுவர்) 10இல் சுக்கிரன், குரு மறைவு தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

ராசிக்குரிய செவ்வாய் பத்தில் இருப்பது நல்லதல்ல. ஆனால் குருவின் சாரத்தில் இருப்பது ஆறுதல். எடுத்த முயற்சி தாமதமாகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,5) உரிய குரு 11 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தரும். (3,4) உரிய சனி8இல் இருப்பதால் வீடு, வாகனம்செலவை ஏற்படுத்தலாம். இளைய சகோதரத்துக்குக் கூடாது. (7,12) உரிய சுக்கிரன் 9இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். 10இல் சூரியன் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறைமுன்னேறும். புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். ராசியில் கிரகங்கள் இல்லாதபடியால் மன அமைதி இருக்கும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு பத்தில் அவ்வளவு சிறப்பு இல்லை. சில நூல்கள் நல்லதாகக் கூறலாம். சூரிய சாரம் பெற்று இருப்பது நல்லது. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். ராசியையும், நாலாம் வீட்டையும் சனி பார்ப்பது தீய பலன்களைத் தரக்கூடும். (2,3) உரிய சனி 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,10) உரிய புதன் 9இல் சூரியன், செவ்வாய் சேர்க்கை திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில் துறையும் பாதிப்புக்கு உள்ளாகலாம். 7இல் சனி இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. ராசிக்கு இருபுறமும் கிரகங்கள் இல்லாதிருப்பது பாதுகாப்பு குறைவு.

**மகரம்: உத்தராடம்2,3,4,. திருவோணம், அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6இல் இருப்பது நல்லது. மேலும் குருவின் சாரத்தில் இருப்பது சிறப்பானது. எடுத்த முயற்சி நல்லமுறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. கையில் பணம் இருக்கும். (4,11) உரிய செவ்வாய் 8இல் இருப்பது சிறப்பல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மூத்த சகோதரத்துக்கும் நல்லதல்ல. 7இல் சுக்கிரன் இருப்பது நல்லதல்ல. ஆனால் குரு 9இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. 10க்குரிய சுக்கிரன் 7இல் இருப்பதால் தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். ராசிக்கு இருபுறமும் இவ்விரு வீடுகள் காலியாக இருப்பது பக்க உதவி இருக்காது . அத்துடன் பாதுகாப்பும் குறையலாம். ஆனால், 9 இல் உள்ள குரு ராசியைப் பார்ப்பது சிறப்பானது. சகல குறைகளையும் நிவர்த்தி செய்யும்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி ஐந்தில் இருப்பது சிறப்பல்ல. ஆனால், குருவின் சாரத்தில் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,11) உரிய குரு 8இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கும் நல்லதல்ல. (4,9) உரிய சுக்கிரன் 6இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். பெற்றோருக்கு நல்லதல்ல. 7ல் சூரியன் செவ்வாய், புதன் இந்த சேர்க்கை நல்லதல்ல. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. பத்துக்குரிய செவ்வாய் 7இல் இருப்பதால் மேலும் குரு மறைவது பல வழிகளிலும் நன்மை இருக்காது.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7இல் இருப்பது சிறப்பானது. மேலும் சூரிய சாரம் பெற்று இருப்பதும் நல்லதே. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2,9) உரிய செவ்வாய் 6இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கும் நல்லது. (4,7) உரிய புதன் 6இல் இருப்பது நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். தாய்க்கும் நல்லது. திருமணவாய்ப்பு உண்டு. 10க்குரிய குரு 7இல் இருப்பது தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். ராசியையும், 10ஆம் வீட்டையும் சனி பார்ப்பது குறை. ஆனால், ராசியை குரு பார்ப்பதால் சகல தோசங்களும் நிவர்த்தியாகும். எண்ணிய எண்ணம் நிறைவேறும். முன்பிருந்த பல கவலைகள் தீரும புது வாழ்வு அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மனமாற்றம்' சமூக நாடகம்

கலை வாழ்வில் 40 வருடங்கள் சேவை யாற்றிவரும் கலைஞர் எம்.கே.சுதாகரை பாராட்டும் முகமாக நிழல், நாடகமன்ற அனுசரனையோடு யுனிவர்சல் ஆர்ட் ஸ்டேஜ் பாக்கியராஜ் பெருமையுடன் வழங்கிய 'மனமாற்றம்' சமூக நாடகம் மருதானை டவர் மண்டபத்தில் மேடை ஏறியது.

கலைவாழ்வில் தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றும் பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன் இந்த நாடகத்தை எழுதியிருந்தார்.

பணம் என்றால் பிணமும் வாய் திறக் கும் என்பதை இலக்காக கொண்டு; ஒரு குடும்பத்தின் வளமான வாழ்வுக்காக வெளி நாடு சென்று உழைக்கும் மூத்த மகன்; தன் மீது குடும்ப உறவினர்கள் வைத்திருக்கும் அன்பும், அக்கறையும் உள்ளார்த்தமான அன்பு எனவும் அது பணத்துக்காக காட்டப் படும் போலியான அன்பல்ல எனவும் தனது நண்பனுடன் வாதிடுகின்றான்.

''எனக்கு ஏதாவது ஒன்றென்றால், அவர்கள் தங்கள் உயிரையே விட்டு விடு வார்கள்'' என்று பெருமை பாராட்டும் வச னம் அற்புதமானது. வார்த்தை மூலம் கதா



சிரியர் அதனை வெளிகாட்டியிருந்தார்.

அதற்கு சக நண்பன்; இல்லை அது உன் உழைப்புக்காக அவர்கள் உன்மீது காட்டும் போலியான அன்பு என்று தெளிவுபடுத்து கின்றான்.

அதை அவன் ஏற்றுக்கொள்வதாயில்லை. இறுதியில் இதை நிரூபிப்பதற்காக அவர்கள் பந்தயம் பிடித்து கொள்கின்றனர்.

வெளிநாட்டிலிருந்துவரும் நண்பன் உங்கள் மகன் வெளிநாட்டிலே இறந்து விட்டான். அவனுடைய உடல் கூட உங்களுக் குக்கிடையாது; அவன் என்னிடம் தந்து வைத்த 10 இலட்சம் ரூபாய் பணமும், இனிப் புப் பொதியும் தான் எஞ்சியிருக்கின்றன என்று, ஒரு பொய்யைக் கூறி மெய்யான அன்பைப் பரீட்சிக்கும் காட்சி நாடகத்தின் முடிச்சாகக் காட்டப்பட்டது.

அப்போது குடும்ப உறவுகள், அண்ணன் இறந்து போய் விட்டானே என்று மெய் யாகவே கவலை அடைவதை விட்டுவிட்டு அனுப்பியிருந்த பணத்துக்காக அடிதடிப்பட் டுக் கொள்ளும் நிலை காட்சி ஆனது. இதுவரை அண்ணனை நேசித்தற்கு ஒரே காரணம் அவர் தேவையான பணத்தை உழைத்துக் கொடுத்த உழைப்புக்காகவே என்று தெளிவுபடுத்திக் காட்டியது பார்வை யாளர்களை மூக்கில் விரல் வைக்கும்படி செய்தது.

அத்தனைக்கும் மேலாக தனதுதந்தை நோய்வாய்ப்பட்டு இருக்கும் செய்தியைக் கூட தங்களின் சுயநலத்துக்காக அவனுக்குத் தெரிவிக்கத் தவறிவிட்டனர். அதற்கு ஒரே காரணம்; நாட்டுக்குத் திரும்பி வந்துவிடு வான், அவ்வாறுவந்து விட்டால் பணம் கிடையாது போய் விடும் என்கின்ற பண ஆசையே காரணமாயிருந்தது.

பணத்துக்காய் தம்பி, தங்கை, மைத்து னர் போட்டி போடும்போது அங்கு திடீரென அவர் மேடையில் தோன்றிய காட்சி குடும் பத்தவர்களை அதிரவைத்தது.

அதற்கு மகன் ''நீங்களுமா அம்மா இப் படி?'' என்று நம்பமுடியாமல் ஆச்சரியப்படு வதுடன்; உறவுகள், பாசங்கள், அன்பு என் பவை எல்லாம் வெறும் பணத்துக்காகவே என உணர்ந்து கொண்டு வெறுப்படைந்த வனாக மீண்டும் அவன் வெளிநாடுசெல் லப் புறப்படுகின்றான்.

இவ்விடத்தில் மகனாக தோன்றி நடித்த சுதாகரின் 40 ஆண்டுகால நடிப்பு அவருடைய நாடக வளர்ச்சியின் முதிர்ச்சியினை வெளிச்சம்போட் டுக் காட்டியது.

பாசம் என்பது மாயை ஆனது என அவன் அப்போதிருந்தே அறிந்து மனம் மாறுகின் றான் இதுவே நாட கம்.

கதாபாத்திரங்கள் அத்தனை பேரும் தங்கள் தங்கள் பாத்திரப்படைப் புக்களை சிறப்பாகவே உணர்ந்து நடித்தனர்.

ஒரே ஒரு காட்சியில் மாத்திரம் தோன்றி உயிர்விட்ட தந்தையரின் நடிப்பு சாலச்சிறந்தது.

பணத்துக்காக பாசம் காட்டிய மைத் துனரின் நடிப்பும், பிள்ளைகளின் தாயா கவே நடித்த மணிமேகலையின் நடிப்பும் பார்வையாளரை வெகுவாகக் கவர்ந்தன.

சுதாகரின் நண்பனாக நடித்த பாக்கிய ராஜ்ஜின் நடிப்பும், தம்பி தங் கைகளின் நடிப்பும் நாடகத்தை மெருகு படுத்தி ன... எணைம்... மொத்தத் தில் சிறந்தஒரு நாடகத்தைப் பார்த்த நிறைவு ஏற்பட்டது.

(பாபு)



துறைநீலாவணை கண்ணகி அம்மன் ஆலய உற்சவப் பெருவிழாவில் பாற்காவடி ஆட்டத்தினைப் படத்தில் காணலாம் (258)



தமிழ் கலைஞர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்திருந்த மலையக ஜீவாவின் மணிவிழா முன்னோடி நிகழ்வு கடந்த 8 ஆம் திகதி கொழும்பு சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தில் நடைபெற்றது. மணிவிழா நாயகன் அந்தனி ஜீவா, 'ஒத்தெல்லோ' நாடகத் தயாரிப்பாளரும் நடிகருமான ஸ்ரீநிவாசகம் ஸ்ரீஹ ரன் ஆகியோருக்கு மனிதவள அபிவிருத்தி கலை, கலாசார அலுவல்கள் அமைச் சர் விஜித ஹேரத் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், தேசிய நாடகக் குழு உறுப்பினர் கலைஞர் கலைச்செல்வன் அமைச்சரை மாலை அணிவித்து வரவேற்பதையும், அருகில் முன்னிலை வகித்த புரவலர் ஹாசிம் உமர் அவர் களையும் படங்களில் கணலாம். - படப்பிடிப்பு:எஸ்.ஏ.கரீம் -

# கலை - இலக்கிய வாதிகளின் நல்லெண்ணத் தூதுக்குழு

மனிதவள அபிவிருத்தி கலை, கலாசார அமைச்சர் விஜித ஹேரத் ஏற்பாட்டில் யாழ்.நூலகத்திற்கு பெரும் தொகையான நூல்களை வழங்குவதற்கு இலங்கை கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கலை கலாசார அமைச்சுக்குக் கீழ் இயங்கும் இலங்கை கலைக்கழகத்தின் சார் பில் வடமாகாணத்துக்கு வெளியே வாழும் சிங் கள, தமிழ், முஸ்லிம் கலை இலக்கிய வாதிகள் இந் நூல்களை அன்பளிப்புச் செய்ய உள்ளனர்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நிகழவிருக்கும் நூல்கள் வழங்கும் வைப வத்தில் இலங்கை கலைக்கழகத்தில் இயங் கும் தேசிய சாஹித்திய - நாடக, சங்கீத, ஓவியக் குழுக்களைச் சார்ந்த பிரதிநிதி களும், கலைஞர்களும் - இலக்கியவாதி களும் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

இலங்கை கலைக்கழகத்தின் தலைவர் சாள்ஸ் தயானந்தவின் தலைமையில் யாழ்ப்பாணம் செல்லவிருக்கும் சாமாதா னத்தை நோக்கமாகக் கொண்ட இந்நல்லெண் ணத் தூதுக்குழு யாழ்.கலை இலக்கிய வாதிகளுடனான சந்திப்பையும் நடத்த உள்ளது.

யாழ்.நூலகத்திற்கு நூல்களை அன் பளிப்புச் செய்யவிரும்பும் கலை இலக்கிய துறையைச் சார்ந்தவர்களும், பொதுமக்க ளும் கொழும்பு 7 இல் அமைந்துள்ள (விஹாரமாதேவி பூங்காவுக்குப் பின்புறம்) கலாபவனத்தில் இயங்கும் இலங்கை கலைக்கழகத்தின் புதிய செயலகத்தில் ஒப் படைக்குமாறு தலைவர் சாள்ஸ் தயானந்த வேண்டுகோள் விடுத்துள்ளார். இக்குழு வினர் 5 ஆம் திகதி கொழும்பு திரும்புவர்.

# திரைப்படத்துறையில் சிறந்த படைப்புகள் தமிழீழத்தில் உருவாகும் நிலை ஏற்படும்

## கலைஞர் சந்திப்பில் கருத்து

''யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் தமி ழீழத்திரைப்படங்கள், நாடகங்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. இதற்குக்காரணம் அங் குள்ள கலைஞர்களின் பங்களிப்பு. ஒவ் வொரு பிரதேசத்துக்கும் தனித்துவமான பண்புகள் இருக்கின்றன. அந்தப்பிரதேச கலைஞர்களினால் தான் அப்பகுதி தனித்து வங்களை உயிரோட்டமாக எடுத்துக்காட்ட முடியும்.''

இவ்வாறு தமிழீழத்திரைப்பட இயக்குனர் கேசவராஜன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டக் கலைஞர் கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகி யோரை சேனையூர் மத்தியக்கல்லூரியில் அண்மையில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கருத்து தெரிவிக்கை யில்:-

''இங்கு திறமையான கலைஞர்கள் இலை மறைகாயாக இருக்கின்றார்கள், அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுப்பதற்கு இப்போது தான்வாய்ப்பு ஏற்பட்டிருக்கின் றது. அதற்கு கலைஞர்களாகிய நீங்கள் தான் முன்வரவேண்டும்.

''இன்று சர்வதேசரீதியாக திரைப்படத் துறையிலும் நாம் வளர்ச்சி அடைந்து இருக் கின்றோம். தமிழீழத்தில் இருந்து சிறப்பான படைப்புக்கள் வெளிவந்து கொண்டிருக் கின்றன. தரமான சினிமா தமிழீழத்தில் இருந்துதான் இனி உருவாகும் என ஆய் வாளர்கள், விமர்சகர்கள் எதிர்வு கூறுகின் றார்கள். இந்தளவுக்கு தமிழீழத்திரைப்படத் துறைவளர்ச்சி அடைந்து இருக்கின்றது.

''கடந்த இருபது வருடங்களாக இத்துறை யில் ஈடுபட்டுவருகின்றேன். இதுவரை எங்களுடைய படைப்புக்கள் ஒன்று கூடத் தோல்வியடையவில்லை. 'அம்மா நலமா' என்ற திரைப்படம் சர்வதேசரீதியில் பாராட் டைப்பெற்றுள்ளது.

''எமது படங்கள் விற்கப்படவேண்டும் என்பதற்காக தயாரிக்கப்படவில்லை. உண் மைச்சம்பவங்கள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்பதற்காகவே உணர்வு பூர்வ மாக தயாரிக்கின்றோம்'' எனவும் எவர் தெரி வித்தார்.

மேற்படி சந்திப்பில் புலிகளின் குரல் வானொலியின் கதாசிரியர்களில் ஒருவரான சிவராசா மற்றும் மூதூர் கோட்டவிடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தங்கன், மாவட்ட நிதர்சனப் பொறுப்பாளர் தவா ஆகி யோரும் கலந்துகொ... (...226)

# ஹட்டனில் நாடகக் கருத்தரங்கு

ஹட்டனில் நாடகக் கருத்தரங்கு ஒன்று வெகுவிரைவில் நடக்கவிருக்கின் றது. இதற்கான ஏற்பாடுகளை மலையக தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், சுனேத்திரா பண்டாரநாயக மன்றத்தின் அனுசரணையுடன் இருநாள் கருத்தரங் காக நடத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. நாடகத்துறையில் ஆர்வம் உள்ளவர்கள் இதில் பங்கு கொள்ளலாம்.

பங்கு கொள்ள விரும்புவோர் செயலா ளர், இந்து மா மன்றம், 186 பிரதான வீதி, மஸ்கெலியா என்ற முகவரிக்குவிண்ணப் பங்களை அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களைப்பெற விரும்பு வோர் செயலாளர், மலையகத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், 212.வெஞ் சர் கிராமம், நோர்வூட் என்ற விலாசத் துடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (223)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் மிகப் பெரியவை

01. மிகப் பெரிய தீவு - கிரீன்லாந்து
02. மிகப் பெரிய சுவர் - சீனச் சுவர்
03. மிகப் பெரிய பாலைவனம் - சகாரா பாலைவனம்
04. மிகப் பெரிய தேவாலயம் - சென்.பீற்றர்த் தேவாலயம்
05. மிகப் பெரிய சமுத்திரம் - பசுபிக் சமுத்திரம்
06. மிகப் பெரிய நீர்வீழ்ச்சி - நயாகரா
07. மிகப் பெரிய பறவை - தீக்கோழி
08. மிகப் பெரிய இராஜ்யம் - ரஷ்ய இராஜ்யம்
09. மிகப் பெரிய குகை - யப்பான் டனான் குகை
10. மிகப் பெரிய சிலை - சுதந்திரச் சிலை


ஜெ.நிஸானா
தரம் 10
தி/அல்ஹிதாயா ம.வி.மூதூர்.

# அறியுங்கள் தெரியுங்கள்


* மனிதனுடைய உயர வளர்ச்சி 22 வயதோடு நின்று விடுகிறது.
* பறக்க முடியாத பறவை வகையைச் சேர்ந்தது [illegible]ருப்புக் கோழி.
* நமது உடலில் 230 மூட்டு இணைப்புகள் உள[illegible].
* எலியின் ஆயுட்காலம் 6 ஆண்டுகள்.
* நாள் தோறும் நம் கண்களில் இருந்து 13 சொட்[illegible]ண்ணீர் சுரக்கிறது.
* புல் வகையைச் சார்ந்த மிகப் பெரிய முட்செடி மூ[illegible]ில்.
* நிமோனியா என்று நோயினால் நுரையீரல் பாதிக்[illegible]படுகிறது.
* மனித உடலில் மிகப் பெரிய சுரப்பி மண்ணீரல்.
* தலை மட்டும் பெரிதாக உள்ள பிராணி எறும்பு.
* தெரு விளக்கில் படித்து விஞ்ஞானி ஆனவர் எடிசன்.

ந.கஜந்தி, தரம் 8,
மு/விசுவமடு மகா வித்தியாலயம்.

# சிறார்களின் கைவண்ணம்




# படம் சொல்லும் பழமொழி




அன்பான தம்பி, தங்கைகளே, மேலே உள்ள படங்கள் ஏதோ ஒரு பழமொழியை நினைவூட்டுகின்றன.

அவை என்ன பழமொழி என்று கண்டுபிடித்து விடையை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடை எழுதும் 5 பேரின் பெயர் விவரம் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரமாகும். கடந்த 23 ஆம்திகதி சுடர் ஒளியில் உள்ள பழமொழிகளுக்கு சரியான விடை எழுதி அனுப்பியவர்களது பெயர் விபரம் வருமாறு:

1. ந.சுமி, யாழ். இந்து மகளிர் கல்லூரி. 2. ச.சபேசன், தரம்6 . மல்லாவி அ.மி.த.க.பாடசாலை. 3.வி.சுதன், தரம் 9, வவுனியா தமிழ் மத்திய ம.வித். 4. க. சுஜேந்திரன், திருகோணமலை. 5. வ.றினோஷா, கொழும்பு இந்து கல்.

அனுப்பவேண்டிய முகவரி:

*'படங்கள் சொல்லும் பழமொழி', சுடர் ஒளி வாரமலர்,*
*85, ஜயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14*

# மகானின் தேர்வு

கொளஞ்சி நாட்டு மன்னரது ஆலோசகர் திடீரென்று இறந்து போனார். அவனுக்கு இணையான ஒரு புத்திசாலியை அரசியல் ஆலோசகராக அடைவது எப்படி? என்று மன்னர் குழம்பினார். அப்போது அரச சபைக்கு மகான் ஒருவர் வந்தார். மன்னர் அவரை வணங்கி வரவேற்றார்.



''சுவாமி! என் இரு குமாரர்களில் அரசியலுக்கு ஏற்ற குமாரன் யார் என்பதை தாங்கள் எனக்கு அடையாளம் காட்ட வேண்டும்!'' என்று வேண்டினார்.

'முயன்று பார்க்கிறேன்' என்ற மகான், இரு இளவரசர்களையும் பார்த்து, ''குழந்தைகளே! என்னுடைய கமண்டலத்தில் பாதி நீர் இருக்கிறது. இதை உங்கள் பாஷையில் விளக்குங்கள்'' என்றார்.

மூத்த இளவரசன் ''உங்கள் கமண்டலத்தில் பாதி காலியாகி இருக்கிறது'' என்றான்.

மகான் இளைய இளவரசனை நோக்கி ''இனி நீர் சொல்!'' என்றார்.

'உங்கள் கமண்டலத்தில் பாதி நீர் நிறைந்து இருக்கிறது' என்றான்இளவரசன்.

இவருடைய பேச்சையும் கேட்டுப் புன்னகை செய்தார் மகான்.

''மனநிலைக்குத் தக்கபடியே பார்வை அமைகிறது. அதே போல உன்னுடைய மூத்த மகன், 'கமண்டலத்தில் பாதி காலி' என்றான். அதனால் அவன் அறிவு காலியாக இருக்கிறது. அவன் இல்லாததை மட்டுமே நினைக்கக் கூடியவன்.

உன்னுடைய இரண்டாவது மகன், 'கமண்டலத்தில் பாதிநீர் நிறைந்து இருக்கிறது' என்றான். அவன் அறிவு' குறையைப் பார்க்காமல் நிறைவைமட்டுமேபார்க்கிறது. அதனால் அவன் மனம் பண்பட்டுஇருக்கிறது. ஆகவே, பண்படாதவன் அரசியலுக்கு தகுதியானவனாஅல்லதுபண்பட்டவன் அரசியலுக்குத் தகுதியானவனா?'' என்பதை நீர் தான் முடிவு செய்ய வேண்டும். என்றார் மகான்.

''சுவாமி! மனதால் பண்பட்ட என் இரண்டாவது மகனே எனக்கு அரசியல் ஆலோசகனாக இருக்கத் தகுதியானவன். அதுமட்டும் அல்ல; நாட்டை ஆளும்தகுதியும் அவனுக்குத்தான் இருக்கிறது. எனக்குத் தகுந்த நேரத்தில் சரியான அறிவுரையைக் கூறிய உங்களுக்கு மிக்க நன்றி'' என்றார் மன்னர்.

மன்னரை வாழ்த்தி விடை பெற்றுக் கொண்டார் மகான்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையில் தொல்லையா?

இளம் வயதில் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பவர்கள் கூட, முதுமைப் பருவம் வந்தவுடன் சோர்ந்துபோய்விடுவதை நாம் பார்த்திருக்கிறோம். இவர்கள் இவ்வாறு



தொடர்ந்து பருமனாக இருப்பதால் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

மூட்டுவலி, முழங்கால்வலி, இடுப்புவலி, முதுகு வலி போன்றவை அதிகமாக வரும். குடல் இறக்கம், கால்களில் அசுத்த இரத்தம் தேங்கியநிலையில்இரத்தக்குழாய்கள்சுருண்டு பெரிதாவது, சிறிது தூரம் நடந்தாலும் மூச்சு இரைப்பு,அடிக்கடி நெஞ்சுச்சளி,சர்க்கரை நோய், இரத்தக்கொழுப்பு அதிகரித்தல், பித்தப்பைக் கல், மிகை இரத்த அழுத்தம் போன்ற தொல்லைகள் உண்டாகும்.

இவர்கள் தங்களுக்கு ஏற்படும் தொல்லைகளிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள, ஒரேமாதிரியான உணவுப் பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். வேகமாக சாப்பிடுவதைத் தவிர்த்து, நிதானமாக மென்று சாப்பிட வேண்டும். மற்றவர்களுக்காக உண்பது, மற்றவர்கள் மீதம் வைப்பதை உண்பது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.மனச் சோர்வு,படபடப்பு,தனிமை,தோல்வி மனப்பான்மை ஆகியவற்றைத் தவிர்ப்பதற்காகவே பலர் உண்கிறார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. மனதுக்குஇதமான நிகழ்ச்சிகளில் இவர்கள் கலந்துகொள்வது அவசியமானது.

சரியான எடையைக் கண்டறிந்து வைத்துக்கொண்டு,எடையைச் சீராக வைத்துக் கொள்ள நடப்பது, மெல்லோட்டம் போன்ற பயிற்சிகளில் ஈடுபடலாம்.

சர்க்கரை வியாதி வந்து உடல் பருத்துக் காணப்படுவதும் உண்டு.இத்தகையோர் தெய்வீக மூலிகைகளை சாப்பிட்டு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளலாம். முதியவர்கள் உடல் இளைப்பதற்கும், அதே சமயம் ஊட்டச்சத்துக் குறையாமல் இருப்பதற்கும் பல்வேறு இயற்கை உணவு முறைகள் உள்ளன. அவற்றைப் பின்பற்றி நடக்கலாம்.

## இவ்வார பொன்மொழி

உனக்கு ஒரு கஷ்டம் நேருமானால் அதை இறைவனிடமிருந்து கிடைத்த வரமாகவே கருது. அது வரமாகவே மாறும்.




## டிப்ஸ்

பற்களில் படிந்துள்ள பக்றீறியாக்களை அகற்ற இயற்கை உணவு சிறந்தது.

பழுக்காத கொய்யா, கரட், வெள்ளரிக்காய், தேங்காய் போன்ற இயற்கை உணவுப் பொருட்களை சாப்பிட்டு வந்தால் உமிழ்நீர் அதிகளவில் சுரக்கும். இதனால் மஞ்சள், பழுப்பு நிறமாகப் படிந்துள்ள பக்றீறியாக் களையும், பற்களின் நிறத்தையும் சுத்தப் படுத்தி வெண்மை நிறப் பற்களாக மின்னச் செய்கிறது.தேங்காயை நன்றாக மென்று சாப்பிட்டு வந்தால் பற்களின் வெண்மை மாறாமலும், நோய் ஏற்படாமலும் இருக்கும்.

முழு நெல்லிக்காயைத் துருவி சிறிது நெய் விட்டு வதக்கி ஆறியதும் தேனில் ஊற வைத்துவிடுங்கள். பின்பு இதனை தினமும் வெறும் வயிற்றில் ஒரு கரண்டி சாப்பிட்டால் உடலுக்கு நல்லது.

# பால் குடிக்கும் குழந்தையா?

பால் புகட்டிக்கொண்டிருக்கும்போதே, போதிய பால் அருந்தாமலேயே சில குழந்தைகள் உறங்கத் தொடங்கிவிடும்.

அப்படிப்பட்ட வேளைகளில் குழந்தை உறங்காமல் இருந்திடவும், போதிய அளவுக்கு குழந்தை பால் அருந்த வேண்டும் என்பதற்காகவும் குழந்தை பால் சுவைத்திடுகையில், அவ்வப்போது குழந்தையின் குதிக்காலை வருடிக்கொடுத்து, உறங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

குழந்தை வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் அடிக்கடி பால் தேவைப்படும். சில வேளை மூன்று மணிக்கொரு தடவை கூட பால் புகட்ட வேண்டி ஏற்படும்.



சற்றே வளரத் தொடங்கிய குழந்தைக்கு பால் கொடுக்கும் இடைவெளி நீடித்துப்போகும். அந்தப் பால் கொடுக்கும் இடைவெளியானது நான்கு மணி முதல் ஆறு மணி வரை கூட அமையலாம்.

ஆனால் வளர்ச்சிக்கேற்ப பாலின் அளவைக் கூட்டிக் கொடுத்து வர வேண்டும்.

குழந்தைக்குத் தேவையான தண்ணீர் பாலில் இயற்கையாகவே இருப்பதால், கூடுதலாகத் தண்ணீர் தேவை இல்லை என்றாலும் கூடுதலான தண்ணீரும் அவசியமான ஒன்று தான். ஏனெனில் பல்வேறுபட்ட சுவைகளையும் குழந்தை அறிந்து வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் பாலைத்தவிர பிற உணவு வகைகளை நாடாமல் தட்டிவிடும் வாய்ப்புகள் பெருகிவிடும்.

குழந்தை அழும்போதெல்லாம் பால் மட்டும்தான் கொடுக்க வேண்டுமென்பதில்லை. பால் புகட்டும் வேளைகள் தவிர இடைப்பட்ட நேரங்களில், கொதிக்க வைத்து ஆறிய சற்றே வெதுவெதுப்பான தூய்மையான வெந்நீருடன், பாலாடை கொண்டு கொடுத்துவரலாம்.

வெப்பம் நிறைந்த சூழலில் வாழ்கிற குழந்தைகளின் உடல் நலத்துக்கு தண்ணீரும் கலந்து இன்றியமையாததாகும்.

குளிர் பகுதிகளில் வளர்க்கப்படும் குழந்தைகளுக்குக் கூடுதலான தண்ணீர் தேவைப்படாது. மேலும் சீரான செரிமானத்துக்கும், தண்ணீர் பெரிதும் உதவுகிறது.

பால் மட்டுமன்றி, தண்ணீரையும் கூடுதலாக எடுத்துக்கொள்ளும் குழந்தைகளுக்கு மலச்சிக்கல் பிரச்சினைகள் பெரும்பாலும் ஏற்படுவதில்லை.

# பெண்ணுக்கு எது அழகு?

சில பெண்களுக்கு முதுகு அகலமாக இருக்கும். இது பொதுவாக பெண்களின் அழகையே கெடுத்துவிடும். எனவே முதுகு அகலமாக இருக்கும் பெண்கள் தினசரி அதிக தூரம் நடந்து பழகி வந்தால் முதுகு அகலம் குறைந்து அழகாகி விடும்.

ஊளைச்சதை, அழகான நிறம் படைத்த பெண்ணையும் அழகு குறைந்தவளாகக் காட்டும். அப்படிப்பட்ட பெண்கள் தொடர்ந்து பப்பாளிப்பழம் சாப்பிட்டு வந்தால் ஊளைச் சதை குறைந்து அழகாகக் காணப்படுவார்கள்.

நடக்கும்பொழுது உடம்பு குலுங்கக் கூடாது. தவழ்ந்து செல்வது போன்று இருக்க வேண்டும். இடை மட்டும் கவர்ச்சியாக அசைய வேண்டும்.

உறங்கும்பொழுது கூட பெண் அழகாகக் காணப்பட வேண்டும். வாய், உதடு திறந்திருக்காமல், ஆடை விலகாமல் படுப்பதும் அழகைத்தரும் ஓர் அம்சமாகும்.

இரவில் நெடுநேரம் விழித்துக்கொண்டு புத்தகங்களைப் படிக்கக் கூடாது. இரவில் உறக்கம் கெடுவது கண்களுக்கு அடியில் கறுப்பு நிறத்தைக்கொடுத்துவிடும். கண்கள் குழிவிழுந்தது போலாகிவிடும்.

மலிவான பிரஷ்களை உபயோகித்து கூந்தலை ஒழுங்குபடுத்தக்கூடாது. அதனால் கூந்தல் முரட்டுத்தனமாகிவிடும். மறுபடியும் கூந்தலை மென்மையாக்குவது சிரமம்.

கூந்தலை சுருளாக்க மின்சக்தியை உபயோகப்படுத்துவது, முடிக்கால்களை பலவீனம் அடையச் செய்து முடி உதிர்தல், வழுக்கை விழுதல் போன்ற குறைபாடுகளை ஏற்படுத்திவிடும்.

# சமையல் குறிப்பு

## உருளைக்கிழங்கு முறுக்கு

| | |
|---|---|
| வேக வைத்த உருளைக்கிழங்கு | 1/2 கிலோ |
| கடலை மா | 300கிராம். |
| சீரகம் | 1 தேக்கரண்டி |
| வெண்ணெய் | 2 மேசைக்கரண்டி |
| உப்பு | தேவையான அளவு |
| மிளகாய்த்தூள் | 2 மேசைக்கரண்டி |
| எண்ணெய் | தேவையான அளவு |




### செய்முறை

அடுப்பில் உள்ள பாத்திரத்தில் ஒரு துணியைக் கட்டி அதில் கடலை மாவைப்போட்டு அவியவிட்டு உதிர்த்து எடுத்துக்கொள்ளுங்கள். வேக வைத்த உருளைக்கிழங்கோடு, மாவையும் சேர்த்துப்பிசைந்து அத்துடன் சீரகம், உப்பு, மிளகாய்த்தூள், வெண்ணெய் சேர்த்துக் கலந்து வைக்கவும். கலந்து வைத்த மாவை முறுக்குக் குழாயில் இட்டுப்பிழியவும். எண்ணெயில் பொன்னிறமாகப் பொரித்தெடுத்து பரிமாறி நீங்களும் சுவைத்து மகிழுங்கள்.


# தையல் இயந்திரத்தை பாதுகாப்பது எப்படி?

நாம் எமது உடலை எவ்வாறு பேணுகிறோமோ, அதே போன்று தான் நாம் பாவிக்கும் ஒவ்வொரு பொருளையும் பாதுகாப்பது அவசியம். அந்த வகையில் தையல் இயந்திரத்தை நாம் எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றி இன்று பார்ப்போம்.

எண்ணெய் விட்டு சுத்தம் செய்து முறைப்படி தையல் இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் தையல் இயந்திரத்தின் பாகங்களை விரைவில் தேய்மானம் இல்லாமல் நீண்ட காலம் பாவிக்கலாம்.

தையல் இயந்திரத்தில் காற்றுள்ள தூசிகள், ஈரக்காற்று ஆகியவை படியாமலிருக்க மரத்தினால் ஆன பெட்டி அல்லது துணியினால் மூடி வைக்க வேண்டும்.

இயந்திரத்தில் எண்ணெய் விட்டவுடன் சிறிது நேரம் அதனை இயக்கிப் பார்த்து அதிகப்படியான எண்ணெயைத் துடைக்க வேண்டும்.



இயந்திரத்தைப் பாவிக்காத சமயத்திலும் எண்ணெய் விட வேண்டும்.

இயந்திரத்தை சமனான தரையில் வைக்க வேண்டும். இதனால் இயந்திரம் ஆடாமல் இருப்பதுடன், ஒழுங்காகத் தைக்க முடியும். மேலும் இயந்திர பாகங்கள் அதிர்ச்சி அடையாமல் இருக்கும்.

அனுபவம் இல்லாதவர்களை இயந்திரத்தில் கை வைக்க அனுமதிக்கக் கூடாது.

ஆண்டுக்கொருமுறை இயந்திரம் முழுவதையும் மறுபராமரிப்புச் செய்ய வேண்டும். அதாவது எல்லாப் பாகங்களையும் கழற்றி மண்ணெண்ணெய் வைத்து நன்றாகச் சுத்தம் செய்து பொருத்தினால், இயந்திரம் நன்றாகத் தைப்பதுடன் நீண்ட நாள் உழைக்கும்.

இயந்திரத்தில் தைக்காத சமயத்தில் ஊசியைக்கழற்றி விட வேண்டும்.

ஈரத்துணியைக்கொண்டோ அல்லது ஈரக்கையைக்கொண்டோ இயந்திரத்தைத் துடைக்கக் கூடாது. அவ்வாறு செய்தால் இயந்திரப் பாகங்கள் துருப்பிடிப்பதுடன் பல கைப் பாகம் ஊறிவிடும்.

எண்ணெய் விடும்போது ஊசியை நீடில் பிளேட்டின் துவாரத்தில் இறக்கி வைத்து எண்ணெய் விட வேண்டும். அப்படிச் செய்யும் போது தான் எல்லா இடங்களிலும்படியும்.

தையல் இயந்திரத்தில் ஏற்படும் குறைகளையும், அதன் நிவர்த்தியையும் அறிந்திருந்தால் தான், நாம் செய்யும் வேலையானது சுத்தமாகவும், ஒழுங்காகவும் இருப்பதுடன், இயந்திரமும் நீண்ட நாள் உழைக்கும்.

# சாப்பிட்ட பின் பழம் சாப்பிடலாமா?

பொதுவாக நாம் சாப்பிட்ட பின்பு பழம் சாப்பிடுவது வழமையான ஒன்று. ஆனால், இவ்வாறு சாப்பிட்ட பின்பு பழம் சாப்பிடலாமா என்பது பற்றி இப்போது பார்ப்போம்.

வாழைப்பழத்தை எப்போதும் நாம் உணவு சாப்பிடுவதற்கு முன்பே சாப்பிட வேண்டும். வாழைப்பழத்திலுள்ள தாது உப்புகளும், விட்டமின்களும் அப்போது தான் எமது உடலில் எளிதில் சேரும்.

இதற்கு மாறாகச் சாப்பிட்ட பின்பு பழம் சாப்பிட்டால் அந்தச் சத்துக்கள் சாப்பாடு ஜீரணமாகும்போது அதனுடன் இணைந்து வெளியேறிவிடும்.

அப்பிள், திராட்சை போன்றவற்றையும் வெறும் வயிற்றில் சாப்பிடுவதே சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் கண்ணோட்டம்



இரா. புத்திரசிகாமணி

# மலையக வளங்கள் சூறை அதிகாரிகள் அசட்டை

காலம் காலமாக விவசாயம் செய்தும், கால்நடைகளை வளர்த்தும் வாழ்க்கை நடத்திய பல ஆயிரம் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கே ஆபத்தாகிவிட்டது.

மஸ்கெலியா நகருக்கு தெற்கே அமைந்திருப்பது வன்னியன் தோட்டமும், நொந்தெல்ல தோட்டமும். இவ்விரு தோட்டங்களும் நீர் தேக்கத்திற்கு உட்பட்டவை.

நீர் தேக்கத்திற்கு அண்மித்துள்ள கரை ஓரக்காணிகள் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமானவை. (Reservation Land) என அழைக்கப்படும் சுமார் முப்பது ஏக்கர் காணியில் இத்தோட்டத் தொழிலாளர்கள் விவசாயம் செய்தும் கால் நடைகளுக்கான புல்லு வகைகளைப்பயிரிட்டும் வருமானம் பெற்றுவந்தனர்.

பெருந்தோட்டங்களில் ஏற்பட்டுள்ள வேலை நாட்கள் குறைப்பினால் பாதிக்கப்பட்ட இத்தோட்ட மக்கள் இவற்றின் மூலம் வாழ்க்கைச் சுமையை ஓரளவு சமாளிக்கக் கூடியதாக இருந்தது.

நீர்த்தேக்கத்தை சுற்றிவர 30 மீற்றர் அகலம் 15 கிலோமீற்றர் நீளமுமான இக்காணியில் 150க்கு மேற்பட்ட குடும்பங்கள் அன்றாட ஜீவனம் நடத்தினர்.

ஆனால், மேற்குறிப்பிட்ட வன்னியன், நோந்தெல்லா ஆகிய இரு தோட்டங்களின் உரிமையாளர்கள் இக்காணிகளைப் பலத்காரமாகக் கைப்பற்றி தேயிலைக் கன்றுகளை நட்டுவிட்டனர்.

அங்கு விவசாயம் செய்து வந்தவர்களைப் பலவந்தமாக வெளியேற்றிவிட்டனர். இது தொடர்பாக பொலிஸாருக்கும், மின்சாரசபைக்கும் பல முறைப்பாடுகள் செய்தும் எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை.

தொடர்ச்சியாக வேலை நிறுத்தப்போராட்டம் நடத்தியும் பட்டினி கிடந்ததுதான் மிச்சம் என்றாகிவிட்டது. வறுமையின் காரணமாக தமது கால்நடைகளை அடிமாட்டு விலைக்கு விற்றுவிட்டனர்.

அரச காணிகளையும், அரசுக்குச் சொந்தமான கட்டடங்களையும் தனியார் துறையினர் அபகரித்துக்கொள்வதும், சட்டவிரோதமான கட்டடங்களை அமைத்து வருமானம் தேடிக்கொள்வதும் சர்வசாதாரணமாகிவிட்டது. ஆனால், சம்பந்தப்பட்ட அமைச்சுகளோ திணைக்களங்களோ கண்டும் காணாமல் இருப்பது தான் வேதனை.

இவர்கள் எக்கேடு கெட்டாவது போகட்டும் அனால், உழைக்கும் தொழிலாளர்களின் வயிற்றில் அல்லவா அடிக்க ஆரம்பித்துவிட்டனர். அது தான் இன்று பெரும் பிரச்சினையாகிவிட்டது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரசியல் பிரமுகர்களும் தோட்ட முதலாளிமாரும் சந்தோஷம் வாங்கிக் கொண்டு தொழிலாளர்களை சங்கடத்தில் மாட்டிவிட்டதாகத் தோட்டத் தொழிலாளர்கள் சீற்றம் கொண்டுள்ளனர். அதே வேளை ஒரு சாதாரண தொழிலாளி கொட்டில் அமைத்துக்கொண்டு விவசாயம் செய்தபோது பொலிஸாரைக் கொண்டு அடித்து விரட்டினர். தொழிற்சங்கவாதிகளும் கண்டும் காணாதது போல் இருக்கின்றனர்.

முன்னாள் அமைச்சர்கள் காணி மோசடிகளில் ஈடுபட்டனர் என்று குற்றம் சாட்டிக் கொண்டிருக்கும், இன்றைய அரசாங்கம் கூட இப்படி அரச காணிகள் செல்வாக்குள்ளவர்களால் பகல் கொள்ளை அடிக்கப்படும் போது அமைதியாக இருப்பது ஏன்? அவர்கள் அரசின் ஆதரவாளர் என்பதாலா?

இதோடு நின்றுவிடவில்லை. மஸ்கெலியா பழைய நகரில், தபால் நிலையம், தபாலதிபர் விடுதி, ஆஸ்பத்திரிக்கு சொந்தமான விடுதிகள், பொது வேலைப்பகுதிக்கு சொந்தமான கட்டடங்கள் தனியார்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட திணைக்கள அதிகாரிகள் ஆக்கிரமிப்பாளர்களிடம் அடிமைப்பட்டு விட்டனர்.

இந்தக் கட்டிடங்களை எல்லாம் மீண்டும் அரசு பொறுப்பேற்க வேண்டும். அவற்றை பொது மக்களுக்குத் தேவையான பொதுப் பணிகளுக்கு உபயோகப்படுத்த முடியும்.

மேலும் மஸ்கெலியா தோட்டத்தில் ஆடைத் தொழிற்சாலை நிரந்தரமாக செயல்படுவதில்லை. பத்து தடவைகள் மூடப்பட்டு, பத்துதடவைகள் திறக்கப்பட்டுள்ளது. இதனால் இங்கு பணியாற்றிய பல நூறு தோட்டப்புற இளைஞர், யுவதிகள் இரண்டும் கெட்டான் நிலையில் தள்ளாடுகின்றனர். நிரந்தர தொழில் இல்லை.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வரும் பல்லின மதத்தவர்களும் ஒன்றாக வழிபடும் சிவனொளி பாத மலையின் அடிவாரமான மஸ்கெலியா நகரிலேயே இத்தனை அக்கிரமங்களும் இடம்பெறுகின்றன.

தேர்தல் காலங்களில் மட்டும் வந்து வாக்கு வேட்டையாட வரும் தொழிற்சங்கவாதிகளும், அரசியல் வாதிகளும் இப்பிரதேச மக்களின் அவலம் போக்க முன் வர வேண்டும். வருவார்களா?

**டி.கே.பெருமாள்.,**

## சொல்லாதே இது இரகசியம்!

இரண்டாவது ராஜசிங்கனின் இராஜதானியாக விளங்கிய மலையகத்தின் தலைநகர் எனக்கூறப்படும் நகருக்கு அருகில் பாடசாலைகளை உருவாக்கும் கல்விக் கூடத்தைக் கடந்து செல்லும் வழியில் இருக்கின்றதாம் இந்த தமிழ், முஸ்லிம் கலவன் பாடசாலை.

அங்கு தாய்க்குலம் ஒன்றே தலைவராம். இந்தத் தாய்க்குலம் எல்லோரையும் தன் குடும்பத்தவர்கள் போல் பாவிப்பாராம். குறிப்பாக உயர் வகுப்பு மாணவர்களை மிகவும் அன்பாக நேசிப்பாராம். இதனால் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என நல்ல மரியாதையாம்.

இந்த தாய்க்குலத்தின் பதி வெளி மாவட்டத்தில் வேலை செய்பவராம். மாதம் இரண்டு முறை தான் வீட்டுக்கு வருவாராம்.

இதனால் மாணவமணிகள் தாய்க்குலத்துக்கு காவலாக இருப்பார்களாம்.

சிறிதும் எதிர்பாராத வேளையில் பதி ஒருநாள் திடீரெனவந்து விட்டதாம். நள்ளிரவில் ஏன் தொல்லை கொடுக்க வேண்டும் என்று தன்னிடம் இருந்த மாற்று சாவியைக் கொண்டு திறந்து உள்ளே வந்தாராம்.

அங்கே அவருக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்ததாம். பதியின் இடத்தில் பள்ளி மாணவன் அமைதியாக நித்திரை கொண்ட காட்சி பதியை நிலை தடுமாற வைத்ததாம்.

அன்று சென்றபதி பல மாதங்களாகியும் மீண்டும் வரவில்லையாம். தாய்க்குலமோ மாணவ மணியைப் பாதுகாப்பிற்காக தொடர்ந்தும் வைத்துக்கொண்டாராம்.

ஆனால் அண்மையில் பதியிடம் இருந்து வந்த டைவர்ஸ் நோட்டீஸ் இந்தக் கூற்றை அம்பலப்படுத்தி விட்டதாம். என்னே இந்த தாய்மை உணர்வு.



## டேஸ்ட்கடை தணிகாசலம்

தணிகாசலம் அண்ணன் மஸ்கெலியா நகரில் உள்ள அம்மன் கோவிலில் விஷேச பூஜையில் கலந்துகொண்டார். அப்போது லக்ஷபான தோட்டத் தலைவர்கள் ஐந்து பேரும் பூஜைத் தட்டுக்களுடன் வந்தனர்.

''நமஸ்காரம் அண்ணே!''

''நமஸ்காரம், எல்லோரும் நல்ல சுகமாக இருக்கின்றீர்களா?''

''கடவுள் புண்ணியத்தினாலும், உங்களுடைய ஆசீர்வாதத்தினாலும் நல்ல சுகமாக இருக்கின்றோம்.''

''ரொம்பச் சந்தோஷம். தோட்டத்தில் என்ன விஷேசமா ஐந்து தலைவர்மாரும் ஒட்டு மொத்தமா பூஜைத் தட்டுகளுடன் வந்து இருக்கிறீங்க''

''தோட்டத்தில் ஒன்றும் விஷேசம் இல்லைங்க அண்ணே! எங்க தலைவருக்கு நல்ல புத்தியைக் கொடு என்று சாமிக்கிட்ட வரம் கேட்டு பூஜை செய்யத்தான் வந்தோம்.''

''அப்படி என்ன உங்க தலைவர்மாருக்கு புத்தி கெட்டுப்போச்சி?''

''ஆமாங்க அண்ணே! நாங்கதான் பெரிய கட்சி; எங்களை மிஞ்ச யாரும் இல்லை, அப்படிங்கிற தலைக்கனம் அதிகமாப் போச்சி.''

''இது என்னங்க தலைவரே இன்னைக்கு, நேற்றா காலம் காலமாக தெரிஞ்ச சங்கதி தானே.''

''ஆனால், அது இப்ப முத்திப் போச்சிங்க அண்ணே! முந்தி தோட்டத்துரைமார்தான் தோட்டக்கமிட்டித் தலைவர்மாருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பாங்க. வேலைநிப்பாட்டு வாங்க......'' என்றனர் தலைவர்மார்.

இடைமறித்தார் தணி அண்ணன்.

''ஆமாம், ஆமாம். போனவாரம் எல்லாக் கட்சி ஆளுகளும் ஒன்னாச் சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனை நடத்தினீர்களே! அதுக்காக நிர்வாகம் உங்களுக்கு வேலை நிப்பாட்டிப் புடுச்சா?''

''அண்ணே! அப்படி தோட்ட நிர்வாகம் வேலை நிப்பாட்டி இருந்தா சந்தோஷப்பட்டிருப்போம். நம்ப போராட்டம் நிர்வாகத்தை ஆட்டம் காண வச்சிரிச்சி என்று பெருமைப்படுவோமே.''

''அப்படீன்னா வேறு என்ன பிரச்சினை ஏற்பட்டுப் போச்சு?''

''அங்கதாங்க அண்ணே உதைக்குது. தோட்டத்துரைமாருக்கு வலிக்காத வலி எங்க தலைவருக்கும் எம்பிக்கும் இல்லையா வந்திருக்கு''

''என்ன தம்பி புதுக்கதை சொல்லுறீங்க?''

''ஆமாங்க அண்ணே! இந்தப் பகுதியில்நாங்க எல்லாரும் சங்க வேறுபாடுகள்இல்லாமல் ஒன்னாச்சேர்ந்து கூட்டு ஒப்பந்தம் செய்யனும். ஒருத்தரை ஒருத்தர் காட்டிக் கொடுக்காமல் தொழிலாளர்களின் நன்மைக்காகவாவது ஒன்றுபட்டு தோட்டத் துரைமாருடன் மேலும் கருத்து வேறுபாடு இல்லாமல் எல்லாரும் ஏற்றுக்கொள்கிற மாதிரி ஒரே ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்றுதானே பிரார்த்தனையில் ஈடுபட்டோம்.''

''ஆமாம், ஆமாம் இது நல்ல விசயம் தானே! கொட்டக்கலையில் கூட எல்லாத் தோட்ட ஆட்களும் கட்சி, சங்கவேறுபாடுகளை மறந்து ஒத்துமையா இப்படி ஒரு போராட்டம் நடத்தினாங்களே.''

''உண்மை தாங்க அண்ணே! அட மடத் தலைவர்களே நீங்க ஒன்றுபடாவிட்டாலும், நாங்க ஒற்றுமையா இருந்து உங்களுக்குப் பாடம் படிப்பிக்கின்றோம் எங்களைப் பார்த்தாவது நீங்க திருந்துங்க என்றுதானே போராட்டம் நடத்தினோம்.''

''அதில என்ன தம்பி தப்பு இருக்கு?''

''தப்பு ஒன்றுமே இல்லைங்க அண்ணே! ஆனால் இந்த பெரிய தலைவருக்கும் அவரோட பந்தக்காரர்களுக்கும் தான் குலை நடுக்கமாப் போச்சி. என்னடா இது நம் மலையும் மீறிப் புதுத் தலைமை ஒன்று உருவாகப் போகின்றதோ என்ற பீதியும் பயமும் வந்துரிச்சி.''



''அடடா இது நல்ல கதையா இருக்கே''

''ஆமாங்க அண்ணே! இந்த தலைவர் என்ன செஞ்சாரு தெரியுமா? டேய் நீங்க ஐந்து பேரும் எங்களைக் கேட்காமல் எப்படிப் போராட்டம் நடத்தமுடியும்; உங்க ஐந்து பேரையும் டிவிசன் தலைவர் பதவியில் இருந்து நீக்குகிறோம் — என்று ஆவேசமாக டிஸ்மிஸ் பண்ணிப்புட்டாங்க. தோட்டத்துரைமாருக்குக் கடிதம் அனுப்பிப்புட்டாங்க. அதாவது நானே ராஜா என் வாலே மந்திரி நீங்க எல்லாம் யாரு ஒற்றுமையைப்பற்றிப் பேச? என்று திமிர்புடிச்சிப் போச்சி.''

''அப்புறம் என்ன நடந்தது?''

''என்னங்க அண்ணே நடக்கும்? இந்த தலைவர் பதவி என்ன பெரிய கிரீடமா, அதைப் பறிச்சிட்டாங்க என்று கவலைப்பட. நாங்க தோட்டத்தில் வேலை செய்கிறோம், சம்பாதிக்கிறோம், எங்களோட சந்தாப் பணத்தில் சுதியா இருக்கிறவுங்க எங்களை எப்படி டிஸ்மிஸ் பண்ண முடியும்? இவங்க எங்ககிட்ட முட்டி ஏந்திப் பிச்சை எடுப்பவர்கள். நாங்கள் தானே இந்த தலைவர்மாருக்கே எஜமானர்கள். இவுங்க சங்கம் நடத்த எங்க சந்தா வேணும். மந்திரியா வர எங்க ஓட்டு வேணும். நாங்க இவுங்களைத் தேடிப் போகவேண்டிய அவசியமில்லை.'' என்று ஆவேசமாகப் பேசினர் தலைவர்மார்கள்.

''பொறுமையாக இருங்க. அதுக்கு அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்று யோசிங்க.''

''நாங்க எல்லாரும் ஒரு முடிவுக்கு வந்து விட்டோம். உழைக்கும் தொழிலாளர்களை ஒற்றுமையாக இருக்கக்கூடாது என்று கட்டளை இட்ட தலைவரை நாங்க டிஸ்மிஸ் செய்துவிட்டோம்.''

''ஒன்றும் புரியலியே?''

''ஒன்னா இருக்கும் தொழிலாளர்களுக்கு தலைமை தாங்கும் தகுதி காட்டிக்கொடுக்கும் எட்டப்பர்களுக்கு இல்லை. இனிமேல் நாங்கள் சுயமாக செயல்படப் போகிறோம். தொழிற்சங்க சந்தாவை நிப்பாட்டப்போகிறோம்.''

''சரியான முடிவுதான் எடுத்து இருக்கீங்க. இப்படியே மற்றத் தோட்டங்களிலும் செய்யவேண்டும். தலைவரோட தலைக்கனமும் திமிரும் தானாகவே அடங்கிப் போகும்.''

''ஆமாங்க அண்ணே. அது நாலதான் நாங்க இந்த எட்டப்பர்களுக்கு நல்ல புத்தியைக் கொடு என்று பூஜை செய்யவந்தோம்.''


அப்போது மேலும் பலர் கூட்டமாக பூஜைத் தட்டுகளுடன் வந்தனர். ''அது எல்லாம் யார் தம்பி.''

''அண்ணே இப்ப தானே சொன்னீங்க மற்ற தோட்டங்களிலும் இப்படி செய்யனும் என்று. அதுதான் தலைவர்மார் கூட்டம்.''

''அப்பாடி இனிமேலாவது மலையகத்திற்கு ஒரு விடிவு வரட்டும்.'' என்று விடை பெற்றார் தணி அண்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் கோரக் கொலைகள்...



ஈராக்கில் பணியாற்றி வரும் வெளி நாட்டவர்களை தீவிரவாதிகள் பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்று நிபந் தனைகள் விதிப்பதும், அவைகள் நிறை வேற்றப்படாதவிடத்து சிறைபிடிக்கப் பட்டவர்களை மிகக் கோரமாகப் படு கொலை செய்வதும் அன்றாட நிகழ்வாய் மாறிவிட்டன.

தென்கொரிய தொழில் அதிபர் ஒருவர் சிரைச்சேதம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பல வெளிநாட்டவர்கள் தீவிரவாதிக ளால் படுகொலை செய்யப்பட்டுவிட்ட னர்.

ஈராக்கில் கடந்த செவ்வாயன்று 12 நேபாள நாட்டவர்கள் ஒட்டு மொத்தமாகப் படுகொலை செய்யப்பட்டனர். மிக அதிக எண்ணிக்கையானவர்கள் தீவிரவாதிக ளால் கொலை செய்யப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

இந்த 12 நேபாள நாட்டவர்களில் ஒரு வர் கழுத்தறுக்கப்பட்டும், ஏனையவர்கள் தலைக்குப்பற படுக்க வைக்கப்பட்டு அவர்களின் தலையில் சுட்டும் படுகொலை செய்யப்பட்டனர்.

ஈராக்கில் இயங்கும் 'அன்ஸார் அல் – சுன்னா இராணுவம்' என்ற தீவிரவாத அமைப்பே இந்தக் கோரச் செயலைப் புரிந்துள்ளது.

இந்தப் படுகொலைகள் நேபாளத்தில் பெரும் பதற்ற நிலையைத் தோற்றுவித்துள் ளன. தலைநகர் காத்மண்டுவில் உள்ள முஸ்லிம்களின் ஜும்மா பள்ளிவாசல் அந்நாட்டவர்களால் தாக்கப்பட்டுள்ளது. இது நேபாளத்தில் முஸ்லிம்களுக்கும், ஏனைய பிரிவினருக்கும் இடையில் இன மோதல் நிலையைத் தோற்றுவிக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

''அமெரிக்கப்படைகளுக்கு உதவி புரிந்தவர்களையே தாம் படுகொலை செய்து வருகிறோம். இது இறைவன் அவர்களுக்கு வழங்கும் தண்டனை'' – என்று இந்தத் தீவிரவாத அமைப்பு தெரி விக்கிறது.

அத்தோடு உல கில் இஸ்லாத்திற்கு எதிரானவர்களையும் இப்பட்டியலில் தீவிர வாதிகள் இணைத் துக் கொண்டுள்ள னர்

இதன் ஒரு அம்ச மாக பிரான்ஸ் நாட்டு ஊடகவியலாளர்கள் இருவரைப் பிடித்துச் சென்றுள்ளனர். முஸ்லிம் மாணவி கள் பர்தா அணிவதற்கு பிரான்ஸ் அரசு விதித்த தடையை நீக்க வேண்டும் என்பதே இத்தீவிரவாத அமைப்பின் பிரதான நிபந் தனை. ஆனால், இந்நிபந்தனையை ஏற்க பிரான்ஸ் மறுத்துள்ளது. இதனால் சில வேளை, இந்த இரு ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்படுவார்கள் என்ற அச்சம் எழுந்துள்ளது.

நேபாள நாட்டவர் 12 பேரும் படு கொலை செய்யப்பட்ட வீடியோ காட்சி இஸ்லாமிய இணையத்தளத்தில் ஒளிபரப் பப்பட்டுள்ளது. அகோரமாகக் காட்சி யளிக்கும் இக்கொலைப்படங்கள் தீவிர வாதிகள் குறித்த உலக முஸ்லிம் மக்க ளின் நிலைப்பாட்டில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

– அஸ்ரியா –


EXPOAIR எக்ஸ்போ எயார்


your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...

யாழ் பயணத்தின் போது
றோள்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை
அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 0112372952/3 Fax: 011 2372954
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை

## வடப்குதி மக்களின் நலன் கருதி – முதன் முதலாக
## Frontier 355 இயந்திரம் தற்போது கிளிநொச்சியில்......






FUJIFILM

உலகின் டிஜிடல் புகைப்படத்துறையின் முன்னோடிகள்

இதோ அதற்கான காரணங்கள்...

பிலிம் ரோல் மூலம் அல்லது டிஜிடல் முறையில் எங்களது இந்தப்புதிய ப்ரொன்ரியர் டிஜிடல் மினிலெப் மூலம் உங்களுக்கு உங்கள் புகைப்படத்தை பிரின்ட் செய்து கொள்வதற்கு கீழ்க் கண்ட அதி நவீன சேவைகள் உங்களுக்குக் கிடைக்கும்.

- கூடிய அல்லது குறைந்த ஒளியில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை திருத்தியமைத்தல்.
- கறுப்பு /வெள்ளை புகைப்படங்களை தெளிவாக்குதல்.
- பின்னனி வெளிச்சத்தை சரி செய்தல்.
- சிகப்பு கண்கள் (ரெட் - ஐ) அகற்றுதல்.
- உயர் நிலையிலான தொழில் நுட்ப ரீதியான புகைப்படங்களை உருவாக்கல்.
- சரியான அளவில் புகைப்படங்களை வெட்டித் தயாரித்தல் (Cropping).
- கீறல், தூசு படிதலை அகற்றுதல்.

FUJIFILM IMAGE SERVICE

FUJIFILM DIGITAL IMAGING FDi

HAYLEYS Consumer

DIGITAL MINILAB Frontier 355

பொற்காலம் வண்ணக்கலையகம்

முதன்மைச்சாலை, கிளிநொச்சி. தொ.பே:- 021 228 5825


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 செப். 06 ஆம் திகதி வெளியிடப்பட்டது.